# வையம் போற்றும் வனிதையர்

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்
தமிழ் விரிவுரையாளர்
புதுக் கல்லூரி
சென்னை-14.

சி. சுப்பைய செட்டி & கம்பெனி
பப்ளிஷர் :: திருவல்லிக்கேணி
சென்னை-5
1954

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. 2

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதல் பதிப்பு 1954

Printed by R. Krishnasamy, at The Akhand Jyothi Press, Ltd.
94, Dr. Besant Road, Triplicane, Madras-5.

# முகவுரை

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் —சேக்கிழார்

தண்டமிழ்ப் புலவர்களுள் தெய்வப் புலவர் எனத் திகழப் பெறுபவர் இருவர். அவர்களே சேக்கிழார் பெருமானாரும் செந்நா போதாரும் ஆவர். அவர்கள் எய்திய பேறு எவரும் எய்திலர். புலவர்களையும் அவர்கள் பாத்த நூல்களையும் புகழ்ந்து கூறுவது தொன்று தொட்ட மரபு. அங்ஙனம் புகழ்ந்து கூறப் பட்ட பாடல்கள் தனியன்கள் எனப்படும். ஆனால், தனி நூல் வடிவில் பற்பல பாக்கள் பொருந்தப் பாடப் பட்ட பெருமை இவ்விரு பெரும் புலவர்களே பெற்ற வர் எனில், இவர்கள் மாண்பினை இயம்பவும் வேண் டுமோ? சேக்கிழார் பெருமானார் புகழினை உணர்த்தும் தனி நூல் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்பது. வள்ளுவர் இசையை இசைக்கும் தனி நூல் திருவள்ளுவ மாலை என்பது. சேக்கிழார் பெருமானாரைப் பற்றிய தனிப் புராணம் ஒன்று உண்டு என்பதையும் ஈண்டே நினைவு கூர்வோமாக.

இன்னோரன்ன சீரும் சிறப்பும் பேரும் புகழும் வாய்க்கப்பெற்ற சேக்கிழார் பெருமானார் பாடிய நூலே பெரிய புராணம் என்னும் பெருநூல் ஆகும். புராணம் என்றதும் பேதுறல் வேண்டா. ஈண்டுப் புராணம் என்றது தமிழ் நாட்டில் உண்மை வாழ்வு

நடாத்திய பெரியாரது பழைய வரலாற்றை உணர்த்தும் நூல் என்னும் பொருள் அமைந்த ஒன்ருகும்.

இந்நூல் காவியப் பண்பு க்விஞுறப் பெற்றது. அக்கண் கொண்டு காண்போர் ஒன்பான் சுவையை ஒருங்கே நுகரலாம். தமிழ்ச் சுவை விழைவோர் தாழ்வின்றிச் சுவைக்கலாம். கவிநலம் கருதுவோர் கண்டு களிக்கலாம். சீர்திருத்தக் கருத்துக்களைச் செம்மையுறக் காண அவாவுவோர்க்கும் இந்நூல் அருந்துணை புரியும் என்பதில் எள்ளளவும் ஐயம் இன்று. இக்காரணங்களால் அன்ரே தமிழின் மேலாந்தரத்தை அறிவதற்கு எடுத்துக் கூறப்பட்ட நூல்கள் ஆறனுள் இதுவும் ஒன்ருக எடுத்து இயம்பப்பட்டுள்ளது. இதனை

> வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்

என்னும் உமாபதி சிவாசாரியார் வாக்கால் நன்கு அறியலாம்.

உலகப் படைப்பில் ஆண் பெண் என்னும் இரு படைப்பு இயற்கையில் அமைந்த முறையாகும். இப் பகுப்பில் யாவர் உயர்ந்தோர் யாவர் தாழ்ந்தோர் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலாது. உலக வாழ்வுக்கு இவ்விரு பகுப்புக்களும் ஒன்றுக்கொன்று பெருந் துணையாக இருப்பனவாகும். ஆண் இன்றிப் பெண் இல்லை; பெண் இன்றி ஆண் இல்லை. இவ்விருவருமே ஒன்றுபட்டு உலகைப் படைக்க வேண்டியவராகின்றனர். இதனுல் அன்ரே, “சத்தி

தீரன் சிவத்தைச் சாரில் எத்தொழிலும் வல்லதாம்" என்று மெய்யறிவு நூல்கள் சாற்றிவருகின்றன. ஆதலின், ஈண்டுப் பெண்ணுலகப் பெருமக்களுள் சிறப்படைந்த ஒரு சிலரைக் குறிப்பிடவே இப் பெரிய புராணமாம் பெருநூலிலிருந்து பெருமை பெற்ற தொண்டர் தமக்குப் பெருந்துணைவியராய் இருந்த வாழ்வரசியர் சிலரது வரலாற்றுடன் **வையம் போற்றும் வனிதையர்** என்னும் பெயருடன் இந்நூல் வெளிவரலாயிற்று. இவர்கள் தம் தம் கொழுநன்மார்களின் வாழ்விற்குத் துணைவியராய் இருந்ததால்தான் வையம் போற்றும் வனிதையர்களாய்த் திகழும் பேறு பெற்றனர்.

இவர்கள் துணையை அவர்கள் பெற்றிலர் எனில், தொண்டர்களின் நோன்பு தொடர்ந்து நடந்திராது. அவர்களும் பெரியர் என்னும் பெயரையும் எய்தியிரார். ஆதலின், இவர்கள் வையம் போற்றும் வனிதையர் என்பது எல்லாப்படியாலும் ஏற்றமுடையதேயாகும்.

இம்மங்கையர் திலகங்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள் மட்டும் இதில் வரையப்படாமல், சேக்கிழார் கவிநயமும் ஊடே ஊடே உணர்த்தப்பட்டு வந்திருப்பதும், இடை இடையே எழும் ஐய வினாக்களுக்குக் கூடுமான வரையில் விடைகள் இறுக்கப்பட்டிருப்பதும், மற்றும் பல புதுப் புது அரிய குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருப்பதும், இதில் கூறப்பட்டவர் காலம் இன்னது என்று எழுதப்பட்டிருப்பதும் தமிழ் நலங் கருதுவோர்க்கும் வரலாற்று உண்மையை அறிய அவாவுவோர்க்கும் ஒரு புது விருந்தாகப் பொலியும் என்பது என் துணிபு.

இந்நூலினை முற்ற முடியப்படித்து இதற்கு ஒரு முன்னுரை எழுதி உதவிய தமிழ் நாட்டுப் பெர்னுட்ஷா என்று தரணி கூறிவரும் தனிப் பெருந் தமிழ் அறிஞர் உயர் திருவாளர் டாக்டர் **மு. வரதராசனுர்** எம்.ஏ., எம்.ஓ.எல். பியச்.டி. அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலைப் படிப்போர் எனக்கு மேலும் மேலும் ஊக்கம் அளித்து, இத்தகைய நூல் பல வெளிவரத் தூண்டித் துணையாய் இருக்கப் பெரிதும் வேண்டுகின்றேன்.

"அம்மை அப்பர் அகம்"
77, அவதானம் பாப்பையர் வீதி
சென்னை. 27—12—54

பா. து. க.

# 1. அழகைத் துறந்த அணங்கு

அழகு என்பது ஒரு பண்பு. இதனை எய்த விழையாதவர் எவரும் இலர். இது செயற்கை அழகு, இயற்கை அழகு என இரு பாலாகி இயலும் என்ப. இயற்கை அழகு எய்தப் பெறுதவர் செயற்கையாலேனும் அதனைச் சேர விழைவர். அத்தகைய அழகு ஆண் பெண் என்னும் இரு பால்களுள் பெண்பாலரே மிகுதியும் பெற்றவர். அஃது அவர்கள்பால் இயற்கையில் அமைந்த ஒரு தனி இயல்பு. அதனாலேயே அவர் மாதர் என்னும் மாபெருஞ் சொல்லாலும் குறிக்கப் பெறுவார் ஆயினர். மாது என்னும் குற்றுகரச் சொல், மாதர் என்னும் ஈற்றுப் போலிச் சொல்லாக அமைந்து வழங்கப்படுகிறது. மாது என்பது அழகு என்னும் பொருளுடைய சொல்லாகும். ஆகவே, மாதர்கட்கே இயற்கையில் அமைந்த அழகினைத் துறத்தல் என்றால், அஃது எத்துணைச் சீரிய குணம் என்று சிந்திக்க வேண்டாவோ? அவ்வாறு துறந்த தூய்மையர் யாரேனும் உளரோ எனில், உளர் என்பதை உணர்த்தவே இக் கட்டுரை எழுந்ததென்க.

நால்வகைக் குடிகளில் வணிகர்குடி வளமான குடியாகும். இக்குடியினருள் முப்பிரிவினர் உண்டு. அவர்களை இப்பர், கவிப்பர், பெருங்குடி என்று பெரியோர் பகுப்பர். இப்பகுப்பு அவர் அவர் செல்வ நிலையால் அமைந்ததே அன்றி, வேறு காரணத்தால் அன்று. இப்பரினும் கவிப்பர் செல்வர். கவிப்பரினும் பெருங்குடி மக்கள் பெருஞ் செல்வர்.

இப்பெருங்குடி மரபில் **தனதத்தனார்** என்னும்

மற்றும், சேக்கிழார் மொழியில் நாகரிகப் பண்பும் நயந்து காணப்படுகிறது. புனிதவதியார் பூப்பு அடைந்தனர் என்பதைப் புலவர் புகலவேண்டும். பொதுவாகப் பூப்பிற்குப் பின் நடந்துகொள்ள வேண்டுவது இல்லிகவாமை. இதனை உட்கொண்டு முன்னையதைக் கூறாமல் பின்னையதைக் கூற எண்ணியவராய் "இல்லிகவாப் பருவம்" என்று இயம்பி இருப்பது நம் நாட்டு மாதர்களின் பண்பை விளக்குவதோடு நாகரிக முறையும் எத்துணை விளங்க ஏதுவாகிறது பாருங்கள்! இவ்வாறு பாடப்பட்டிருப்பது சேக்கிழார் பாவின் பொருட் சிறப்புப் புலப்படக் காரணமாகிறது.

தனதத்தனார் திருமகளார் பூப்புற்றுப் பொலிவதைக் கேள்வியுற்ற **நிதிபதி** என்னும் பெயரிய வணிகர் தம் தனயனுக்கு மணமுடிக்க மனத்தகத்து எண்ணம் கொண்டார். அதனைப் பேசி முடிக்கப் பேரறிஞர் சிலருடன் நிதிபதி தம் கடல் நாகை நகர் நீங்கி, காரைக்கால் புறப்பட்டார்.

வந்த முதியோர்களும் தனதத்தனாரும் மணமக்கள் குணம் பேசிக் குலம் பேசிக் குறித்த நாளில் கடிமணம் இயற்ற முடிவும் செய்தனர். மண விழவு, குறிப்பிட்ட மங்கள நல் ஓரைதனில், புனிதவதியார் தமக்கும் பரமதத்தன் தனக்கும் தெளி தரு நூல் விதி வழியே செய்து முடிக்கப்பட்டது. இம் மணவினையைக் கண்டு கேளிரும் கிளைஞரும் நனி மிக மகிழ்ந்தனர். புனிதவதியார் மயில் போலும் பரமதத்தன் காளைபோலும் விளங்கினர். இந்த முறையில் இம் மணமக்கள் விளங்கித் திருமணம் முடிக்கப்பெற்றனர் என்பதை, சேக்கிழார் பெருமானார்,

" தளரடிமென் நகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யாணம் செய்தார்கள் "

என்றே குறிப்பிடுகிறார். அம்மையார் மென்மைத் தன்மைக்கும் இளஞ் சாயலுக்கும் மயில் உவமை மிக மிகப் பொருத்தமுடையதே. அன்னணமே தோற்றப் பொலிவுக்கும் ஏற்ற உணர்ச்சிக்கும் பரம தத்தனுக் குக் காளை உவமை சாலவும் தக்கதே. ஆனால், ஈண்டுச் சேக்கிழார் தாம் கூறிய உவமையில் இப்பொருத்தமே அன்றி, ஏனையதொரு பொருட் பொருத்தமும் செறி யப் பாடியுள்ளார் என்றே யாம் நினைக்க வேண்டி யிருக்கிறது. அருண் மொழித் தேவர்க்குப் புனிதவதி யார் வரலாற்றுப் பகுதி நன்கனம் தெரியும். இம் மணம் பின்னால் எங்ஙனம் இயங்கப் போகிறது என் பதையும் அவர் நன்கு அறிந்தவர். ஆதலின், இவ் வுவமையின் மூலம் பின்னர் நடக்க இருக்கும் நிகழ்ச் சியை முன்னர் நாம் அறிய அறிவுறுத்துகின்றார் புல வர் சிகாமணியார். மயில் பறவை இனத்தைச் சார்ந் தது. காளை விலங்கு ஈட்டத்தைச் சேர்ந்தது. புள் ளும் விலங்கும் பொருந்துதல் கூடுமோ ! அவை இரண் டும் பொருந்தி வாழ்தல் ஒண்ணுமோ? அவை பொருந்தி வாழ்தல் என்பது முயற்கொம்பே அன்றோ? அதுபோலவே, பரமதத்தனுக்கும் புனிதவதியார்க்கும் நடந்த கடிமணம் பொருத்தமற்றது. "இவர்கள் பின் னால் பொருந்தி வாழும் நிலையினைப் பெறாதவர் ஆவர்," என்பதை உவமை முகத்தால் விளக்கி வைத்தார், உலகம் புகழும் உத்தமர் சேக்கிழார் பெருமானார். பொருந்தி வாழும் இயல்பு இவர்பால் இருப்பதைப் புலவர் அறிந்திருந்தால், பால் பொருத்தம் அமையக் **காளைக்கும் இளமணநாகிற்கும்** என்றேனும், **பெடை**

மயிலுக்கும், சேவல் மஞ்ஞைக்கும் கடிமணம் நடந்த தென்றேனும் செய்யுள் செய்து இருப்பர். ஆக, இவ் இவ்விரு மணமக்களுக்கு நடந்த திருமணத்தைக் காளைக்கும் மயிலுக்கும் மணம் நடந்ததாகக் கூறி மணத்தைச் சிறப்பித்ததை உன்னிப் பார்க்க வேண்டும்.

தனதத்தர் பெருந்தனிகர். அவர் குடிக்கு அரும் புதல்வி புனிதவதியார். அவர் ஒரு மகவன்றி வேறு மகவு பெறாதவர். ஆதலின், தம் அருமை மகளாரை அகன்றிருக்க மனங் கொண்டிலர். என்றாலும், தம் அணி மாடத்தில் தம்பதிகள் வதிய எண்ணங் கொண்டிலர். பின் யாது செய்தனர்? தம் மருமகனார் பொங் கொலி நீர் நாகைக்கும் போகாவண்ணம், அங்கண் அமர்ந்திருக்கத் தம்பதியின் மாடே, அணிமாடம் தனித்தமைத்துப் புத்தகம் புகும் விழாவும் நடத்தி, வீறு கொண்டனர். இதுவே அறிவுடைச் செல்வர் ஆற்றும் செயலாகும். இவ்வாறே கோவலன் கண்ணகியை மணந்த பின்பு தம்முடனின்றித் தனித்து வாழவே இருசார் இரு முதுகுரவரும் நேர்ந்து, அத் தம்பதிகளை மனையறம் இயற்ற ஏற்பாடு செய்ததாகச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. அத்தலைப்பே மனையறம் புக்க காதை என்பது. அதன் விரிவை ஆண்டுக் காண்க.

புனிதவதியார் பரமதத்தன் உடன்கூடி இல்லறத்தை இனிது நடத்தலானார். துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும் துணையாய் இருந்தனர் இவ்விரு தம்பதிகள். தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் ஆதியோர்க்குத் தம் கடன்களை ஒழுங்காக நடத்திவந்தனர்; இயல்புடைய மூவர்க்கும் நல்

லாற்றின் நற்றுணையாய் இருந்தனர். இம் முறையில் பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு வழாமையில் இவர்கள் பயில்வார் ஆனார். ஆனால், உம்பர் பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகினார் புனிதவதியார்.

"உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்பது முதுமொழி. ஆகவே, பரமதத்தன் காரைக்காலில் அங்காடி ஒன்று, அழகுடன் அமைத்துப் பொருளீட்டி வந்தனன். ஒரு நாள் இவனது நண்பர் ஒருவர் இவனைக் காண அங்கு வந்து சேர்ந்தார். நண்பர், பெரியோர், குழந்தைகள், தெய்வம் ஆகிய இவர்களைக் காணச் செல்வோர் வெறுங் கையுடன் செல்வது முறையன்று. ஏதேனும் ஒன்றைக் கையுறையாகக் கொண்டு செல்லுதல் மரபுடைச் செயலாகும். அம் முறையில் பரமதத்தனைக் காணவந்தவர் மாங்கனி இரண்டை மனங்கனிந்து கொணர்ந்து ஈந்தனர். கனி பெற்ற காளையாம் பரமதத்தன், அவற்றை இல்லத்துச் சேர்க்க ஏற்பாடு செய்து தன் பணியின்மீது ஊக்கமாய் இருந்தான்.

இந்நிலையில் ஓர் அடியவர் பசிமிக உடையராய் உணவின் மிகு வேட்கையராய்ப் புனிதவதியார் அகம் புகுந்தனர். வந்த விருந்தினரை அம்மையார் விருப்புடன் வரவேற்றனர். பாதங்களை விளக்க நீரைப் பண்புடனே முன்னளித்தார்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்"

ஆதலின், அற்றார் அழிபசி தீர்க்கப் பரிகலம் திருத்தி இன்னடிசில் படைத்திட்டார். விருந்தினர் வந்த வேளை திருவமுது செய்திருக்கக் கறியமுது மட்டும், அட்டு அமையா அற்றமாக அமைந்திருந்தது. என்றாலும், அம்மையார் உள்ளம் அசைந்திலது. அறிவு

டையார் எல்லாம் உடையார் அன்ருே? "இல்லது என் இல்லவள் மாண்பாளுல்"? இல்லாளன் அனுப்பிய நல்ல மாங்கனிகள் இரண்டில் ஒன்றை அடியவர்க்கு இனிதாகப் படைத்திட்டார். விருந்தினர் உண்டு மகிழ்ந்த இன்முகங் கண்டு அம்மையாரும் ஈத்துவக் கும் இன்பத்தில் திளைத்திட்டார். வந்த விருந்தின ரும் அம்மையாரை வாழ்த்திச் சென்றனர்.

பரமதத்தன் உற்ற பெரும் பகலின் கண் ஓங்கிய பேர் இல் புகுந்தனன். பொற்புற நீராடினுன். அடிசில் அருந்த அட்டில் அகம் புகுந்திட்டான். இவையே பரமதத்தன் செயல்களென்று ஆசிரியர் சேக்கிழார் கூறுகிருர். ஈண்டுப் பரமதத்தன் பண் பாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிருர் பாவலர். பகற்போது நீராடினுன், என்பதால் காலையில் குளிக் கும் கடமை அற்றவன் பரமதத்தன் என்பது அறிய வருகிறது. நீராடிய பின்பேனும் பூசுவன பூசிப் போற்றுவன போற்றும் பொற்பு அற்றவன் என்பது நீராடிய பின் நேரே அட்டில் புக்கமையிலிருந்து ஆணித்தரமாக விளங்குகிறது. ஆகவே, அன்னுன் இயல்புக்கும் அம்மையார் பண்புக்கும் எத்துணை வேற்றுமை காணக் கிடக்கிறது என்பதை அறியலாம் அன்ருே.? இங்ஙனம் அறிந்தால், அவனைக் காளைக்கு உவமையாகக் கூறியது பொருத்தமல்லவா?

பரமதத்தன் முன் பரிகலம் திருத்திப் புனிதவதி யாரும் உணவு பரிமாறினுர். முன்னனுப்பிய மாங் கனிகளில் உள்ள ஒன்றையும் முன் வைத்தார். கணவ னும் மகிழ்வுடன் உண்டலைக் காண நுண்ணிதின் மகிழ்ந்தது ஒண்ணுதல் முகனும். பரமதத்தன் மனை வியார் படைத்த மதுர மிக வாய்த்த மாங்கனியைச்

சுவைத்தான். சுவையைத் துய்த்த தார்வணிகன், மேலும் சுவைக்க "இனியதொரு பழம் உளது. அதனையும் இடுக" என இயம்பினான். பழம் சுவையாய் இருந்தது. அச்சுவையைத் தன் வாழ்க்கைத் துணைவியும் துய்க்கவேண்டுமென்று எண்ணினான் அல்லன் காளை வணிகன். "தோன்றற்கும் தோகைக்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்கள்" என்பதைச் சிறிதும் சிந்தித்திலன். புள்ளினங்கட்கும், விலங்கினங்கட்கும் தம் துணையிடத்து வைத்த அன்புதானும் இவன்பால் இல்லைபோலும்!

"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறு"
"அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவு"
"இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை."

என்று அன்றோ கற்றார் ஏத்தும் கலி கழறுகிறது?

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தா தென்றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி."

என்று அன்றோ ஐந்திணை ஐம்பது அறைகிறது? இதுவன்றோ அன்பின் மாட்சி! இப்பண்பாடு இவன் பெற்றிலன் என்பதை விளக்க அன்றோ இவனைக் காளை என்றார், கவிஞர்.

புனிதவதியார் அதுபோது யாது செய்தார்? "பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்" என்னும் சீரிய கொள்கையராய், அனையதொரு மாங்கனியைக் கொண்டுவர அணைவார் போல் உள் புக்கார். உற்ற இடத்து உதவும் பரமனை உளத்துக் கொண்டு பரவி

ளுர். ஏதோ தெய்வத் தவக் குறிப்பால் ஒரு மாங்கனி அவ்வம்மையார் அகங்கையில் வந்துற்றது. அதனைக் கொணர்ந்து அன்புடன் கணவன் முன் படைத்தனர். அதனையும் உண்ட பரமதத்தன், "இது முன் தரும் மாங்கனியன்று. இதன் சுவை முன்னையதினும் விஞ்சி நிற்கிறது, இஃது ஏது? உண்மையினை ஒளியாமல் உரைக்கவும்" என்று உறுமினன்.

அம்மையார் ஈண்டு இன்னது செய்வதென்றுணராராய், இடர்க் கடலில் இடர்ப்படுவாரானுர். "அருளுடையார் அளித்தருளும் செவ்வியபேர் அருள்" என்று விளம்பவும் விதுப்புற்ருர்; மறைத்துச் சொல்லவும் மயங்கினுர். இவ்வாறு இருபால் கவர்வுற்று இடையூசல் ஆடி ஒருபால் படாமல் இருந்து, கற்பு நெறி கடவாத காரிகையார் ஆதலின், செய்தபடி சொல்லுவதே கடன் என்று நடந்தவற்றை ஆதியோடந்தமாக நவின்றிட்டார். இதனைக் கேட்டும் வணிகன் இத்துடன் நிற்கவில்லை. தெய்வத் திருவருளில் ஐயம் கொண்டான். "மாதே, நீ ஈசன் அருளால் மாங்கனி பெற்றது வாய்மையானுல், மற்ருெரு கனியையும் வரவழைப்பாய். இன்றேல், நின்னுரையை யான் ஏற்கேன்." என்றனன்.

பரமதத்தனைப்போல் புனிதவதியார் ஈசன் அருளில் ஐயம் கொள்ளும் நெஞ்சம் வாய்ந்தவர் அல்லர். இறைவன் அருளில் என்றும் உறுதியும் உறைப்பும் உடையவர். உள்ளே சென்ருர். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் வேணிப் பிரானை உளத்தமைத்து, "உற்ற இடத்து உதவும் உத்தமரே! மற்ருெரு மாங்கனியை ஈங்களித்து அருளீரேல், என்னுரை பொய்யாகும்.' என்று வேண்டி நின்ருர் அல்லல் தீர்த்து ஆள

'வல்ல ஆண்டவன் அருளால், மற்றுமொரு மாங் கனி அம்மையார் கையில் வந்துற்றது. அதனைத் தம் கணவனுர்க் களித்தனர். அதனை வியப்புடன் வணிகன் நயப்புடன் நோக்க, அஃது அவன் கையி னின்று கரந்து ஒழிந்தது. கைக்கனி கரக்கவே, காளை யாம் வணிகன், அச்சமும் துணுக்கமும் அகத்துக் கொண்டான். அக்கணமே அம்மையார் ஓர் அணங்கு என்று அகத்து எண்ணினுன். மனைவி என்பதை மறந்தும் போனுன். " இனி இம்மாதுடன் வாழ ஒருப் படேன் " என்று உளத்தில் கொண்டவனுய், ஒருவும் எண்ணமே ஓங்கவே இருந்தான். நடந்த செயலை எவர்க்கும் நவின்றானும் அல்லன்.

திரைகடல் ஓடித் திரவியம் தேடும் வழக்குடைய மரபினைச் சார்ந்த வணிகன் ஆதலின், அதனையே ஏது வாக அகத்துள் கொண்டு " பரவைமீது படர்கலம் செலுத்திப் பணத்தைத் தேடப் போகின்றேன்." என்று பாவையர்க்குப் பகர்ந்து வங்கம் ஏறி வழிக் கொள்ளலானுன். புனிதவதியாரும் கணவன் புகன் றது பொய்யுரை அன்று. மெய் உரையே என்று உளத்துக் கொண்டு, உத்தரம் கொடுத்தனர். பொய் யுடை ஒருவன் சொல் வன்மையினுல் மெய் போலும்மே என்பதை யாம் காண்பது பொய்யா குமா ? ஆகாது.

வேற்று நாட்டகம் விரைந்து சென்ற வணிகனும், வாணிகம் செய்து செல்வம் பலவும் சேரத் திரட்டி ஞன். செல்வம் திரட்டிய பரமதத்தன், காரைக்கா லுக்குள் கால் வைக்கவும் கூசினுன். அங்குச் சென்ருல் அணங்கு அணங்கும் என்று அச்சம் கொண்டான். காசுடன் சென்று கன்னி நாட்டினை அண்மினன்.

அடைந்தவன் யாதுசெய்தான்? வாளா இருந்தனனோ இல்லை, இல்லை. திரட்டிய செல்வத்தை நிதி சேமிக்கும் இடத்தில் உய்த்தனன். "பொருள்தனைப் போற்றி வாழ்" என்னும் பொன்னுரைக்கிணங்கத் தான் ஈட்டிய பொருள் வளர்தலின்றி வாளா இருக்க ஒருப்படாதவனாய், அது வட்டி ஈனவே நிதி சேமிக்கும் இடத்தில் உய்த்தான். போலும்! அவ்வாறு செய்தான் என்பது "ஒப்பில் மாநிதியம் எல்லாம் ஒருவழி பெருக உய்த்து" என்னும் அடிவிளக்குகிறது. இதனால் இக்காலத்துப் பாங்கிங் முறை, அக்காலத்து இருந்ததென்பது அறியவருகிறது. செல்வத்திற்கு வேண்டிய செயலைப் புரிந்த வணிகன், தன் ஏனைய வாழ்வை இன்புடன் கழிக்க ஆண்டே தன் குலத்தைச் சார்ந்த நலந்தரு நங்கை ஒருத்தியை நன் மணம் புரிந்தனன். மணம் புரிந்த பயனாக மகளொன்றும் பெற்றெடுத்தான். பெற்ற மகவுக்குப் புனிதவதி என்ற திருப்பெயரையே வைத்திட்டான். பரமதத்தன் மகவும், மனைவிதானும் மனம் மகிழ்வு எய்தி நிற்க, மதுரை மாநகரில் இனிது வாழலுற்றான்.

இஃது இவ்வாறாகப் புனிதவதியார் கணவனார் வருகை நோக்கித் தம் கற்பு நெறி கடவாது கடவுளைப் பராவி வந்தனர். கணவன் கன்னி நாடெய்திக் கன்னி ஒருத்தியை மணந்து களிப்புடன் வாழ்வதைச் சிறிதும் அறியார் அம்மையார். ஒரு நாள் இன்றேனும் பல நாள் சென்றேனும் உண்மை வெளியாதல் ஒருதலை. பரமதத்தன் செயல் பரவலாயிற்று. அவனது செயலைக் கேட்ட அம்மையாரின் கிளைஞர் சிறிதும் தாமதியாது நேரே இவனைக் காணக் கன்னி நாடடைந்தனர்; உண்மை உணர்ந்தார். எனினும், அவனுடன் உரை

யாடலராய், மற்றவன் இருந்த பங்கர் நற்றிருவனைய நங்கையை நண்ணுவிப்பதுவே கடன் என்று முடிவு செய்தனர். மடநடை மயில் அன்னாரை மாமணிச் சிவிகை ஏற்றி, மதுரை மாநகரம் நோக்கிப் புறப்பட லாயினர். அம்மையார் இளமை மாறா இன்னழகு டையர் என்பதைச் சேக்கிழார் "தாமரைத் தவிசில் வைகும் தனித்திரு" என்னும் தொடரால் குறிப்பது, இன்பம் துய்க்கும் இந் நிலையில் பரமதத்தன் ஒருவிச் சென்றது பரிபவம் உறவேண்டியது என்பதை அறி விக்கவே ஆகும். சுற்றமும் நட்பும் சூழ யாவரும் ஆல வாயை அண்மினர். தம் வருகையைப் பரமதத்த னுக்கு ஆள் போக்கி அறிவித்தனர்.

புனிதவதியாரின் வருகை கேட்ட வணிகனும் பரம தத்தன் "இடியேறுண்ட நாகம் போல" இட ரில் வைகினான். "இதற்கு என் செய்வ?" தென்று ஏங் கினான். "மறுமணம் பூண்டது மாசாயிற்றே" என்று மயங்கினான். பிறகு ஒருவாறு தேறி, "நேரே சென்று புனிதவதியார் பொன்னடி பணிந்து போற்றுதல் செய்வோம்" என்று முடிவுகொண்டான். கோயில் வழிபாடு போற்றும் கொள்கை யுடையனாய்க்குளித்து முழுகினான். தூய் ஆடையும் துலங்க அணிந்துகொண் டான். மனைவியும் மகவும், அவ்வாறே செய்துகொள் ளவும் ஆக்ஞை அளித்தான். பின்பு மூவருமாக நடந்து போந்தனர்.

செய்மையில் தம் கணவனும் , கணவனோடு காரிகை ஒருத்திதானும், காரிகையோடு நல்ல கவின் தரு மகவும் வருவதைப் புனிதவதியார் கண்ணுற்றார். அம்மையார் பார்த்த பார்வை நேரிய பார்வையன்று. மருண்ட பார்வை ; அச்சப் பார்வை. அவலப்

பார்வை. "என்னே! என்னை நீத்து வேருெரு மங்கையை மணந்து, மகவும் பெறும் காரணம்! யான் அத்துணை தீங்கு யாது செய்தேன்?" என்று எண்ணி உள்ளம் துடிக்கப் பார்த்தார். ஆதலின், அப்பார்வையோடிருந்த அவ்வம்மையாரை 'மானிளம் பிணை போல் நின்ற மனைவியார்' என்று பாவாணர் இசைக்கின்ருர்.

இவ்வாறு மருட்சி கொண்ட நிலையில் மாதர்களுக்கு மானின் கண்களை உவமை கூறுவது மாபெரும் புலவர்க்கு வாய்த்ததொரு பண்பாகும். திருஞான சம்பந்தர் இளைய கோலத்துடன் முதுமை நிறைந்த பலரோடு பாண்டியன் அவைக் களத்து வீற்றிருக்கையில், அம் முதியவரால் பாலருவாயர்க்கு ஏதேனும் இடுக்கண் நிகழுமோ என்றெண்ணி இருந்தார் மங்கையர்க்கரசியார் என்பதை அகத்து எண்ணத்தை முகத்தால் அறிந்த தோணிபுரத்தோன்றலார், அவ்வம்மையாரைப் பார்த்து,

'மானி னேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்,
பானல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்'

என்று பாடினுர்.

ஆகவே, மருட்சியுற்ற பார்வையோடிருந்த மங்கையர் திலகத்தின் மலரடி முன்னே பரமதத்தன் தன் பின்னைய மனைவியுடனும் மகவுடனும் வீழ்ந்து, "அம்மே! யான் உமதருளால் வாழ்வேன். இவ் விளங் குழவிதானும் பான்மையால் உமது நாமம் தாங்கிய வாழ்வுடையதாகும்" என்று பணிமொழி பகர்ந்து எழுந்தான். கணவன் வணங்குவதை மனைவியார் ஏற்பரா? இஃது அடுக்குமோ? இஃது அடாத செயல் அன்ருே? யாண்டேனும் கணவன் மனைவியை வணங்

கியதாக வழக்கு உண்டோ? தமிழ் நூல் யாண்டே னும் கூறியதுண்டோ? யாண்டும் இல்லை. கணவ னைத் தொழுதெழுவாள் என்பதே முறை. ஆனால் இவ் வணக்கம் அகத்து உண்டு; புறத்து இல்லை.

'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையும் காலை புலவியுள் உரிய'

என்பது தொல்காப்பியம்.

ஈண்டுப் பரமதத்தன் செயல் புறத்ததாதலின், புறக்கணித்தற் குரியதே. இவ் வணக்கத்தைப் புனித வதியார் ஏற்றிலர் என்பதைச் சேக்கிழார் பெருமானார்,

'கணவன் தான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடியனாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்க'

என்று பாடி அறிவிக்கின்றார். ஈண்டுக் "காமர் பூங் கொடியனார்" என்று புனிதவதியாரைப் புகன்றத னால், காற்று மோதக் கலங்கும் கொடி போலக் கண வன் வணங்கக் காரிகையார் கலங்கினார், என்பது உன்னற் குரிய உட் பொருளாகும்.

பரமதத்தனது செயலைக் கண்ட உறவினர் வெள் கினர் ஒருபால்; வியப்புற்றனர் மற்றொருபால்! "மணமலி தாரினாய்! நீ மருள் ஏறப் பெற்றாயோ? உன் திரு மனைவிதன்னை வணங்குவதென் கொல்?" என்று உசாவினார். "உறவின் முறை உத்தமர்களே! யான் மருள் உற்றேன் அல்லேன். தெருளே உற்று ளேன். இம் மாதரசியார் மானிடர் அல்லர். நற் பெருந் தெய்வம். நான் அறிந்தேன். பெற்ற இம் மகவுக்கு யான் இவ்வம்மையார் பேரும் இட்டேன். ஆதலாலே, பொற்பதம் பணிந்தேன். நீரும் போற்று தல் கடமையாகும்" என்று கழறினான். இவ்வாறு பரமதத்தன் கூறக் கேட்ட உறவினர்கள் உணர்த்து

வதும் உணருவதும் இன்ன என இயலாராய் வாளா இருந்தனர்.

இவற்றை எல்லாம் ஆழ அழுந்த நோக்குங்கால் பரமதத்தனும் புனிதவதியாரும் கொண்ட மணம் எத்துணைப் பொருத்த முடையது என்பதைச் சிந்திக்க வேண்டாவோ? அச் சிந்தனையின் முடிவு யாதாக முடியும்? இது பொருந்திய மணம் அன்று; பொருந்தா மணமே என்பது தானே போதரும்? அதனை முன் கூட்டி அன்றோ தொண்டர் சீர் பரவும் தோமில் புலவர் "தளிரடி மென் நகை மயிலைத்தா தவிழ்தார் காளைக்குக் களிமகிழ் சுற்றம் போற்றக் கல்யாணம் செய்தார்கள்" என்று உவமை முகத்தால் உணர்த்திக் காட்டினார்?

கணவனின் சொல்லையும் செயலையும் கூர்ந்து நோக்கினார் புனிதவதியார். புனிதவதியார் அகத்து அழகுடையார் போலப் புறத்தும் அழகுடையவர். இவரது அழகை எண்ணிப் பாடுகிறார் அருண்மொழித் தேவர். அம்மையாரைக் குறிக்கும்போதெல்லாம் கவின் பொலியவே கவியும் பாடுகிறார். "திருமடந்தை அவதரித்தாள் எனவந்து பொங்கியபேர் அழகு மிகுப் புனிதவதியார் பிறந்தார்" எனப் பிறப்பைப்பற்றி மொழிந்தார்-முன்னே. "அணிகிளர் மெல் அடி" என்று திருவடியைப் புனைந்தனர். 'அழகின் கொழுந்து எழுவதெனவளர்வார்' என்று வளர்ப்பை வரைந்தார். 'நுசுப்பு ஒதுங்கு பதம்' என்று இடையின் அழகை இயம்பிப் போந்தார். 'நல்ல என உறுப்பு நூல்வர் உரைக்கும் நலம் நிரம்பி மல்கு பெருவனப்பு மிக்கூரவரு மாட்சி' என உறுப்பழகு அனைத்தினையும் ஒருங்கே உரைத்திட்டார். "தளிரடி மென்னகை

மயில்'' என்று சாயல் அழகைச் சாற்றி முடித்தார். "பூப்பயில் மென்குழல் மடவார்'' மண மலியும் மலர்க் கூந்தல் மாதரார் 'பூங் குழலார்' என்று கூந்தல் சிறப் பைக் கூறிப்போந்தார். இன்னமும் அம்மையாரது அழகுப் பொலிவை அழகுறப் பாடிய பாடற் றொட ரைக் 'காட்டப் புகின், பரக்கும் என்று இத்துடன் சுருக்கப்பட்டது. மற்றும், அம்மையாருக்கிருந்த செல்வ நிலையோ செப்பத் தரமன்று. அம்மையார் ஓங்கிய பேர் இல் எய்தி வாழ்ந்தனர். மேலும், தம்மை நாடி வந்தவர்க்கு நல்ல திருவமுதளித்தும், செம்பொன்னும், நவமணியும், செழுந்துகிலும் முத லான வேண்டுவ கொடுத்து வாழ்ந்தனர் என்பதையும் நன்கு அறியலாம்.

இவ்வாறு உருவும் திருவும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்வம்மையார் கணவனுக்கு உகந்தது ஆகாத வாழ்வை உடனே வெறுத்தார். தமக்கு அமைந்த வனப்புப் பிறர் மகிழ இன்றிக் கணவனுக் கென அமைந்ததென்று எண்ணி, "இவனுக்காகத் தாங்கிய வனப்பு'' என்று கூறி அதனை எள்ளி நின்றார். எங்கும் நிறைந்த இறைவனை நோக்கினார். 'இறைவா, இத்தசைப் பொதி கழித்துப் பேய் வடிவு அடியேனுக் குப் பாங்குற அளித்தல் வேண்டும்' என்று பரவி நின் றார். அம்மையாரும், எண்ணிய எண்ணியாங்கு எய்தி னார். வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம் உற்றார். அம்மையார் நிலையைக் கண்ட ஒக்க லும் நட்பும் பரமதத்தன் கூற்றை உண்மை என்று உணர்ந்தனர். அவர்களும் தொழுது இறைஞ்சி அகன்று போனார். அம்மையார் கருவிலே திருவுடை,

யார் ஆதலின், அப்பொழுதே இறைவன் மீது பாடவும் தொடங்கினார்.

> "பிறந்த மொழிபயின்ற பின்எல்லாம் காதற்
> சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
> மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
> எஞ்ஞான்று தீர்ப்ப திடர்." ?

என்பது முதலாக நூறு பாடலைப் பாடினார். அதுவே அற்புதத் திருவந்தாதி என அழைக்கப் பெறும். இத்துடன் **இரட்டை மணிமாலை** என்னும் இருபது பாடல் அடங்கிய நூலையும் பாடி, இறைவன் இருந்த கைலை நோக்கிக் கடுகிச் செல்வாரானார். இவரது வருகையை இமயவல்லி இனிதுற நோக்கி இறைவனைப் பார்த்து, "எற்பின் யாக்கை யன்பு இருந்தவாறு என்னே!" என்று வினவ, பரமன், "உமையே, இவ் வரை இவரும் இவள், நம்மைப் பேணும் அம்மை. இப்பெருமை சேர் வடிவும் நம்மை வேண்டியே பெற்றதாகும்." என்றருளிச் செய்யப் புனிதவதியாரும் அருகே அண்மினர். ஆலமர் செல்வனும் "அம்மையே வருக" என்றான். இறைவன் தாயும் இலி; தந்தையும் இலி; தான்தோன்றித் தம்பிரான். ஆதலின், அவனுக்கு "அம்மையே" என அழைக்கும் வாய்ப்பு இதுகாறும் அமைந்திலது. புனிதவதியார் கைலைபுக்கபோதுதான் இப்பேறு அவனுக்குக் கிடைத்தது. ஆகவே, ஈண்டே இறைவன் தனையன் என்னும் தனிப் பெருமை யுற்றான். புனிதவதியார் மணந்தும் மகப் பெறு நிலையில் வாடிய வாட்டம் தீர, இறைவனே தம்மை அம்மை என்றழைக்கும் தாய்மைப் பண்பையும் தாங்கலாயினர். இக் கருத்தினைச் சிவப்

பிரகாசர் தம் திருவெங்கையுலாவில் வெளிபடுத்திக் காட்டிவிட்டார்.

—எவர்க்கும் இவன்
தந்தையே அன்றித் தனையனு காதவன்காண்
அந்தமில்சீர்க் காரைக்கால் அம்மைதனை—முந்தொருநாள்
தப்பா அருளால் தனக்கம்மை என்றவன்காண்.

என்பன அவ்வடிகள்.

இறைவன் அம்மையாரை "எது வேண்டுமோ, அது வேண்டுக" என்று விளம்பப் புனிதவதியாரும்,

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை
என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.

இறைவரும் இவ்வரங்களை ஈந்ததோடு நில்லாது, "திருவாலங்காடென்னும் திருப்பதியில் நீ சென்று எம் ஆனந்தக் கூத்தினைக் கண்டு அகங்களிக்கப் பாடுவாய்." என்றும் பணித்திட்டார். அப்பணி தலைமேற் கொண்டு தலையன்பால் தலையால் நடந்து திருவாலங்காடடைந்தார். அண்டமுற நிமிர்ந்தானது ஆனந்த நடனம் கண்டார். அகத்தானந்தம் புறத்துப் பொழிவதுபோல், **மூத்த திருப்பதிகம்** மொழிந்திட்டார். இவர் பாடிய நூல்களே புலவர்கள் பரணி பாடுதற்குப் பெருந்துணை செய்ய வல்லனவாக இருந்தனவோ என்று கருதும் எண்ணமும் எழுகின்றது. அலகை யாட்டங்களும், இடுகாடு, சுடுகாடு இயல்புகளும் இனிது எடுத்து இவர் பாடல் இயம்ப வல்லன. இவ்வம்மையாரது திருப்பாடல்கள் சைவத் திருமுறை

பன்னிரண்டனுள்* பதினோராம் திருமுறையில் இலங்கும் பெருமையுடையன.

இவ்வம்மையார் புனிதவதியார் என்று தம்மைத் தாம் பாடிய பாடல்களில் குறித்துக் கொள்ளாமல், யாண்டும் காரைக்காற் பேய் என்று குறிப்பிட்டுக் கொள்வதால், அம்மையார் பேய் வடிவு பெற்றதில் ஐயமின்றி அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். அவற்றைக் கீழ்வரும் தொடர்கள் நன்கு விளக்கும்.

அவையே "கனல் எயிற்றுக் காரைக்காற் பேய்" "செடிதலைக் காரைக்காற் பேய்" "காரைக்காற் பேய்" என்பன.

ஈண்டுத் தம்மைக் காரைக்காற் பேய் என்று குறிப்பதனால், இவர் காரைக்காற் பதியில் பிறந்தார் என்பதும் அறியக் கிடக்கிறது. அதுவே இவர்க்கு இடத்தின் அடியாகப் பிறந்த இன் பெயராகவும் அமைந்துவிட்டது.

## 2. உள்ளத் துறவுடைய உத்தமி

துறவு என்றதும் ஒரு சிலருடைய உள்ளம் துணுக் குறுதல் கூடும். ஏன்? துறவு என்றால், "மனைவி மக்களையும், வீடுவாசல்களையும் விட்டுக் காட்டிற்குச் சென்று கடுந்தவம் செய்யவேண்டுவதன்றோ? வார்ப் பனி நாளினும், மழை நாளினும், கோடை வெயிலிலும் அம்மை முத்தி அடைவதற்காகத் தம்மைத் தாமே சாலவும் ஒறுக்க வேண்டியதாகுமே" எண்ணும் எண் ணமே அத்துணுக்கிற்குக் காரணம். ஆனால், அவ் வாறு நெஞ்சம் அஞ்ச வேண்டியதில்லை. நம் தமிழ் நூல்களும் தவத்தைக் கடுமையானதென்றும் கழற வுமில்லை. வள்ளுவருடைய வாய்மொழியைப் பாருங் கள். அவர் தவத்தைப் பற்றி என்ன கூறுகிறார்?

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்று அன்றோ கூறுகிறார்? அவர் தவத்தின் இலக் கணத்தைத் தர்ப்பணத்தைப் போலத் தெளிவாக எடுத்துக் காட்டினார். இதில் காவி உடை உடுத்த வேண்டுமென்றோ, காட்டிற்குச் செல்ல வேண்டு மென்றோ கழறக் காணோம். இதில் கூறியிருப்பவை எல்லாம், எவன் ஒருவன் தனக்கு வந்த துன்பத்தை ஏற்றுப் பொறுத்து வருகிறானோ, எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாதவனாக இருந்துவருகின்றானோ, அவனே பெரிய தவசி என்பனவே. இன்னோரன்ன காரணங் களால் புறத் துறவினும், அகத் துறவே அருமை யுடையதென்பது பெற்றும். இந்த அகத்துறவுடைய

அம்மையாரைப் பற்றிச் சிறிது ஈண்டு ஆராய்வோமாக.

தமிழ் நாடு நாற் பெரும் பிரிவினையுடையது. அவையே பாண்டி நாடு, சோழ நாடு, சேர நாடு, தொண்டை நாடு என்பன. இந் நாற் பகுப்புடன் ஐந்தாவது பகுப்பாக நடு நாடு என்பதும் ஒன்று உண்டு. இது சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையே இருத்தலின் இதனை நடு நாடு என்று நவின்றனர் போலும்.

இந் நாட்டிற்கு அழகு செய்யும் உள் நாடுகளில் **திருமுனைப்பாடி** நாடும் ஒன்று. எல்லாத் துறையிலும் இது முனைந்து முன்னிற்றலின் இப்பெயர் பெற்றதோ என்னவோ அறியோம்.

திருமுனைப்பாடி நாடு மிகத்தொன்மையானது. மாசு மறு ஏதும் கூற இயலாத நிலையில் துலங்கியது. இதில் குடிவளம் சிறந்து இருந்தது. அக்குடிகளும் ஒழுக்கத்திலும் ஏனைய நற் செயல்களிலும் தலை சிறந்து விளங்கினர். "திருக்கோவில் இல்லாத் திருவில் ஊர்" என்று செப்ப இயலா நிலையில் கோயில்களையும் தன்னகத்தே கொண்டது இந்நாடு.

நாட்டுக்கு எல்லா நலன்களும் இருப்பினும், ஆற்று நலன் இன்றேல், அழகும் இன்று; வளமும் இன்று. இதனால் அன்றே, "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று ஔவையாரும் அறிந்து கூறினர். அந்தக் குறையும் இந்தப் பதிக்கு இன்று. இப்பதி பெண்ணை நதி பாயும் பெருமை பெற்றது. அப்பதியில் பெண்ணையாறு பாயும் பெருமிதம் பேர் அழகுடையது. அது பாய்ந்து வரும் வேகத்தால் வயல்களில் உள்ள முத்துக்களையும் காட்டுமலர்களை

யும் தன் அலைகளாகிய கைகளில் சுமந்து பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும்.

இவ்வாறு வற்ருநீருடன் வளத்தோடு பெண்ணை பாய்வதால், அப்பதிக்குச் செல்வச் சிறப்புக்கு எங்ஙனம் குறை ஏற்படும்? வெள்ளிய தகடு போன்ற வரால் மீன்கள் வாய்க்கால்களில் துள்ளி விளையாடின. கமுகு அன்ன கவினுடன் வளர்ந்த கரும்புகள், தம் கணுக்கள் தோறும் சாருகிய தேனைச் சிந்திக்கொண்டிருந்தன. கதிர்ச்சாலிகள் நெல் மணிகளில் நிரம்பப் பாலினைப் பெற்று மிளிர்ந்தன. தோட்டங்களில் தென்னைபோலக் கமுகுகள் தோற்றமளித்தன. உழவர் உழுத சால் வழிகளில் தரளங்கள் சிந்திக் கிடந்தன. நீர் வளத்தால் இப்பிகள் கருவுற்று ஈன்ற நித்திலங்களே அங்குச் சிந்தி இடம் பெறுதற்குரியன ஆயின. வயல்களில் கடைசியரும் உழத்தியரும் களையெடுப்பர். களைகளாகக் காணப் படுவன புல்லும் அன்று; பூண்டும் அன்று. செங் கழுநீரும் செந்தாமரையுமே ஆம். அவற்றையே மள்ளர் பிடுங்கி எறிய, அவை நிலங்களின் கரைகளில் மலிந்திருக்கும். மாட மாளிகைகளிலும், கூட கோபு ரங்களிலும் வாழும் மயிலன்ன மங்கையர்கள் குளித்து மூழ்கிக் கூந்தலை ஆற்ற நிலாமுற்றம் செல்வர். ஆண்டுத் தம் குழலுக்கு அகிற் புகையும், ஆரல் புகையும் ஊட்டிக் கூந்தலை ஆற்றிக்கொண்டிருப்பர். இல்லங் களில் வாழும் நல்லெண்ணமுடையவர்கள் வரு விருந்து ஓம்பிச் செல் விருந்திற்குக் காத்து நிற்பர்.

அந் நாட்டின் இனிய வளம், நாற் படையின் தோற்றத்தை நாட்டி நின்றது. வாழைக் குலைகள் நன்கு முற்றி நீண்டு தொங்கிக்கொண்டிருந்தன. செங்

நெற் கதிர்கள் தம் கதிர்க்கொத்தினை அடர்த்தியாகக் கொண்டு தலை சாய்ந்து காற்றால் அசைப்புண்டு விளங்கின. பெருமித நடையுடன் பெரும் பாரங்களை ஏற்றிச் செல்லும் சகடுகள் மறுகுகள்தோறும் மாண்பாய்ப் போய்க்கொண்டிருந்தன. சோம்பல் இன்றிச் சுறுசுறுப்புடன் பல்பணி புரியும் வினைஞர்கள். ஆர்ப்புடன் அணியணியாகச் சென்று கொண்டிருந்தனர். இந் நால்வகைத் தோற்றம் யானைப் படை, துரகப்படை, தேர்ப்படை காலாட் படையின் நினைவினை எவர்க்கும் எழுப்பாமல் இருக்காது.

குளங்களில் கருமேதிகள் குளிக்க வேண்டிப் போய்ப்படியும். குளியலோடு மலர் மேய்ந்து குதூகலத்துடன் பசிதணிந்து போவதும் உண்டு. அவை கரு நிறத்துடன் பெருந்தடத்தில் படிவது, பரவையிடைப் கருமுகில்கள் நீர் பருகச் செல்வதுபோல் இருந்தது. கருமேதிகள் குளத்தில் மலரை மேய்கையில் வரால் மீன்கள் அவ்வெருமைகளின் மடியை முட்டும். அதனால் அவற்றினின் பால் பெருகிக் குளத்தில் படிய, அது கரை புரண்டு ஓடும்.

இன்னோரன்ன எழிலும் பொழிலும் பொய்கையும் நிறைந்த திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்பது ஒரு சிறு பதி. சிறு பதியே ஆனாலும், சீரிய பதியே. திருவே அவாவும் ஊர், அது எனக் கருதின் அது சீரிய பதியே அன்றோ? அவ்வூரில் வருந்தும் பொருள்களில் மாதர் இடையே அன்றிவேறு இல்லை. அதாவது மார்பகம் பருக்கப் பருக்கத் சிறுத்துச் சிறுத்துப் போகின்றோமே என்ற வருத்தமாகும். அத்துணை மெல்லிய இடையினையுடைய மாதர் நிறைந்த ஊர் அவ்வூர் என்பதாம். இடை சிறுத்தல்

எந்திழையார்க்கு எழில் தருவதர்கும். வாய்விட்டு ஏங்குபவை மாதர் காலணி நூபுரங்களே அன்றி, வேறு நுவல்வதற்கில்லை. தீங்கு ஆங்கு இல்லை. மற்றும் ஆங்கு ஓங்கி நின்றவை நிறை மாடங்களே. வழுவில் அறங்களே ஒழிவின்றி நிகழ்ந்தன.

இவ்வாறு நீர்வளம் நிலவளம் முதலான பல் வளங்களும் பல்கப் பெற்ற இத்திருவாமூரில் தாளா ளர் என்னும் வேளாளர் குலத்தில் புகழனார் என்னும் புண்ணியனார் வாழ்ந்து வந்தார். இவர் விருந்தளிக் கும் விருப்பினராய் மனையறத்தை மேற்கொண்டார். அவ்வறத்தினை ஆசின்றி ஆற்ற நற்குணவதியாராய நங்கை ஒருவரை மணந்து இல்லற நெறியை நல்லற மாக நடத்தி வந்தனர். அவ்வம்மையார் மாதர்க் கெல்லாம் இனியராக இருந்த காரணத்தால் மாதினி யார் என்னும் திருநாமத்துடன் திகழ்வாராயினர். புகழும் இனிமையும் ஒன்று சேர்ந்தே, புகழனாராக வும், மாதினியார் ஆகவும் தோன்றினபோலும்.

மனையறத்தை மாண்புற நடாத்திய இம்மா பெரும் தம்பதிகள் மனைமாட்சிக்குரிய நன் கலமாக நல்ல பிள்ளைப் பேறும் வாய்க்கப் பெற்றனர். "புக்களையும் தாமரைக்கைப்பூநாறும் செய்யவாய் மக்களை யிங்கு இல்லாதவர், பொன் உடையரே னும் புகழ் உடையரேனும் மற்று என்னுடைய ரேனும் உடையவர்" ஆவரோ? ஆகார், ஆகார். ஆகவே, அந்த அபவாதம் அணுகாதவாறு ஆண்ட வன் அருளால் அருமை மகப்பேற்றையும் வாய்க்கப் பெற்றார் என்க.

பிள்ளைப்பேறு வாய்க்கப் பெறாவிடின், மலடி என்று மாநிலம் பழிக்கும். ஒரு மகவை ஈன்றாலும்

மலடி என்று அழைக்கப்பெருமல், வாழை மலடி என்று வையகம் வாய்தந்தன வழங்கும். அது வும் கூருத நிலையில் மாதினியார் இரு பெருமக்களை இனிமையாய் ஈன்றனர். இருவரும் இரு கண்மணி அனையர். அவ்விரு குழவிகளில் முன்னது பெண் மகவு. பின்னது ஆண் மதலை. பெண் மகளார் கண் கொள்ளாக் கவினுடையவராய்ச் செங்கமலம் திகழ வரும் திருவனையவராய் விளங்கினர். அப்பெண்ண ணங்கு புகழனர் குலத்திற்கே திலகமெனத் திகழும் காரணத்தால் **திலகவதியார்** என்றே திருநாமம் சூட் டப் பெற்ருர். ஆண் மகவுக்கு **மருள் நீக்கியார்** என் னும் மாண் பெயரைச் சூட்டினர். இவ்விரு குழவி கட்கும் அகவையில் சில ஆண்டுகளே வேறுபாடு.

திலகவதியார் குழவிப் பருவம் கடந்து குமரிப் பருவம் குறுகினர். குமரிப் பருவம் உற்ற திலக வதியாருக்குத் திருமணம் முடிக்கப் புகழனர் திரு வுளம் கொண்டார். அவரது திருவுளத்திற்கேற்பக் குலத்தாலும் நலத்தாலும் கோதற்ற **கலிப்பகையார்** என்னும் கவினுடைய வரனுக்குக் கடிமணம் செய் விப்பதென ஒரு முடிவுக்கு வந்தனர்.

கலிப்பகையார் ஒரு சிறந்த வீரர் ; அமரில் அரி யேறு போன்று, தம் ஆற்றலை விளைவிப்பவர் ; போர் என்னவீங்கும் பொலங்கொள் தோளினர் ; மறத் தில் சிறந்தார் ஆயினும், அறத்தினின்றும் சிறிதும் வழுவாதவர் ; தாம் வழிபடும் புராரியிடத்தும், தொழில் புரியும் புரவலரிடத்தும் பற்று மிக வாய்க் கப்பெற்றவர். இன்னேரன்ன பண்புவாய்க்கப்பெற்ற அடல் ஏறு அனையாரைத் திலகவதியார் மணப்பது சாலவும் பொருத்தமுடையதே.

திருமணம் நிச்சயமாகியது." இதற்கிடையில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. கலிப்பகையார் ஒரு படை வீரர் என்பது முன்பே பகரப்பட்ட செய்தியன்றோ? இவர் எந்த அரசனிடம் படை வீரராக இருந்தனரோ, அப் பார்த்திபனுக்கும் வட புல வேந்தனுக்கும் பெரும் பகை மூண்டது. அவ்வட புலவேந்தனைப் புறமுதுகு காணப் பெரும் படை திரட்டிக் கலிப் பகையாரே போக நேர்ந்தது. என்னே இவர் தம் நாட்டுப் பற்றும் அரசப் பற்றும்! வேந்தற்கு உற்றுழி உதவலையே இவர் உயர் பணியாகக் கருதினதால் அன்றோ, தமக்கு உறவினர் ஏற்படுத்திய மணத்தையும் மதியாது மாற்றார் களம் புகுந்தனர்!

விரைவில் பகை முடித்து வீடு திரும்புவதாகச் சென்ற கலிப்பகையார், பல நாள் கடும் போர் செய்ய நேர்ந்தது. "கூழுக்கு மாங்காய் தோற்குமோ" என்பது போல் வட புலத்து வீரர் வன்மையோடு போர் இட்டனர். அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி எடுத்த கருமம் ஆமோ? பருவத்தால் அன்றி உயர் மரங்களாயினும் பழுக்குமோ? ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகுமன்றோ? கலிப்பகையார் சமர் புரியச் சென்றவர் சடுதியில் வந்திலர்.

புகழனார் தொண்டு கிழவனார் ஆயினார். மூப்பும் பிணியும் இவரை முடுகி நின்றன. ஆகவே, மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தினார். மாதினியார் தம் கணவனார் இறக்கக் கண்டு, இனித் தமக்குக் "கொண்டானில் துன்னிய கேளிர் பிறர் இல்லை." என்பதை ஓர்ந்து, "கணவனை இழந்தவர்க்குக் காட்டுவது இல்" என்பதையும் அறிந்து, தம்முயிர் கொண்டு தம் கணவனார் உயிரைத் தேடுவார் போல் தாமும் ஆவி

பிரிந்தார். திரியின்றிச் சுடர் நிற்குமோ?

திலகவதியாரும் மருள் நீக்கியாரும் பெற்றோரை இழந்து பெரும் பேதுறவு உற்றனர். இவர்களது ஆறாத்துயரினை அருங்கிளைஞர் சிறிது ஆற்றினர். உலகின் நிலையாமையை எடுத்து உரைத்தனர். இறப்பதும் பிறப்பதும், உறங்குதலும் விழித்தலும் போலும் என்று எடுத்து இயம்பினர். இவையனைத்தும் கேட்ட இரு பெருமணிகள் ஒருவாறு உளந்தேறி உற்றதுயர் நீங்கி வருவாராயினர்.

இஃதிவ்வாறாகக் கடும்போர் புரியக் களம் புகுந்த கலிப்பகையார், விழுப் புண்பட்டு விண்ணுலகில் வீர சுவர்க்கம் எய்தினர். இச்செய்தி திலகவதியார் திருச் செவியிலும் புகுந்தது. இது கேட்ட திலகவதியார் "உகிர் சுற்றியில் உலக்கை விழுந்தது போல்" உளம் துடித்தார்.

அதுவரை திலகவதியார்க்கும் கலிப் பகையார்க்கும் கடிமணம் நிகழ்ந்திலது. எனினும், கலந்த அன்பினர் ஆதலாலும், உழுவல் அன்பு எழுமையும் தொடரவல்லதாதலாலும், திலகவதியார் கலிப்பகையார் தம்மை மணந்த கணவனே என்று கொண்டு, ஆவி நைந்தார். இனித் தாம் உயிர் வாழ்ந்து பயனில்லை என்று உளங் கொண்டார். எவரையும் சிந்தையாலும் மெய்யாலும் தொடேன் என்னும் கொள்கையராய் "எந்தையும் எம் அன்னையும் அவர்க்கு எனைக் கொடுக்க இசைந்து விட்டனர். அந்த முறைப்படி நான் அவர்க்கே மனையாள் என்னும் உரிமையள் ஆனேன். ஆகவே, என் உயிர் அனைய அவர் போயபின், உடல் அனைய யான் உலகில் இருந்து பயனில்லை." என்று தாமும் உயிர் விட்டுப் புகழ் நிறுத்த முனைந்தார்.

இதனைக் கண்ட மருள் நீக்கியார் இடியேறுண்ட நாகம் போல் உடல் பதைத்துத் "தமக்கையீர்! நம் இரு முதுகுரவர் இறந்த நாள் தொட்டு நும்மையே அன்னுராக எண்ணி இருக்கின்ற என்னைத் தனியே தவிக்க விட்டு நீர் தணந்து செல்லுதல் தகுமோ? உமக்கு முன்னே யானே செல்கின்றேன்" என்று தம் உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்து நின்ருர். திலகவதியார் "இருதலைக் கொள்ளி எறும்பு போல்" ஆயினர். தம்பியார் உயிர் விடாது தரணியில் பலநாள் தழைத்திருக்க உளங்கொண்டார். ஆதலின், தாம் உயிர்விடத் துணிந்ததை நிறுத்திக் கொண்டார். அன்று முதல் அணி அலங்காரங்களை அறவே ஒழித்தார்; கைம்மைக் கோலமே கடமையாகக் கொண்டார். இல்லத்தில் இருந்தே தவ ஒழுக்கத்தை மேற்கொண்டு எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் சீலத்தராய் விளங்கினுர்.

இதனைச் சேக்கிழார் செந்தமிழ் செம்மையுறச் சித்தரித்திருப்பதைப் படித்துப் படித்துச் சுவைக்க வேண்டியது நம் கடமை.

தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருலகணைய உறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங் தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யார்இருந்தார்

இச் செய்யுள் சொல்லழகும் பொருளழகும் தருவதோடு, அம்மையாரது அருள் அழகையும் எத்துணை யழகாக நமக்கு எடுத்துக் காட்டுகிறது பாருங்கள்.

சின்னுள் சென்றதன் பின் மருள் நீக்கியார் சைவ சமயம் விட்டுச் சமண சமயம் புகுந்தார். திலகவதி

யார் உள்ளத் துறவுடையராய் நடு நாட்டின் நாயக மாய் விளங்கும் திருவீரட்டானம் என்னும் திருப்ப தியை அடைந்து செந் நெறியாம் சிவ நெறியை அடைய விருப்பங்கொண்டார்.

கெடில நதி பாயும் சிறப்புடைய் திருவீரட்டா னஞ் சென்ற அம்மையார் மெய்த்தொண்டு புரிய லானூர். கடுங் கதிர்ச் செல்வன் கடலிடைத் தோன்று தற்கு முன் எழுந்திருப்பார். திருவலகு கொண்டு திருத்தளியைக் கூட்டித் தூசு போக்குவார். ஆம யத்தால் ஆலயத்தை மெழுக்கிடுவார். மலர் பறித்து மாலை தொடுத்து மாதொரு பாகனை வழிபடுவார். இம் முறையில் நாள் தவருது திருத்தொண்டு செய்து வந்தார். இதுவன்றோ உள்ளத் துறவு? இதனை எவரும் இயற்றலாம் அன்றோ? இதற்கு மழித்தலும் நீட்டலும் வேண்டுமோ? நாடு கடந்து காடு புக வேண்டுமோ? மனத்தின் கண் மாசிலராய், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று நம் கடமை யைச் செய்துவரின், அவன் கடன் அடியேனையும் தாங்குதல் என்பது தானே பெறப்படும் அன்றோ? இவ்வாறு பன்னாளும் திலகவதியார் பரமனை வழி பட்டு வந்தனர்.

திலகவதியார் இறைவனைத் தமக்காக எதுவும் வேண்டாது, 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினூர்.' ஆயினும் தம் இளவல் அகச் சமயம்விட்டுப் புறச்சமயமாம் அமண் சமயம் புகுந்தமைக்கு மட்டும் சிறிது மனம் புழுங்கினூர். தம் இறைவர் மாட்டு இக்குறையை விண்ணப்பித்து வந்தனர். அம்மை வேண்டுகோளை அரனூரும் தீர்த்து வைத்தார். மருள் நீக்கியாரும்

மங்கைபங்கனது மறக் கருணையால் மீண்டும் சிவ நெறி புக்குச் சிறப்பு எய்தினர். அவரே **திருநாவுக் கரசர்** என்னும் திருநாமம் பூண்ட பெருநாவுக்கரசர் ஆவர்.

திலகவதியார் தம் குறை நீங்கப் பெற்றவராய், இனி யாதொரு குறையும் இல்லவராய், தம் திருத் தொண்டை இடைவிடாது புரிந்து இறைவனது இன்னருளைப் பெற்று இலகுவார் ஆயினர் ''

' நாடுகளில் புக்குழன்றும் காடுகளில் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தை இலார் நிகழ்ந்திடுவர் பிறப்பில் ''

என்னும் நிலையினைப் பெறாராய்

இறைஞானம்
' கூடுமவர் கூடரிய வீடுமதுங் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர் '

என்னும் நிலையை அம்மையார் எய்தினர்.

# 3. கொண்கனூர்க் கேற்ற கோதை

மக்கள் மேற்கொள்ள வேண்டிய அறம் இரண்டு. ஒன்று இல்லறம், மற்றொன்று துறவறம். முன்னையது எளிது. பின்னையது அரிது. நாயனூர் துறவறத்தைப் பற்றிக் கூறும்போது "அறன் எனப் பட்டதே இல் வாழ்க்கை, அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று" என்று கூறுகின்றனர். ஈண்டு அஃது என்றது துறவறத்தை என்க. "அஃது பிறன் பழிப்பது இல்லையாயின் நன்று" என்று கூறுதலினின்று அதனை மேற்கொள்ளுதல் அருமையுடைத்தென்பது அறியக் கிடக்கிறது. மேலும், அப் பெரியார் இல்லறத்தைப் பற்றிய கருத்தை உற்றுநோக்கின்,

> "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
> போஒய்ப் பெறுவ தெவன்?"

என்று வினவும் முகத்தால், துறவறத்தில் துன்புற்று எய்தும் பேற்றினை இல்லறத்தினின்றே இனிதுற எய்தலாம் என்பது பெறப்படுகிறதன்றோ?

இவ்வாறு துறவற நெறியினை மேற்கொளாமல் இல்லற நெறியினின்றே அழியா இன்பம் அடைந்தவர் உளரோ எனில் உளர் என்க. அவரே அப்பூதி அடிகளார் என்னும் அந்தணப் பெரியார் ஆவர். இல்லறத்தினின்றே திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயரை எழுதியும் சொல்லியுமே துன்பில் பதம் பெற்றார். அவர் பெற்ற நிலையினை பெட்புறப் பேசினர் சிவப்பிரகாசர்.

"உற்றுன் அலன் தவம் தீயில்நின் ருன் அலன் ஊண்புனலால்
அற்றுன் அலன் நுகர் வுந்திரு நாவுக் கரசெனும்பேர்
சொற்றுன் எழுதியும் கூறியு மேஎன்றும் துன்பில்பதம்
பெற்றுன் ஒருநம்பி அப்பூ திஎ னும் பெருந்தகையே"

அப்பூதி அடிகளார் திருவையாற்றினின்று குடந்தை செல்லும் நெறியில் உள்ள **திங்களூர்** என்னும் பதியினர். அது திங்களூர் என்னும் பெயருக்கேற்பத் திங்கள் போல விளக்கமுடைய ஒரு பதியாகும். இவ்வூரினுக்கு விளக்கம் தந்த பெரியார் அப்பூதியார் என்னலாம். அவர் தாண்டவம் புரியவல்ல தம்பிரானுர்க்கு அன்பர். எல்லையற்ற இல்லற நெறியார்; உயிர்க்குறுகண் செய்யாத தவத்தின் மிக்கவர். புகழ் அவரை நாடியதன்றி, அப்புகழை அவர் நாடினுரில்லை. ஆகவே, அவரை "ஈண்டிய புகழின் பாலார்" என்றே சேக்கிழார் செப்பினுரே அன்றி, ஈட்டிய புகழின் பாலார் என்று இயம்பினுர் அல்லர். இதனை ஓர்ந்து உணர்வோமாக. அவர் எல்லையில் தவத்தின் மிக்கார் என்பதற்கிணங்கக் களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்து விளங்கினர். தவத்தின் மிக்கவரே இக் குற்றங்களைக் காயவல்லுநர் என்பதை நன்கு உணர்ந்த வள்ளுவப் பெருந்தகையார், இக் குற்றங்களின் கொடுமைகளைத் துறவறத்தின்கண் பேசிக் கடிவாராயினர்.

அப்பூதி அடிகளார் தவத்தார் ஆதலின், நெறியின் புறஞ்செலா நிலைமையால், வளமிகும் மனையின் வாழ்க்கையினை மேற்கொண்டவராயினர். அப்பூதியடிகளார்

"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

என்னும் சீரிய கொள்கையினராய் இருந்தமையின்,

தம் பெயரையும் பூதியார் என்று கொண்டனர் போலும். பூதி என்னும் சொல் செல்வம் என்னும் பொருளுடையது. இச் செல்வர் உலகறிந்த உத்தமராய் உலவியமையால், உலகறி சுட்டாகிய அகரம் சேர்ந்து, அப்பூதியார் என்று குறிப்பிடப்பட்டனர் எனக் கூறினும் தவறில்லை என்க.

அப்பூதியடிகளார் ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணாத திருநாவுக்கரசென்னும்* சீரியர்பால் தம் சிந்தையைச் செலுத்தியவராய், அவரையே தம் குலக் கடவுளாகக் கொண்டு வந்தனை வழிபாடு ஆற்றி வருவாராயினர். அவ்வகப்பண்பு புறத்தும் பொலிவதாயிற்று. திருநாவுக்கரசர் திருப்பெயரால் திருமடங்கள் தண்ணீர்ப்பந்தர் முதலான பல்வேறு அறங்களைப் படியில் திகழப்பரப்பி வந்தனர்; இவையேயன்றித் தம்மனைப்பால் உள்ள நிலையியற் பொருள்களும் இயங்கியற் பொருள்களுமான அளவைகள், நிறைகோல், மக்கள் ஆ, மேதி இவற்றிற்கும் திருநாவுக்கரசர் திருப்பெயரை இணைத்தே சுட்டி வந்தனர். என்னே அவர்க்கு அப்பர் பெருமானிடத்து அமைந்த அன்பின் மாட்சி! தமக்கு இருந்த இரு திரு ஆண் மக்களை, இளைய திருநாவுக்கரசு என்றும் மூத்த திருநாவுக்கரசு என்றும் மொழிந்து ஆர்வமுற அழைத்துவருவார் ஆயினர்.

இன்னணம் அன்பு செலுத்திய அப்பர் பெருமானும் திருநாவுக்கரசரை அப்பூதியார் கண்டதுண்டா எனின், அதுவும் இன்று. ஆனால், மன்னுசீர்வாக்கின் வேந்தர் அடிமையும், தம்பிரானார் அருளும் கேட்டவர். கேள்வி முகத்தான் அவர்பால் ஆரா அன்பு அமையப் பெற்றவர்.

இப் பண்பு தமிழ் நாட்டுப் பெருமக்கட்கு அமைந்த தனித்ததொரு பண்பாடேயாகும். அப் பூதியடிகளாரைப் போலவே வடிவுதாம் காணா நிலையிலும் கலந்த அன்பினராய் இருந்தவர், கோப்பெருஞ் சோழர் என்னும் கோமகனார். அவர் பிசிர் என்னும் ஊரினரான ஆதன் என்பாரின் தந்தையாரிடத்தில் அளவு கடந்த அன்புடையவராய் இருந்தனர். ஆதன் தந்தையார் ஆவார் ஆந்தையார் என்னும் புலவரே. அவர் ஊரும் இணைக்கப்பட்டுப் பிசிர் ஆந்தையார் என்று கூறப்படுபவர். அப் பண்பு தமிழரிடையே தழைத்திருந்தமையான் அன்றோ, மாதானுபங்கி என்னும் மாபெரும் புலவர்,

புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

என்று கூறிப் போந்தார்.

ஆகவே, அப்பூதியார் அப்பர் பெருமானார் ஆக்கைப் பொலிவைக்காணாவிடத்தும் அன்புப் பொலிவைக் கண்டு வாழ்ந்ததில் வியப்பில்லை யன்றோ !

அவ்வப்பூதியார் கொள்கை வழுவா வண்ணம் உடனிருந்து உதவி வந்தவர் அவர்தம் மனத்திற்கினிய மாபத்தினியார் ஆவர் என்பதையாம் மறத்தல் கூடாது. இன்றேல், அப்பூதியார் திருநாவுக்கரசர்பால் கொண்ட அன்பின் திறத்தை அலைத்துக் கலைத்து இருப்பர். தம் கணவனார்க்குப் பித்தம் தலைக்கொண்டது போலும் என, அதனைத் தீர்க்கப் பரிகாரம் தேடியும் இருப்பர் "மாபெருந் தெய்வங்களை வந்தித்துச் சிந்திப்பதன்றி மானிடர் ஒருவரையா மனத்துக்கொண்டு வணங்குவ"தென்று அதனைக் கண்டித்துக் கடிந்தும் இருப்பர். அவ்வாறு செய்யா

மையினின்றே அம்மையார் **கொண்கனூர்க் கேற்ற கோதை** என்பதைக் காணப்பெறுகின்றோம். அல்லவா! இப்பண்பு அப்பூதியடிகளாரோடு வாழ்வு நடாத்திய அம்மையார்பால் ஆதிமுதல் அந்தம்வரை அமைந்ததொன்றும். இதனைத் தொடர்ந்து பேசப் போகும் வரலாற்றிலும் காண்போமாக.

அப்பூதியடிகளார் இன்னணம் வாழும் நாளில் எந்தத் திருநாவுக்கரசரது திருவடியிணைகளை மறவாது வந்தித்துச் சிந்தித்துக்கொண்டு அடிகளார் வாழ்ந்திருந்தனரோ, அப் பெரியார் சிவக் களிற்றின் திருப்பழனத் திருத்தளியைப் பணிந்து கொண்டு, திங்களூர் மருங்கு வழிப்போதுவார் ஆயினர். அன்னணம் போதரும் திருநாவுக்கரசர்,

> அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
> உளமனைய தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்
> குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
> வளமருவு நிழலுருதண் ணீர்ப்பந்தல் வந்தணைந்தார்.

வந்தவர், மந்தமாருதச் சீதப் பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தனர். இவற்றோடு திருநாவுக்கரசெனும் பேர் எம்மருங்கும் சந்தமுற வரைந்துளதையும் கண்டு உளம் சிந்தித்தார். தம் பெயரால் இத் தொண்டு இங்கு நிகழக் காரணம் யாதோ என்பதை அறிய அவர் உளம் விழைந்தது. ஆண்டுளாரை ஈண்டிநின்று "இப்பந்தர் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யாரோ? உணர்வீரேல் உரைமின்" என்று உசாவினர். ஆண்டிருந்தவர்கள் "செப்பருஞ் சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்" என்று செப்பினர்.

ஈண்டுச் சேக்கிழாரின் சீரிய புலமைக் குணத்தை யாம் போற்றாதிருக்க ஒண்ணாது. சேக்கிழார் பெருமானார் திகழ்ந்த காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டு என்பதை வரலாற்றாசிரியர் வரைந்த உண்மை. ஆகவே, இற்றைக்கு ஏறக்குறைய எட்டு நூறு ஆண்டுகட்கு முன்பிருந்த மூதறிஞர் என்பது பெற்றாம். அம்மூதறிஞர் இக்காலத்து நவீனம் எழுது முறைப்படி இவ்வரலாற்றினை எழுதியிருப்பாராயின், அவரது எழுத்துப் புலமையை என்னின்று இயம்புவது! இக்காலத்தில் நவீனம் எழுதுவோர் கையாளும் பல்வேறு கைத்திறன்களின் ஒன்று, தாம் தொடங்கும் கதைக்குரிய நாயகன் பெயரைச் சுட்டாது, அவனுடைய செயல்களை மட்டும் பல பக்கங்களில் எழுதிச் சென்று திடுமென ஓர் இடத்தில் சுட்டிக் காட்டுவதாகும். அதனைப் படிப்போர் "ஆ! இதுவன்றோ நவீனத்தின் நயம்! இப்படியன்றோ எழுதுதல் வேண்டும்" என்று இன்றும் இறும்பூதுற்றுப் இனிது இயம்புவர். இம்முறை பண்டையது; புதியதன்று. காவிய உலகில் காணப்படுவது. இதோ பார்மினோ பார் மின்! சேக்கிழார் என்னும் தொன்று தொட்ட நாவலாசிரியர் அப்பூதியடிகளாரைப்பற்றிப் பேசப்புகுந்து, முன் செய்யுட்களில் அவர் பெயரைப்பற்றி, யாது ஒன்றும் கூறாது ஏழாவது செய்யுளில் அறிவிப்பார் ஆயினர். இஃது ஒன்றே சேக்கிழாரின் சீரிய கூரிய மதி நுட்பத்திற்குச் சான்று அன்று. அவர் எழுதியுள்ள நூலை எப்பக்கம் புரட்டினும் எச் செய்யுளைப் படிப்பினும் இன்னோர் அன்ன நயங்கள் செறிந்து மலிந்து காணக் கிடக்கின்றன. அவற்றை நூலின் ஊடே ஊடே கண்டு இன்புறுதல நம்மனோர் கடமையாகும்.

தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசர் அவ்வறங்களை அமைத்தவர் அப்பூதியார் என்பதை அறிந்தார். அந்த அளவில் அவர் அமைந்தார் அல்லர். அப்பர் பெருமானூர் அவ்வன்புடையாரைக் காண விழைந்தார். அவர் கருத்தை அறிய அவாவினூர். அவரை நாடித் தாமே செல்லவேண்டுமெனச் சிந்தனையும் கொண்டார். இன்னோர் அன்ன எண்ணங்களை மனத்தகத்துக்கொண்ட திருநாவுக்கரசர் தமக்குப் பெயரைக் கூறியவர்களையே நோக்கி "**அவர் எவ்விடத்தார்**" என்று வினவினூர். அப்பர் வினவிய வினா, "அவர் எவ்விடத்தார்?" என்பதே. முன்பு வினவிய வினா "**இப் பந்தர் இப் பெயர்இட் டிங்கமைத்தார் யார்?**" என்பது. அதற்குக் கிடைத்த விடை "**செப்பருஞ் சீர் அப்பூதியடிகளார்**" என்பது. அம்முறையில் இரண்டாங் கேள்விக்கு விடையிறுக்க வேண்டின், **இவ்விடத்தார்** என்பதே ஆகும். அன்னணம் சுருங்கிய விடையை அவர்கள் கூறினூர்கள் அல்லர். அப்பரைப் பல வினுக்களை எழுப்ப அவர்கள் விரும்பினூர்களும் அல்லர். அப்பர் பெருமானின் உளப்பண்பை உணர்ந்து கொண்டார்கள். அவரது அகத்துக் கருத்தை முகத்துக் கண்டார்கள். உடனே காலக் கழிவு இன்றி அப்பூதியடிகளார் குலம், குடி, இவற்ரூடு அவரைக் காண்டற்குரிய வழிகளையும் வாய்ப்பக் கூறினர். "**துன்னிய நூல் மார்பர்**" என்றனர், **இத் தொல்பதியாகிய திங்களூர் வாசி** என்றனர் "**தம் மனையின் கண் சென்றனர்**" என்றனர். அம் மனைக்கு **இது போதுதான் சென்ரூர்** என்றனர். அம்மனை சேய்மையில் உள்ளதன்று; "**அண்மையில் உள்ளதே.**" என்றும் கூறினூர். இதனுல் நாம் அறியக் கூடியவை

யாவை? அவர் அந்தணப் பெரியார் என்பதனால் அவர் அடையாளம் கூறி, அவரை நாடி வேற்றூர் புகவேண்டா உள்ளூர் வாசியார் என்று அறிவித்து, "அவர் யாரோ ஒரு சந்நியாசி. இன்னோரன்ன அறங்களை ஆற்றி வருகின்றனர்" என்று நினையாதிருக்க அவர் இல்லறத்தார் என்பதைச் சுட்ட மனையின் கண் சென்றனர் என்று தெரிவித்து, இப்பொழுது சென்றால் அவரை இல்லத்திலேயே கண்டு உரையாடலாம் என்று குறிப்பார்போல இப்பொழுது சென்றனர் என்றும் விளக்கி, "அவ்வில்லம் பலகாவதம் இருப்பின், யாது செய்வ"தென்று வந்தவர் போகாதவாறு இருத்தல் கூடும் என்று அறிந்து, அவர் மனை அண்மையில் உள்ளதன்றிச் சேய்மையில் உள்ளதன்று என்று விளக்கினர் எனில், உளநூல் பண்பை எவ்வளவு நுட்பமாக நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்பதை யாம் எண்ணி இறும்பூதும் இறுமாப்பும் எய்த வேண்டாவா? இத்துணைக் கருத்தும் பொதுள ஈண்டும் பாக்களைப் பெருக்கிப் பாழ்படுத்தல் அடாது என்று அறிந்து பாதி பாட்டிலேயே இப் பண்புகளை யடக்கிப் பேசிய சேக்கிழார் பெருமானார் செப்பரும் புலமையை என்னென்று வியப்பது! இன்னணம் பாடும் வன்மை விரல்விட்டு எண்ணவல்ல ஒரு சில புலவர்க்கே வாய்ப்பதன்றி, ஏனைய புலவர்கட்கு வாயாததாகும். "இத்துணைப் பொருட் பொலிவுக் குக் காரணமாய் இருந்த அடிகள்."

துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவும் சேய்த்தன்று நணித்
தென்றார்

திருநாவுக்கரசர் முகவரி முதலான குறிப்புக்களு டன் அப்பூதியார் இல்லத்தை நோக்கித் தூய வெண் ணீறு துதைந்த பொன்மேனியராய்த் தாழ் வடமும் நாயகன் சேவடி தைவரும் சிந்தையராய் நைந்துருகிப் பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல் மேய செவ்வாயுமுடையராய்ப் புறப் பட்டனர்.

இவ்வாறு மங்கலமாம் திருவேடப் பொலிவோடு தம் இல்லம் நோக்கிப் போதரக் கண்ட அப்பூதியார் தம்பிரான் தமருள் ஒருவர் எனத் துள்ளிப் போந்து வாகீசர் கழல் பணிந்தார். மற்றவர் பணியும்முன் அரசும் எதிர்பணிந்தார். அப்பூதியார் அப்பரை நோக்கி "கருணைபுரிவடிவுடையீர்! யான் முடிவில் தவம் செய்தேன்கொல்! இன்றெனில் நீர் என்குடில் போந்தருளி இருப்பிரோ?" என்று பணிமொழி பகர்ந்து பணிந்து நின்ருர். திருநாவுக்கரசர் "அன் பரே, யாம் ஒரு குன்றவில்லாரைத் திருப்பழனத்துள் இறைஞ்சி வருகின்றோம். வழிக் கரையில் நீர் அமைத்த தண்ணீர்ப் பந்தல் முதலான அறம் பலவும் கேட்டு இவண் போந்தோம். அவ்வறங்கள் நும் பெயரால் நடத்தல் இன்றி, **வேறு ஒருவர் பெயரால்** நடப்பதன் கருத்துத்தான் என்னே? அதனை நாடவே ஈண்டு நண்ணினேம்" என்றனர். இம் மொழிகளைக் கேட்ட துன்னுநூல் மார்பர் துணுக்குற்ருர். நிலை யழிந்த சிந்தையர் ஆனுர். வேறு ஒன்றும் சுடுசொல் கூறத் துணிவு பெருதவராய், "நன்றருளிச் செய்தி வீர்" என்று மட்டும் கூறினுர். "வேருெரு பேர் என் றீரே, தமக்கு நேர்ந்த இன்னல்களைத் திருத் தொண் டின் உறைப்பாலே வென்றவர்தம் திருப்பேரோ

வேருெரு பேர்? என்றும், செம்மைபுரி திருத்தொண்டே இம்மையில் உய்யும் வகைக்கோர் உறுதுணை யென்று எம்போல்வாரும் தெளியச் செம்மைபுரி திருநாவுக்கரசர் திருப்பெயரையன்றே யான் வரைந்துள்ளேன். அதனை வேருெரு பேர் என்றீரே. அவர் பெருமை அவனியில் அறியாதார் யார் உளரே? மங்கலமாம் திருவேடத்துள் நின்று நீர் அறியாது இவ்வண்ணம் அறையலாமோ? நீர் எங்குளீர்? நீர் யார்?'' என்று அன்பும் சிறிது வன்பும் கலந்த மொழிகளில் வினவலானுர்.

ஈண்டு ஓர் ஐயம் எழ இடம் உண்டு. அப்பூதியார் களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தவர் என்று முன் அவர் குண நலம் பேசிப் பின் சிறிது வன்மையுற ஈண்டுச் சில வார்த்தைகளை வழங்கல் அடுக்குமோ எனில், அடுக்கும். எவ்வாறெனின், தமக்கோ தம் குடிக்கோ பிறர் இடுக்கண் புரியின் அதன் பொருட்டுச் சினவுவரேல், அவர் குணம் முன்னுக்குப்பின் முரண் என்று மொழிந்து, குற்றங் காணல் பொருத்தமுடையதாகும். அவ்வாறின்றி, உலகறிந்த ஒரு பெரும் பெரியார் திருப்பெயரைப் புறக்கணித்து வேறு ஒரு பெயர் என்று கூறியதே அவரைச் சீற்றம் கொள்ளச் செய்தது. அஃதான்றியும், மங்கலமாம் திருவேடத்துள் நின்று திருநாவுக்கரசர் திருப்பெயரைத் தம் வாயாலும் மொழியாது வேறு ஒரு பேர் என்று செப்பியதாலும் செற்றம் எழுந்தது என்க. இது நிற்க.

அப்பூதியார் உளப் பண்பை ஆளுடைய அரசு அகத்துள் கொண்டார். தாமே அந்தணர் பாராட்டும் அடியர் என்பதை அறிவித்துக்கொள்ள அவாவினுர்.

இந் நிலையில் செயற்கரிய செய்கலாத சிறியர் ஆயின், "ஐயா! நீர் யாரைப் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றீரோ, அந்தப் பேர்வழியே யான். உம் அன்பை மெச்சினேன்." என்று தற்பெருமையைப் பறைசாற்றியிருப்பர். அன்னணம் இன்றித் திருத் தொண்டின் நெறி நின்ற திருநாவுக்கரசர், தம்மை அறிவித்துக்கொண்ட நிலையை உன்னி உன்னிப் பார்ப்பீராக. ஓர்ந்து ஓர்ந்து உணர்வீராக.

திருநாவுக்கரசர் தம்மைச் சிறியர் என்றும், தெருளும் உணர்வும் இல்லாதவன் என்றும் கூறிக்கொள்கின்றார். இவ்வாறு கூறியே தம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிறார். இதுவன்றோ சீரிய பண்பு. "பணியுமாம் என்றும் பெருமை" என்று வள்ளுவர் மொழிந்த வாய் மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இவரையன்றி வேறு யாரைக் காட்ட இயலும்? திருநாவுக்கரசரது பணிவின் திறனைப் பாவலர் பெருந்தகையார் சேக்கிழார் பெருமானார்,

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையில் நின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வும்இல்லாச் சிறுமையேன் யான் என்றார்.

என்று பாவால் பாடி நாவால் போற்றுகின்றார்.

அப்பூதியார் இந்நிலையில் எந்நிலை அடைந்திருப்பார் என்று எழுதவும் வேண்டுமோ? "கும்பிடச் சென்ற தெய்வம் குறுக்கே வந்தது போல்" அன்றோ எண்ணி அப்பூதியார் அகங்களித்தார். அப்பூதியார் கர கமலம் மிகை குவிந்தது. கண்ணருவி பொழிந்தது. உரை குழறியது. உடம்பெலாம் உரோம புளகம் பொலிந்தது. தரையின்மிசை வீழ்ந்தார். அப்பர்

சர்ண கமலம் பூண்டார். அற்றவர்கள் அருநிதியம் பேற்றுர்போல் முற்ற உளம் களி கூர்ந்தார்.

அப்பூதியார் பாடினார்; மனைவியார் மக்கள் முதலான ஒக்கலையும் உடன்கொண்டு இறைஞ்சினார். அப்பரை ஆசனத்திருத்திப் பூசனைகள் புரிந்தார்; "முனைவரை உள் எழுந்தருளுவித்து அவர் தாள் முன் விளக்கும் புனைமலர் நீர் தங்கள்மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்" திருவமுது செய்விக்கும் நேசமுற வேண்டி நின்றுர். அவரும் அதற்கு நேர்ந்து கொண்டார்.

அப்பூதியார் அடைந்த இன்பத்தைக் கண்ட ஆருயிர் மனைவியார் எந்நிலையில் இருந்தனர்? அம்மையாரும் அளவிலா ஆனந்தம் கொண்டார். "எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே!" என்றுர். "இது மைதிகழ்மிடற்றினன் தன் அருளினால் வந்ததென்று மனத்துள் கொண்டார்" விரைவுடன் சமைக்க அட்டில் புக்கார். தூய நற் கறிகளான அறுவகைச் சுவையால் ஆக்கி ஆய இன் அமுதும் அமைத்து வைத்தார். கொண்கனுர்க்கேற்ற கோதை அல்லவா அப்பூதியார் வாழ்க்கைத் துணைவியார்?

அடியரை அமுது செய்விக்க வாழையிலை அறுத்துத் தரத் தம் சேயாம் மூத்த திருநாவுக்கரசைப் புறக்கடைக்குப் போக்கினர். மதலையும் மன மகிழ்ச்சி கொண்டு புறக்கடை சென்று கதலிக் குருத்தைக் கத்திகொண்டு ஈரும்போது, வாளரா ஒன்று அம்மகனுர் அங்கையில் தீண்டியது. என்றாலும், அதனை யாரும் அறிய வெளியிடாது கொய்த குருத்தைத் தம் தாயர்பால் வைத்துப் படிமிசை மயங்கி வீழ்ந்தான்.

பாந்தள் தீண்டியதை அறிவிப்பின் வந்த பெரியார் உணவு கொள்ள வாயாது போகுமே என்னும்

திருந்திய கருத்தே அதனை வெளியிடாது செய்தது. "மகனறிவு தந்தையறிவு" அன்றோ? விரையொன்று இடச் சுரையொன்று காய்க்குமோ?

தரைமிசை தளர்ந்து வீழ்ந்த தனையனைப் பெற்றோர் கண்டார்; மேனி விளங்கிய குறியைக் கண்டு விடத்தினால் வீந்தான் என்று விளங்கிக்கொண்டார். உளம் பதைத்து உளம் நொந்தார். உடனே துளங்குதல் ஒழிந்து, தொண்டர் அமுது செய்வதற்குச் சூழலானார்.

ஈண்டுச் சேக்கிழார் பாடிய திறத்தையும் பார்க்க வேண்டும். தாயாரும் தந்தையாரும் உளம் பதைத்தனர் என்று கூறி உடனே துளங்குதல் இன்றி என்று கூறியது முறையோ எனில், இரண்டும் முறையேயாம். "கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்?" என்னும் முறைக்கிணங்க மகன் இறந்தான் என்றதும் இரங்கத்தான் வேண்டுமன்றோ? மக்கள் பண்புக்கிணங்க அதிலும் இருமுது குரவர் தாம் ஈன்ற மகனே இறந்தான் என்றபோது கலங்காதிருப்பரேல், அன்னார் உள்ளம் மக்கட் பண்புக்கிணைந்து பக்குவப்பட்டதன்று என்ற பழிச் சொல்லை உலகம் பகரும். ஆகவே, அவர்கள் உளம் பதைத்து உறுதுயர் உற்றது பொருத்தமே ஆகும். உடனே அன்னார் துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்யச் சூழ்வுற்றது, அவர்களது தொண்டின் முனைப்பின் வன்மையை வற்புறுத்தி நிற்கிறது.

கட்செவி கடிக்க மயங்கிய மைந்தனைப் பாயினுள் பெய்து மூடிப் புறமனை முன்றில் கரந்து வைத்தனர். அப்படி வைத்த செயலை அப்பர் அறவே அறியாதிருக்கவும் முயன்று அவர்க்கு அமுது செய்விக்க

அவாவி நின்றனர். கடிது வந்து வாகீசர் கழல் பணிந்து, "காலந் தாழ்க்கின்றது. அமுது செய்து, எம்குடி முழுதும் உய்யக் கொள்வீர்" என்று வேண்டி நின்றார். ஈண்டும் அப்பூதியார் வாக்கில் மங்கலச் சொல் பயிலுமாறு சேக்கிழார் அமைத்த திறனை நோக்கலாம்.

அப்பூதியார் அறிந்தோ அறியாமலோ, "எம்குடி முழுதும் உய்யக் கொள்வீர்" என்று கூறியுள்ளார். குடிமுழுதும் உய்யும் நெறி எப்போது கூடும்? மூத்த மகனார் உயிருடன் இருந்து அவன் வழி குடிதழைத்தால் அன்றோ? அவனே இதுபோது மயங்கிக் கிடக்கின்றான். ஆகவே, அப்பூதியடிகளார் அவனை எழுப்பியருளவும் வேண்டினார் என்னும் உள்ளுறைப் பொருளும் இருத்தலைக் காண்க. இவ்வாறு பாடும் பழக்கம் பெரும் புலவர்க்கு அமைவது என்பதைக் கம்பர் பாடலாலும் காணலாம்.

தயரதன் தன் மகனான தாசரதியை விஸ்வாமித்திரருடன் அனுப்ப ஒருப்பட்டு அவனை அழையுங்கள் என்று கூறுகையில் "திருவின் கேள்வனைக் கொணர்மின்" என்று கூறியதாகக் கம்பர் தம் நூலில் பாடுகிறார். இது பின்னால் இராமன் சீதையை மணத்தற்கு ஒரு நற்குறி வாக்காக உள்ள பொருள் தொடர் அன்றோ!

ஆகவே, அப்பூதியார் அப்பரை வேண்டத் தாண்டகவேந்தரும் தடையின்றி எழுந்து கைகால்களை விளக்கித் திருந்துமோர் ஆதனத்தில் ஏறினார். ஏறிய பின்பு எவர்க்கும் திருநீறு அளிக்கையில், "மூத்த சேயையும் காட்டுவீர்." என்றனர்.

ஆ! என்னே சேக்கிழாரின் பாநயம்! "மூத்த திருநாவுக்கரசு யாண்டுளன்? அவனைக் காணப் பெற்றி

லோரமே அழைமின்" என்று கழறுது "காட்டும்" என்று கூறியது தெய்வத்திருவருளால் எழுந்த மொழியன்றோ! காட்டும் என்னும் சொல் ஒளித்து வைக்கப்பட்டதைக் காட்டுமாறு ஆணையிடுவது போன்றதன்றோ? இதற்கு விடை அப்பூதியார் யாது கூறவல்லார்? பொய்மை கூறவும் அவர் உள்ளம் பொருந்தவும் இல்லை, வாய்மை கூறவும் அவர் வாய் வரவும் இல்லை. இரண்டிற்கும் இடையே, "இப்போது இங்கு அவன் உதவான்" என்றே விடை இறுத்தார். இப்போது இங்கு அவன் உதவான் என்றதனால், பின் திருவருள் துணை புரியுமேல், அவன் உதவக்கூடும் என்னும் குறிப்பும், இங்கு உதவான் என்பதால், அங்கு—அதாவது இன்பநிலை தூய்க்கும் துறக்கமாகிய அங்கு—அவன் உதவுவான் என்னும் குறிப்பும் தோன்றுகின்றன அன்றோ?

இந்நிலையில் அப்பர் உள்ளத்தில் ஏதோ தடுமாற்றம் நிகழ, அந்தணர் பெருமானை அன்புடன் நோக்கி, "ஐயரே! 'இப்போது இங்கு உதவான்' என்னும் மொழியை என் உள்ளம் ஏற்காது. மெய் விரித்து உரையும்" என்று வற்புறுத்தி வேண்டி நின்றார். இந்நிலையில் தம்பதிகள் இருவரும் தளர்வு கொண்டனர். இத்தளர்வு மைந்தன் இறந்ததற்கு அன்று. பெரியவர் அமுது செய்யும் பேறு இழக்க நேர்ந்ததே என்னும் தளர்வே அன்றி வேறன்று. மெய்விரித்து உரையும் என்னும் தொடர் அப்பூதியார் இன்னமும் மறைத்துப் பேசுதற்கு இடந் தந்திலது. வாய்மை தெரிவுற உரைக்கவேண்டும் என்னும் சீலத்தாராய் **மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார். உற்றது** என்னும் சொல்லின் பொருளை நாமே உணரப் புலவர் புகன்று

சென்றூர். உற்றது என்பது நடந்தது என்னும் பொருளது. நடந்தது யாது? பாம்பு கடிக்க இறந்ததும், இறந்தவனைப் பாயில் மூடிப் பதுக்கி வைத்ததும் ஆகும். இதனை, ஏன் சேக்கிழார் விளக்கிற்றிலர்? சொல்லின்றிச் சோர்வு கொண்டனரோ? அன்றி, அறிவு சோர்ந்து இவ்வாறு அறைந்து சென்றனரோ? இரண்டும் அல்ல. வேறு என்னை? இன்னோர் அன்ன நிகழ்ச்சிகளை - அதாவது அடியவர்கட்கு நேர்ந்த அல்லல்களைத் - தம் வாயால் கூறக் கூசுவர்; அஞ்சுவர் அருண்மொழித்தேவர். இஃது இவரது இயற்கைப் பண்பு. மெய்ப்பொருள் நாயனூர் வரலாற்றில் கைதவன் ஒருவன் கரந்து சென்று கத்திகொண்டு குத்திக் கொன்றதைக் கூறுகையில் "**தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய**" என்று பாடி முடிக்கிறூர். தான் முன் நினைந்த அப்பரிசு என்பது மெய்ப் பொருளாரைக் கொல்ல வேண்டும் என்னும் எண்ணம் அன்றி, வேறு அன்று. இன்னணமே ஏனாதி நாயனூர் வரலாற்றுள்ளும் புலவர் பெருந்தகையார் ஏனாதி நாயனூர் தம் பகைவனுல் கொலையுண்டதை "முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்." என்று மொழிந்து போந்தார். இவ்வாறு பாடும் ஆற்றல் இவர் பெற்றதால் அன்றே, இவர்க்குப் பின் போந்த வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர், "தூக்கு சீர்த்திருத் தொண்டர் சிறப்பினை வாக்கினுல் சொல்ல வல்லபிரான் சேக்கிழார் அன்றி, வேறு யாரே உள்ளார்?" என்று அறை கூவி அழைப்பாராயினர். ஆகவே, சேக்கிழார் கவியின் கவினை அளக்க இயலாது.

உற்றது பகரக்கேட்ட உத்தமர் வாகீசர் உடனே

எழுந்து சென்று ஆவிதீர் சவத்தை நோக்கினர். அண்ணலார் அருளும் வண்ணம் பா இசைப் பதிகம் பாடினர். பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்.

பாம்பு கடியுண்டவரை எழுப்புதல் இயற்கை. இஃது இக்காலத்தும் நிகழும் நிகழ்ச்சி.' எழுப்புதற்குத் துணையாக மணிமந்திர ஔடதம் என்னும் முத்துறையாலும் முயல்வர். அத்துறைகளில் அப்பர் ஈண்டு மேற்கொண்ட முறை மந்திர முறை. மந்திரம் என்பது என்னே? மந்திரமாவது நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழிதானே? இதுவே மந்திரத்தின் இலக்கணம். இவ்வாறு ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியர் கூறினர். வாகீசர் நிறைமொழி மாந்தர். ஆகவே, அவர் மொழி மறைமொழி. அதுவே மந்திரம் ஆயிற்று. மூத்த திருநாவுக்கரசு மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுவானைப்போன்று எழுந்தான்; எழுந்ததும் திருநாவுக்கரசர் செய்ய பூவடி வணங்கினன். அவரும் புனித நீறு அளித்தார்.

பிள்ளை உயிர்பெற்றதென்றால் பெற்றோர் எவ்வளவு பெருமகிழ்ச்சி கொள்ளவேண்டும்! இன்பம் அடைந்திலர். துன்பம் நிறைந்தனர். ஏன்? "அறிவரும் பெருமை அன்பர் அமுது செய்தருளுதற்குச் சிறிது இடையூறு செய்தான் இச் சிறுவன்" என்று சிந்தை நொந்தார். பின்பு அப்பர் உணவு அருந்த யாவரும் உணவு கொண்டனர். அப்பூதியார் இல்லத்தில் அப்பர் சின்னாள் தங்கினர். அப்பர் என்றும் அழியாப் புகழை அப்பூதியாருக்கு அளிக்க எண்ணினர். அதன் பொருட்டுத் தாம் பாடிய பதிகத்தில் "அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி" என்று

திருப்பழனப் பதிகத்து ஈற்றுப் பாடலில் இயைத்துப் பாடினார். அப்பூதியாரும் திருநாவுக்கரசர் திருவடிகளையே செப்பூதியமாக் கைக் கொண்டார்.

துன்றிய நூல் மார்பராம் அப்பூதியடிகளார் என்றும் நிலவும் துன்றும் புகழ் பெற்றது எதனால்? அன்னார் அப்பர் அடியினை அகத்துக்கொண்ட அருந்தொண்டினால் எனில், அது ஒன்று மட்டும் அன்று. அவரது அருந் தொண்டிற்கு அருந்துணையாய் நின்ற அவர் இல்லக் கிழத்தியாரது இணைந்த அன்பும் காரணம் ஆகும். அவ்வம்மையார் கொண்கனார்க்கேற்ற கோதையாராகக் குலவியதே பெருங் காரணமாகும். அவ்வம்மையாரைக் **கொண்கனார்க் கேற்ற கோதையார்** என்று கூறுதல் சாலவும் பொருத்தமானதே.

# கணவனார் விரதம் காத்த காரிகை

நில உலகில் குடும்பம் என்பது ஒரு சகடம் போன்றது. அச்சகடம் செம்மையுறச் செல்ல வேண்டில், அதில் பூட்டப்படும் பகடுகள் தம்முள் மாறின்றி இழுத்துச் சென்றால் அன்றி, அச் சகடம் செல்லாது. ஆகவே, குடும்பமாகிய சகடத்திற்கு எருதுகளாக அமைபவர் கணவனும் மனைவியுமே அன்றி, வேறல்லர். இது குறித்தே

மருவிய காதல் மனையாளும் தானும்
இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று

என்கிறது அறநெறிச்சாரம். கற்பனைக்கு ஊற்றும் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும்

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே"

என்று செம்மையுறச் செப்பிச் சென்றனர்.

இன்பம் வரினும் துன்பம் உறவரினும் இவற்றை இருவரும் பங்கிட்டே துய்க்க வேண்டும். "தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்களே" என்று ஆளுடைய அடிகளும் அருளிப் போயினர். இவ்விலக்கணங்கட்கு இயைய ஒழுகியவரே எண்டு எடுத்து இயம்பப்போகும் இலங்கிழையார் ஆவர்.

திருமகட்கு உறைவிடமாய்த் திகழ்வது திருச்செங்காட்டங்குடி என்னும் திருப்பதியாகும். அப்

பதியில் **பரஞ்சோதியார்** என்னும் பண்பாளர் ஒருவர் வாழ்ந்து வந்தனர். அன்னார் மாமாத்திய குலத்தவர். இவர் வடநூற் கடலுள் நன்கு ஆழ்ந்து திளைத்தவர். ஆயுள் வேதமருத்துவத்தில் அளவிலாப் பயிற்சி பெற்றவர். இவற்றோடு படைக்கலப் பயிற்சியும் பண்புறப் பயின்று இருந்தார். கரியும் பரியும் கலங்காது ஏறி அவற்றைக் கடாவும் தொழிலிலும் காசற்று விளங்கினார்.

“ கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனில், ”

என்னும் வள்ளுவர் வாக்கிற்குத் தாம் இலக்காதல் கூடாது என்ற காரணத்தால் பரஞ்சோதியார் பலகலைகளையும் பளகு அறப்பயன்றிருந்தும் பரமன் திருவடிகளில் பற்றுமிக உடையராய்ப் படிப்பின் பயன்வால் அறிவன் நற்றாள் தொழுதலே என்று அத்திருவடிகளைப் பரவி வருவாரானார். இதனைச் சேக்கிழார் பெருமான் வாக்காலும் உணரலாம்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளுவடித் தறிந்தபொருள் சிவன்கழலில் செறிவென்றே
கொள்ளும்உணர் வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்

பரஞ்சோதியாரது பரந்த புலமையையும் படைக்கலப் பயிற்சியின் மேம்பாட்டினையும் அறிந்த முதலாம் நரசிம்ம வர்ம பல்லவன் இவரைத் தமக்கு அணுக்கராய் அமைத்துக்கொண்டு இவர் ஏவல்வழி காவல் புரிந்து வந்தான். “அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்” அன்றோ!

பரஞ்சோதியார் அரசரது அன்புக்குரியராய் அருஞ் சிறப்புடையவராய்த் திகழ்ந்தனரேனும், அரனார் இடத்து அன்பு வைத்திருந்தது போலவே, அரனாரின் அணுக்கத் தொண்டரிடத்தும் இடையறா அன்புடையராய் விளங்கினார்.

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலினர்"

வேண்டிய பணிகளை விருப்புடன் ஆற்றி வந்தார். பெருந் தொண்டினைச் செய்து வந்தாரேனும், **சிறுத் தொண்டர்** என்றே தம்மைச் செப்பிவரும் சீலத்தராய்த் திகழ்ந்தார். "பணியுமாம் என்றும் பெருமை." என்பதற்கு இவரையும் ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

பரஞ்சோதியார் தம் பல்லவ மன்னவனது பகை வேந்தனாகிய இரண்டாம் புலிகேசியின்மீது தண்டுடன் சென்று அவனது வாதாபி நகரை வென்று வெற்றியுடன் மீண்டார். இவ்வாறு பன்னாடு சென்று அந்நாட்டு அரசர்கள் யாவரும் திறை செலுத்தித் திருவடி வணங்கச் செய்து திகழ்வார் ஆயினார்.

நரசிம்மவர்ம பல்லவன் பன்னாள் பரஞ்சோதியாரின் தொண்டின் நெறியை அறியாதவனாய் இருந்தான். ஒரு சில அமைச்சர்கள் அறையக் கேட்ட அரசன் அஞ்சி, "ஐயகோ ! அரனார் அன்பரையா நாம் ஏவல் கொண்டு இருந்தோம்." என்று எண்ணி அவரது அடியிணை இறைஞ்சி, "நீர் இன்ன பண்பினர் என்று உணராது இதுகாறும் இருந்தமைக்கு மன்னிப்பீராக. இனி நீர் உம் தொண்டினை முட்டாது செய்து வருவீராக" என்று பகர்ந்து நிறைந்த நிதியும் நீடிய விருத்தியும் ஈந்து விடை கொடுத்தான். அன்

புக்கு அரசு அடிபணிந்துதான் ஆகவேண்டும். அவற்றை ஏற்றுப் பரஞ்சோதியார் "இதுவும் பரமனார் செயலேபோலும்" என்று எண்ணியவராய்த் தம் உள்ளத்தால் பரவி "மன்னர் மன்னரே! யான் என் கடமைகளைச் செய்தேனே அன்றி வேறன்று" என்று சொல்லித் தம் இல்லம் போந்தார்.

பரஞ்சோதியார் வாழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரம் என்னும் ஒரு திருத்தளியுண்டு. அங்குள்ள பரமனை நாளும் பரவி மெய்யடியார்க்கான பணிகளைப் புரிந்து வந்தார். இவர் கொண்ட திருத்தொண்டு தீதின்றி முடிய இவர்க்கொரு வாழ்க்கைத் துணையியார் அமைந்தார். அவ்வம்மையார் திரு **வெண்காட்டுநங்கை** என்னும் திருப் பெயரினர். இத்தம்பதிகள் கருத்தொருமித்துக் களங்க மற்ற தொண்டர்களை முன்பு உண்பித்துப் பின்பு தாம் உண்ணும் நெறியில் பிறழாது ஒழுகி வந்தனர்.

தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய பண்ணியம்உண் ணீர்அமுதம்
ஏயபடி யால்அமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர்பால் மனமகிழ்ந்தார்

இவையே தொண்டர்க்கிட்ட உணவு வகையாகும். இவ்வாறு பெருவுணவு அளித்துப் பெருந் தொண்டராய் இருந்தும், சிறுத்தொண்டர் எனும் பேரே சிறப்புடனே பெற்று வந்தார் எனில், இவர் தொண்டின் மாண்பினை என்னென்று சொல்வது! இவர்கள் மனைமாட்சியின் மங்கலத்திற்கு நன்கலமாக நன் மக்கட் பேற்றையும் நன்கனம் அமையப் பெற்றனர். அம் மகவுக்குச் **சீராள தேவர்** எனும் திருப் பேரும் சாற்றி வளர்ப்பாராயினர். சீராள தேவர் சீமந்த புத்திரர்

ஆதலின், அம் மகவு பிறந்த மகிழ்ச்சியினால் பெருஞ் சிறப்புக்களைச் செய்து மகிழ்ந்தார்கள். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருநிதியம் வழங்கினார்கள்.

திருமகனார் வளர்ந்து பள்ளியில் பயிலும் பருவமும் உற்றார். அது கண்டு தந்தை மகற் காற்றவேண்டிய நன்றியாகிய அவயத்து முந்தியிருக்கச் செய்யப் பள்ளியில் பயிலுமாறு ஏற்பாடு செய்தார். மைந்தரும் மன மகிழ்ந்து பயில்வாராயினர். இவ்வாறு பரஞ்சோதியார் இகத்துக்கும் பரத்துக்கும் பயனுடைய செயல்களைத் தம் பரிவுக்குரிய மனைக்கிழத்தியாருடன் செய்துவந்தனர். இவருடைய செயலை இறைவனார் உணர்ந்தார்; உணர்ந்த அவர் இவருடைய மெய்த் தன்மை அன்பு நுகர்ந்தருளுதற்குச் சித்த மகிழ் வைரவராய் இவர் திருமனை நோக்கி வந்தனர்.

வைரவராய் வந்த இறைவனார் திருமுகத்தில் அருள் பொழியும் அணிமுறுவல் நிலவெறித்தது. பெருகன்பு தழைத் தோங்கியது. பரஞ்சோதியார் இல்லத்தை நெருங்க நெருங்க, சென்னெறியெல்லாம் கண்டார் எவரையும் சிறுத்தொண்டர் மனை வினவி கடிது வருவாராயினர்.

"எல்லாம் வல்ல இறைவர்க்குப் பரஞ்சோதியார் இல்லம் தெரியாதோ? அவ்வாறு இருக்க, ஏன் கண்டாரை எல்லாம் மனை வினவினார்?" எனில், அன்புள்ள இடத்தை நாடி ஆண்டவன் அருள் தானே செல்லும் என்பதை எவர்க்கும் அறிவிக்கவே ஆகும். வைரவர் வந்த நேரம் பரஞ்சோதியார் இல்லத்தில் இல்லா நேரம். அன்று இல்லத்திற்கு ஓர் இரவலரேனும் வந்து உணவு ஏற்கத் தாமதம் ஏற்பட்டதால், அவர்களை நாடி அழைத்துவரப் புறம் போந்திருந்

தார் பரஞ்சோதியார். ஆகவே, பரஞ்சோதியார் இல்லத்தில் பணிபுரியும் பணிமாதாகிய **சந்தன நங்கையார்** வைரவரை வரவேற்று, “இவ்வில்லாளர் நும்போலும் மெய்யடியாரை நாடிவர வெளிச்சென்றுள்ளார். நீர் அகத்தே வந்து அமர்ந்திருக்கலாம்” என்று அகமும் முகமும் மலர்ந்து நல்வரவு கூறினர். வந்த வைரவர் நாகரிகம் நன்குணர்ந்தவர். ஒழுக்கத்தினின்றும் சிறிதும் வழுவாதவர். ஆதலின், “அம்மணீ! மாதரார் தனித்துறையும் மனையகத்துத் தனித்திரோம்.” எனக் கூறிக் கொண்டிருக்கையில், திருவெண்காட்டு நங்கையார் ஓடோடியும் வந்தார் “பெரியீர் யாங்கள் அடியாரை அமுதுசெய்விக்கும் கடப்பாடுடையர்கள். இற்றைப் பொழுது இதுவரை எவரையும் கண்டிலோம். ஆகவே, அவர்களை நாடி என் அகத்தவர் சென்றனர். அவர் இன்னே விரைவில் இவண் வந்தணுகுவர். பங்கன் இருந்த பதிக்குக் கங்கை வந்தணைந்தாற் போல், நீரே இச்சிறு குடிலுக்குப் போந்ததை அவர் காணில், எல்லையில் இன்பத்துள் ஆழ்வார். ஆதலின், நீர் செல்லன்மின்” என்று அன்புகனிய மொழிந்தார்.

வைரவர், “அம்மையீர்! அவர் இன்றி யாம் உம் அகம் புகோம். யாம் கணபதீச்சரத்தில் ஆத்தியின் கீழ் அமர்ந்திருப்போம். வேண்டுமானால் ஆண்டு வந்து காணச் செய்வீர்” என்று கழறிப் போயினர்.

பரஞ்சோதியார் பகலவன் கதிர் ஒளி தம்மைப் பதைக்கச் செய்ததாயினும், யாண்டு திரிந்தும் எவ்வடியாரையும் கண்டிலர். இன்று தம் நோன்பு பழுதுபட்டது போலும், என்று பரிபவப் பட்டு இல்லம் வந்து புக்கனர். கணவனார் வாட்டம் கண்ட்

காரிகையார், "காதலரே! நம் கடிமனை நோக்கிக் கண்ணுதல் கரந்த கடவுளோ, என்று கருதும் வகையினரான ஒரு பைரவர் போந்தார். வட தேசத்தவர் என்று தம்மைக் கூறிக்கொண்டனர். யாம் எத்துணை இரந்து வேண்டினும் இவண் இருக்க ஒவ்வாது, தாம் கணபதீச்சரத் திருவாத்தியின் கீழ் இருப்பதாக இயம்பிச் சென்றுர்." என்று எடுத்து இயம்பினுர்.

ஈண்டுத் திருவெண்காட்டு நங்கையாரின் சொற்றிரம் பாராட்டுதற்குரியது. தம் கணவனுர்க்கிருக்கும் வேட்கையை அறிந்த அவ்வம்மையார் கணபதீச்சரத்து ஆத்தியின் கீழே அனேகர் இளைப்பாற இருக்கவும் கூடும். ஆதலின், அவர்களுள் பசியால் களைத்தவரை விரைவில் அழைத்துவர அவரது அச்சு அடையாளங்களைக் கூறியனுப்பியது அவ்வம்மையாரது நுண்ணறிவுத் திறனை நன்கு விளக்குகின்றது. மேலும், தாம் அவரை இருக்கச் சொல்லி இரந்து வேண்டியதையும் இயம்பியதனுல் கணவனுர்க்கிருக்கும் கவலை தமக்கு இருப்பதையும், அடியவரை உபசரிக்கும் அன்பு தம்பால் அமைந்திருப்பதையும் அறிவித்ததும் ஆயின. இவ்வம்மையார் கணவனுர் விரதம் காக்கும் காரிகையார் அல்லரோ?

பரஞ்சோதியார் பதை பதைத்துக் கணபதீச்சரம் சென்றுர். மனைவியார் கூறியாங்குப் பைரவர் இருக்கக் கண்டார். "பெரியீர்! கும்பிடச் சென்ற தெய்வம் எதிரே குறுக்கிட்டாற் போல், நீரே என் இல்லம் நாடி எழுந்தருளியது யான்செய் தவமே யாகும்." என்று கூறி, "ஏம் வீடு வந்து அமுது செய்து அடியேனை உய்விக்கவேண்டும்." என்று இரந்து பணிந்தார்.

பைரவர் பரஞ்சோதியாரது பணிமொழி கேட்டு, "ஐய, நீர் கூறுவது சரியே. யாம் உத்தராபதியோம். எம் உணவும் ஒழுக்கமும் வேறு. ஆதலின், எம்மை உண்பிக்க உம்மால் இயலாது." என்றனர். பரஞ்சோதியார் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போவது போல் வந்த அடியரும் நழுவிப் போகின்றனரே என்று வாட்டமுற்றவராய், "பெரியீர்! நீர் உம் கருத்தை அறிவிப்பின் அவ்வாறே செய்ய முயல்கின்றேன்." என்ருர்.

பைரவர் பரஞ்சோதியாரை நோக்கி, "உம்மால் செய்ய இயலுமா? யாம் ஆறு திங்கட்கொரு முறை பசுவை உண்பது பழக்கமாகும். அவ்வாறு உண்ணும் நாளும் இன்றே அமைந்தது. இது செய்ய உம்மால் இயலுமோ? இயம்புவீர்" என்ருர்.

இவ்வாறு பைரவர் சொல்லக்கேட்ட பரஞ்சோதியார் எல்லையில்லாக் களிப்பெய்தினுர். "உய்ந்தேன், உய்ந்தேன்; அடியனேன் உய்ந்தேன்; இஃது எனக்கு முன்புளதே. யான் முந்நிரையும் உடையேன். இதை முன்பே கூறியிருப்பின் முன்பே முடித்திருப்பேன். ஈண்டே சிறிது ஆற்றியிரும். இல்லம் சென்று நீர் வேட்டவாறே அட்டதன் பின் அழைத்துச் சென்று அமுதுண்பிப்பேன்." என்று பரவசமாய்ப் பகர்வாராஞர்.

பைரவர் பரஞ்சோதியாரது பரிவு கண்டு. "நண்பரே நீர் சிறிதும் சிந்தித்திலீர். யாம் உண்பது பசுவெனில், நீர் நாற்கால் பசுவென்று நம்பிவிட்டீர் போலும்! நாற்காற் பசுவன்று; நரப் பசுவே நாம் உண்பது. அப்பசு ஐயாட்டைப் பருவத்ததாய் அமைதல் வேண்டும். உறுப்பில் மறுவில்லாதாய் வயங்க

வேண்டும்.” என்று கூறி, “மற்றும் ஒன்று யான் கூறப்போகின்றேன். அது புண்செய் நோவில் வேல் எறிவது போல் வேதனை தரவல்லது,” என்று கூறி நிறுத்தினார். கொண்ட நெறியைக் கோதுரு வண்ணம் கொண்டு நடத்தும் பரஞ்சோதியார் வைரவர் வார்த்தைகளைக் கேட்டுச் சிறிதும் மனம் துளங்கினார் அல்லர். எவ்வாறேனும் அடியவரை அமுது செய்வித்தால் அதுவே தமக்கு இம்மையும் மறுமையும் இன்பம் பயக்கும் செயலெனக் கருதினார். ஆகவே, “நீர் உரைப்பன அனைத்தும் உரைத்து விடுவீர்.” என்று வேண்டி நின்றார். வடநாட்டு வைரவர் சிறிதும் சொல்லக் கூசாதவராய் “ஒரு குலக் கொழுமைந் தனாய், பெற்றவர் தம்முள் மனமுவந்து தாய் பிடிக்கத் தந்தை அரிந்து அட்டி உணவு அமைப்பரேல், அதுவேயாம் உண்ப”தென்று உரைத்திட்டார்.

இவ்வாறு, வந்த வைரவர் கூறுதல் அடாது என்று ஒரு சிலர் அறையவும் கூடும். ஆனால், ஈண்டுத் தான் அறிவுடை அறிஞர் நன்கு சிந்தித்தே தம் கருத்தினை வெளியிடத் தக்கவர் ஆவர். நிகழ்ச்சிகளை ஆதியோடந்தமாக அறிந்த , பின்பே அதைப் பற்றிய தடை விடைகளைத் தருதல் வேண்டும். அவ்வாறின்றித் தமக்குப் பிடிக்காதொன்றினைத் தள்ளிவிட்டுப் பிடித்த ஒன்றை மட்டும் போற்றுதலோ, தூற்றுதலோ அடாது. இன்னோர் அன்ன குணங்கள் மாந்தர்க்கு வருதல் இயல்பு என்று உணர்ந்த தமிழ் முன்னோர்கள் எச்சரிக்கையாக இல்லாமல் இல்லை. சமயம் வந்தபோதெல்லாம் இடித்தே இயம்பிச் சென்றிருக்கின்றனர்.

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணம் தோன்ரு தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும்.

இச் செய்யுளின் செம்பொருளை ஒருவர் நன்கு உணர்வரேல், நன்கு ஆராய்ந்து அறிதற்கு முன் ஒன்றைக் குறை கூறவோ, குணமாகப் புகழவோ முன் வரார் என்க. இனி என்ன நிகழ்கின்றது என்பதைச் சிந்திப்போமாக.

பரஞ்சோதியார் பைரவர் பகர்ந்த மொழியினைக் கேட்டதும் சிறிதும் பரிபவம் உற்றிலர்; பரவசமே உற்றனர். அவர் கூற்றுக்கு விடையாக விரிவாகவும் பேசிலர்; 'இதுவும் அரிதன்று' என்றே இயம்பி "நீர் எம் இல்லம் போந்து அமுது செய்தால் அதுவே சாலும்." என்று அறைந்து அவர் மலரடி வணங்கி மனத்தினும் முந்திய கடு வேகத்தோடு கடிமனை வந்துற்ருர்.

நீண்ட பேச்சால் தம் இசைவினைத் சிறுத்தொண்டர் அறிவித்திருக்கும் நிலையில் சேக்கிழார் பாடல் அமைத்துப் பாடி இருப்பாராயின், உள்ளத்தில் பகையும் உதட்டில் உறவும் கொண்டு பேசுகிருர் போலும் என்று பைரவர் எண்ணிவிடுவர். இவ்வாறு எண்ணிவிடக்கூடாது என்பதற்காகவே, "இதுவும் அரிதன்று" என்று சிறுத்தொண்டர் கூறியதாகச் சேக்கிழார் அமைத்தது அவரது நுண்ணறிவுத் திறனை நுனித்தறிதற்கு ஓர் இடமாகத் துலங்குகிறது. இது நிற்க

"சென்ற கணவர் இன்னும் வந்திலர்." என்று வாட்டமுற்றவராய் வீட்டில் உற்ற திருவெண்காட்டு

நங்கையார் தம் கணவனாரின் அகத்து மகிழ்ச்சியை முகத்துக் கண்டு துன்பம் நீங்கி இன்பம் பெற்றவராய்த் தவத்தவர் செயலைத் தாழாதுறைய வேண்டி நின்றார். பரஞ்சோதியார் வைரவர் வார்த்தைகளைக் கூறக் கேட்ட கற்பு நெறி கடவாத காரிகையார், "அவ்வகைச் சிறுவனையாம் எவ்வகைப் பெறுவது?" என்று ஏங்கி நின்றார்.

பரஞ்சோதியார் திடுமெனக் கூறின் மங்கையின் உள்ளம் மறுகி விடுமோ, என்னும் ஐயத்தராய் "நிதி கொடுப்பினும் இச் செயற்கு நேர்வார் யார்? எவரும் இலர். ஆதலின், நாம் பயந்த சிறுவனையே இச்செயற்குரியனைக்கப் பள்ளியினின்று அழைத்திடுவோம்" என்று அன்பு தோன்ற அருளிச்செய்தார்.

இவ்வார்த்தையைக் கேட்ட மாதரசியார் மயங்கினார் அல்லர். "இன்று தாழாது அமுது செய்யப் பெற்று இங்கு அவர் தம் மலர்ந்த முகம் நன்று காண்போம்" என நயந்து, "நீர் நம்மைக் காக்க வரும் மணியைச் சென்று பள்ளியினின்று அழைத்து வாரும்." என்று எதிர் மொழிந்தார் கணவனார் விரதம் காக்கும் காரிகையாராம் திருவெண்காட்டு நங்கையார்.

அவ்வாறு ஒரு தாய் தன் சேயை இழக்க ஒருப்படுவளோ! சீச்சீ! இஃதும் ஒரு கற்பாம்! ஒழுக்கமாம்! இஃது எங்கும் கண்டறியாச் செயல்" என்று எள்ளினும் எள்ளுவர்; ஏசினும், ஏசுவர் சில்லோர். இவ்வாறு தம் கணவன் பொருட்டு எதையும் இழக்க ஒருப்பட்ட மாண்புடை மங்கைமார் பலர் ஆவர். அவர்களுள் எடுத்துக் காட்டாகத் தமயந்தியையும் கூறலாம்.

தமயந்தி தன் மக்கள் இருவருடன் நளனைப் பின் தொடர்ந்து கல்லினும் களரினும் வந்துகொண்டிருந் தனள். இவள் படும் பாடு கண்ட நளன்! "அந்தோ! பஞ்செனச் சிவக்கும் மென்மையுடைய திருவடி, மண் மகள் அறியாப் பண்புடை மலரடி." என்று அவளு டைய மென்மையும் மேன்மையும் உணர்ந்து "சினக் கதிர் வேல் கண் மடவாய்! நீ நம் இளம் குதலையரை யழைத்துச் சென்று உன் தாதையார் இல்லம் தயங் காது செல்க" என்றவிடத்துத் தமயந்தி, 'குதலை மொழிக் குழந்தைகளையேனும் இழந்தால் பெறலாம். கோக் காதலனைப் பெற ஒண்ணுமோ? ஆதலின் அக் குழந்தைகளை வேண்டுமானால் என் தாதையர் நாடு செல்லுமாறு செய்க' என்று கூறினாள் எனில், மணா ளனையே அவள் மக்களினும் மதித்திருந்தாள் என்பது அறியக் கிடக்கின்றதன்றோ?

மற்றும் ஓர் எடுத்துக்காட்டினை எடுத்துக்கூறின் இது மேலும் நன்கு விளக்கமுறும்.' சங்ககாலப் புல வருள் ஒருவர் அறிவுடை நம்பி என்பார். அவரது பாடல் நற்றிணையென்னும் நூலில் காணப்படுகிறது, அப்பாடலில் ஒரு தலைமகள் தம் கற்பினும் சிறந்த நாணினைத் தன் காதலன் பொருட்டுக் கைவிடுகின் றாள். அவ்வாறு நாணைக் கைவிட்டமைக்கு உவமை கூறவந்த காவலராம் கவிஞர் அறிவுடை நம்பி, ஒரு கற்புடைய மாது, தான் அன்புடன் ஈன்ற குழந்தை யைத் தன் கணவன் பலி கொடுக்கும்பொருட்டுத் தன்னிடம் இருந்து வாங்கவும், அக் குழந்தையைக் கைவிட்டதுபோல்' என்று கூறியிருப்பாராயின், கணவன் பொருட்டுச் செயற்கரிய செயல்களை நம் தமிழ்நாட்டு மங்கைமார் செய்திருக்கின்றனர் என்

பது தெரிய வருகிறதன்றோ? அந் நற்றிணை அடிகள்

"மாசில் கற்பின் மடவோள் குழவி
செலுத்த வாங்கக் கைவிட் டாங்குச்
நாணும் விட்டோம்" என்பன.

ஆகவே, கணவனூர் தொண்டிற்குக் கண்மணி யன்ன தன் மகனை இவ்வம்மையார் இழக்க ஒருப் பட்டதில் யாதோர் இழுக்கும் இல்லை என்று உணர் வோமாக.

பள்ளியினின்று பாலனைப் பரஞ்சோதியார் அழைத்து வந்தார். குலமாதரார் அரை நாண் துகில் இவற்றை நீக்கினூர். திருமஞ்சனம் ஆட்டினூர். "இனி இம்மகனைக் காண்போமோ காணுமோ என்னும் விருப்பால் உச்சி மோத்தலும், மார்பில் அணைத்து முத்தம் உண்ணுதலும் இயல்பாகச்செய்ய வேண் டிய இன்புச் செயல்கள் எவற்றையும் செய்திலர். ஏன்? அவன் அடியார் பொருளாகி விட்டமையில் அவ்வாறு செய்யின் அநுசிதப் பொருளாய் அவன் ஆகிவிடுவன் என்றே அந்நங்கையார் அவ்வாறு செய் திலர். இவர்கள் செய்வன திருந்தச் செய்யும் செம் மனத்தர் என்பதில் இதனிலும் வேறு சான்றுதான் வேண்டுமோ?

இருமுது குரவரும் பைரவர் எண்ணி இட்ட கட்டளைப்படி யாவும் அமைத்து வைரவர் வைகும் ஆத்திநிழலை அடைந்து திருமுன் பணிந்து, "அடியேன் பால் நண்ணிநீர் இங்கு அமுதுசெய இனியும் தாமாது எழுந்தருளி வரவேண்டும்." என்றூர். அவரும் புறப் பட்டார். அப்போது பரஞ்சோதியார் உற்ற மகிழ் வுக்கு உவமை எதைக் கூறுவது? "நிதி இரண்டும் குறைந்தவன் ஒருவன் பெற்றுவந்தாற்போலக்

கொண்டு மனை புகுந்தார்" என்று ஆசிரிய கூறிய அருமை உவமையே அமைத்துக் கூறலாம்.

கணவனாரும் கண்ணுதல் ஒளித்த பைரவனாரும் மனைபுகுத, திருவெண்காட்டு நங்கையார் கரகநீர் கரத்தேந்தி நின்றார். பரஞ்சோதியார் பைரவர் பாதங்களைப் பரிசுத்தமாக்கினார். அந்நீரை அகத்தும் புறத்தும் கொண்டும் தெளித்தும் ஆனந்தம் அடைந்தார்.

பின்பு நல்லதோர் ஆதனத்தில் வைரவர் அமர்த்தப்பட்டு அவர்முன் பரிகலம் திருத்திச் செஞ்சாலிப் போனகமும் கறியமுதும் வரிசையின் முன் படைத்தார். வைரவர். "அன்பரே! நீர் மகவு பெற்றீரேல் அம் மைந்தன் தன்னை அழையும்" என்று அறைந்திட்டார். இதுவன்றோ சோதனை? என்றாலும், பரஞ்சோதியார் தம் சொல் வன்மையால் மகன் உள்ளன் என்றும் இல்லன் என்றும் உரையாராய், "இப்போது உதவான் அவன்" என்று இயம்பினார்.

இம்மொழி பரஞ்சோதியார் பண்புக்கியையத் தோன்றிய மொழி. இப்போது உதவான் என்றதால் இறையருளால் பின்பு அவன் உதவ இயலும் என்றும், தமக்கு அப் பிள்ளைப் பேறு இல்லாமல் இல்லை. அதுவும் உண்டு என்றும் பொருள் பொதியப் பேசப்பட்டதை ஓர்க. உணர்க. வந்தவர், "அம்மைந்தன் வந்தால் அன்றி யாம் உணவை வாய் வையோம். நீர் அழையும்" என்று அருளிச் செய்தார். கணவனாரும் மனைவியாரும் இன்னது செய்வதெனத் தோன்றாதவராய்த் திகைத்தனர். இதனால் அடியார் அமுது செய்தல் தடைப்படுமே என்று வருந்தினர். என்றாலும் 'அழையும்' என்னும் கட்டளையைச் சிரமேல் தாங்கியவராய் இருவரும் புறத்தே போந்து,

வையம் திகழும் சிறுத்தொண்டர் மைந்தா வருவாய் என அழைத்தார்
தைய லாரும் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாம் அழைப்பார்
செய்ய மணியே ! சீராளா வாராய் ! சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடன்உண்ண அழைக்கின்றார் என்று ஓலமிடச்

சிறுவனும் பள்ளியினின்று வருவான்போல் ஓடிவந்தான்.

எந்த ஆசிரியர் மகன் துணியப்பட்டான் என்று கூறினரோ, அந்த ஆசிரியரே துணியப்பட்டான் துண்ணென எழுப்பவும்பட்டான் என்று கூறி முடித்தது துன்பியல் கலந்த இன்பியல் நாடகம் இது என்பதை நமக்கு அறிவிக்க அன்றோ ! இதன் முடிவைக் காணுமுன்பே மகனைத் துணிதல் மாண்பாமோ என்று மன்றாடல் மாண்பாமோ ?

திருவெண்காட்டு நங்கையாரும் நீடு சிறுத்தொண்டனாரும் இறந்த மகனை இன்பமாய்ப் பெற்றது அன்னார் தம் நோன்பில் உரம்பெற்று நின்றதால் அன்றோ !

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

என்னும் குறட்கு இவர் செயல் எடுத்துக்காட்டாய் இலகும் அல்லவா ? ஆகவே, எதையும் முற்றும் உணராது நம் மூதறிவால் ஒன்றையும் முடிவுகட்டி உரைக்க ஒண்ணாது, ஒண்ணாது என்பதை நாம் உணர்வோமாக.

இவ்விளமகனோடு இருமுது குரவர் இல்லம் நுழைந்து, இருமை இன்பம் ஈயவல்ல வைரவர் அடி

யாரைக் காணுது அலமந்தார்; தெருமந்தார். இறைச்சிக் கறியமுதும் இலையில் காணுது வெருவுற்ருர். "கண்ணுதல் வடிவினர் கரந்த இடம் எங்கே என்று நாடப் புறம் போந்தார். போந்தவர் தமக்கு விடைமேல் விலங்கல் கொடியுடன் வீறுடைக் குமரனோடு விமலனுர் காட்சியளித்திட்டார்.

காட்சி கண்டு சிறுத்தொண்டர் மாட்சியும் மகிழ்ச்சியும் மாணப்பெற்று, மனைவி மைந்தர் தம்முடன் படியின்மேல் விழுந்தார்; எழுந்தார்; ஏத்திஞர்.

ஈண்டும் நாம் ஒன்றை எண்ணி இன்புறல் வேண்டியவராய் உள்ளோம். இறைவர் தம் தொண்டர்கட்குக் காட்சியளிக்கும் முறை ஒவ்வொரு விதமாக ஒளி வீசி நிற்கிறது. ஈண்டுப் பரஞ்சோதியார்க்கும் அவர் பத்தினியார் திருவெண்காட்டு நங்கையார்க்கும் 'மலை பயந்த தையலோடும் சரவணத்துத்தனயனோடும் தாம் காட்சியளித்தவாறு காட்சியளித்திலர் ஏனையவர்கட்கு. ஏன் ஈண்டுத் தனயரோடு காட்சி அளித்தனர்? இதைத்தான் நாம் சிந்தித்தல் வேண்டும்.

"மகனையறுத்துக் கறி சமைக்கச் சொன்ன யான் மகப்பெரு மாணிலி அல்லன்; மகப் பேறுடைய மாண்புடையவனே என்பதையும், அன்பின் திறத்தை அவனி அறிய ஆற்றிய ஆடலே அன்றி, வேறன்று என்பதையும் அறிவிக்கவே, அவ்வாறு காட்சியளித்தார் எனக் கருதுதல் வேண்டும். ஆகவே "ஆட்பால் அவர்க்கு அருளும் வண்ணம் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா" என்னும் ஆணைக்கு அடங்கி, அன்னுள் இருந்த ஆற்றற்கரிய செயல்களை இந்நாள் செயல்களுடன் இணைத்துப் பாருமையே அறிவுடைமை யாகும் என்பதை அறிந்து, அமைதியுறலே சால அழகியதாம்.

# 5. தென்னர் குல பழி தீர்த்த தெய்வப் பாவை

செந்தமிழ் நாட்டு அரசர்தம் குடிகளுள் மூவேந்தர் குடியே மூத்த குடி என்பது மூதறிஞர் கருத்து. இதனைப் பொய்யா மொழியாம் திருக்குறள் கூறும்

> "வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பில் தலைப்பிரிதல் இல்"

என்னும் பாவிற்குப் பரிமேல் அழகர் வரைந்த பேருரையானும் அறியலாம். அவர் பழங்குடி என்னும் தொடரை விளக்குங்கால் "தொன்று தொட்டு வருகின்ற குடி" என்பதோடு நில்லாது, "சேர, சோழ, பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று இவ்வாறு உரை எழுதிப் போந்தார். இம்மூவேந்தர் குடியே இசையால் திசை போய குடி. இமயம் சென்று தன் இலச்சினையைப் பொறித்து மீண்ட குடி. புலவர்கள் செந்நாவால் புகழும் குடி. இவற்றுள் பாண்டியர் குடி பழமையினும் பழமையது. பாண்டியர் என்னும் சொல் பண்டையர் என்னும் சொற்றிரிபே என்றும் மொழி நூல் வல்லுநரும் மொழிவர். ஆளுடைய அடிகளாரும் "பாண்டி நாடே பழம் பதியாகவும்" என்று கூறியுள்ளார். ஆண்டுத் திருக்கோவில் கொண்டு திகழும் பெருமானைத் திருநாவுக்கரசர் "முனைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று பழமையைப் பாராட்டியே பதிகமும் செய்தனர். நீதி நெறி நின்றும் பிறழாத நேர்மை

யுடைய குடி பாண்டியர் குடி எனில், அஃது உபசார மொழியாகாது; உண்மை மொழியாகவும் முடிவு கூறும். இதனைத் தீமை செய்தான் போல் செங்கை குறைத்த செழியன் வரலாறே செம்மையுறச் சான்றாய் நின்று பகர்ந்து நிற்கும்.

இன்னோரன்ன செழுங்குடிக்குச் சிற்சில காலங்களில் அக்காலக் கொடுமையால் பழிப்பும் வந்ததுண்டு. “நெல்லுக் குமியுண்டு. நீருக்கு நுரையுண்டு. புல்லிதழ் பூவிற்கும் உண்டு அல்லவா! பேரொளியோடு பெருமிதத்துடன் ஒளிரும் பெருமதி தனக்கும் களங்கம் உண்டென்பதைக் காண்கிறோம் அல்லமோ? அவ்வாறே இப்பண்டைய பெருங்குடியும் சிறிது மாசுற்றது. அம்மாசு தொடர்ந்து நில்லாது அவ்வப்போது அகற்றவும்பட்டது.

பாண்டியன் நெடுஞ்செழியன் பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்டுக் கோவலன் தன்னைக் கொலை செய்வித்தான். அதனால், அவன் தன் செங்கோல் வளைந்தது. பின்பு கண்ணகி காட்டிய காரணங் கண்டு, கோவலன் கள்வன் அல்லன் என்பதை அறிந்து, தான் செய்த செயல் தவறு என்பதை உணர்ந்தவனாய், வாய் விட்டு,

> பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
> யானோ அரசன் யானே கள்வன்
> மன்பதை காக்கும் தென்புலம் காவல்
> என்முதல் பிழைத்தது கெடுக என்ஆயுள்.

என்று கூறித் தன் உயிரையும் போக்கிக்கொண்டான். நெடுஞ்செழியனது கோல் வல்வினையால் வளைந்தது. அதாவது கொடுங்கோல் ஆயது. அந்தக் வளைவுக் கோலை மன்னன் விடுத்த உயிர் தான் செல்லும் விரை

வில் அவ்வளவை நிமிர்த்திச் செங்கோல் ஆக்கியே சென்றது என்பதை இளங்கோ அடிகள் இயம்பித் தென்னர் குலத்துக்கு நேர்ந்த பழியைப் பரிகரித்துப் பாடினர்.

வல்வினை வளைத்த கோலை மன்னன்
செல்லுயிர் சென்று செங்கோல் ஆக்கியது.

என்பதே அவ்வடிகளார் அமைத்த அடிகள்.

மற்றுமோர் அமயம் பாண்டியர் குடிக்குப் பழி சார் காலம் பாரித்து நின்றது. இப்பழி அரசியல் துறையில் அன்றிச் சமயத் துறையில் நேர்ந்த தொன்ருகும். பாண்டியர் குடி சிவநெறி பிறழாச் செழுங் குடியாகவே சிறந்து விளங்கியது. இச் சிறப்பு, செழியன் நெடுமாறன் காலத்துச் சிறிது சீர்குறையல் ஆயிற்று. அச்சீர் குறைவை அகற்றவே ஓர் அணங்கு அரும்பாடு பட்டனர். அத் தெய்வப் பாவையர் யாவர் என்பதை உணர்த்தவே இக்கட்டுரை எழுந்தது. இனி அதனைச் சிறிது ஆராய்வோமாக.

வையை என்னும் பொய்யாக் குலக்கொடி பொங்கிப் பாயும் மதுரை என்னும் மாநகர்க்கண்ணே, கூன்பாண்டியன் என்பான் குவலயம் புரந்து வந்தான். கூன்மாறன் உடற் குறையுடையனே ஆனுலும், உள்ளக் குறை எள்ளளவும் இல்லாதவன். மறங் கடந்த தன் தனித் தோளால் மாற்றலரைப் புறங் கண்டான். அவன் காலத்து வானவரையும் வளவரையும் வென்று, நிலம் மூன்றும் காவற் சாகாடுய்த்துக் கன்னி நாட்டைக் காத்துவந்தான்.

நாடிழுந்த பொறையனும் பொன்னித் துறையனும் மறத்தை மறந்து அறத்தைக் கைக்கொள அகத்துக் கொண்டனர். பனந்தார் மார்பன், கூடற்

கோமான் குளிரடி பணிந்து வெறுக்கையையும் வேழத்தையும் காசையும் தூசையும் கலந்து ஈந்து பண்டு போலமன்னனுகச் சேர நாட்டைத் திரும்பச்சேரப் பெற்றுப்போனான். வளவனும் தன்னுடைய வளநாடு பெறத்தான் ஈன்ற மங்கையர்க்கரசி என்னும் மாதர் திலகத்தை மாறன் தனக்கு மணம் முடித்து மகிழ்வு கொண்டான்.

நெடுமாறன் மங்கையர்க்கரசியாரை மனைவியாராகப் பெற்றது, அவன் அம்மையில் செய்த அருந்தவப் பேறே என்று அறையலாம். இவ்வம்மையாரைச் சிரபுரக் கோன் சிறப்பித்துப் பாடுங்கால்,

'மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி."
"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன்திரு நீற்றினை வளர்த்த
பந்தணை விரலி பாண்டிமா தேவி."
"முத்தின் தாழ்வடமும் சந்தனக் குழம்புந் நீறும் தன்மார் பினின் முயங்கப்
பத்தி ஆர்கின்ற பாண்டிமா தேவி."
"மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன்
தன் மகளாம் பாண்டிமா தேவி."

என்று பாடி இவ்வம்மையாரின் குலப் பெருமை, குணப் பெருமை ஆதியவற்றைப் பலபடப் பாராட்டியுள்ளார். இங்ஙனம் இம்மாதரார் ஞான போனகரால் பாடப்பட்டதே பெரும்பேறு எனக்கருதிய அருள் மொழித் தேவரும்,

பூசுரர்சூ ளாமணியாம் புகலிவேந்தர்
போனகஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தி னாரை

என்று புகழ்ந்துள்ளார் மேலும் இவ்வம்மையாரை,

என் தம்பிரையாத் தெய்வப் பொன்னி வளம் பெருக்க
குலம் பெருக்கும் தங்கள்
திருநாடு போல்செழியர் தென்னாடு சீர்விளக்கும்

என்றும் செப்பியும் உள்ளார்.

இன்னோரன்ன எழிலும் ஏற்றமும் நிறைந்த ஏந்திழையாராம் மங்கையர்க்கரசியாரோடு மாறன் வாழும் நாளில்,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

என்பதுபோல், வல்வினை வலியால் சிவநெறி நீத்துச் சமண் நெறி மேற்கொண்டு ஒழுகினான். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்.' ஆதலின், குடிமக்களும் அந்நெறியில் ஒழுகி இருந்தனர். இவர்கட்கிடையே சேற்றில் செந்தாமரைபோல் மந்திரி குலச்சிறையாரும், நங்கையார் மங்கையர்க்கரசியாரும் மட்டும், மறந்தும் புறந் தொழா நங்கையாய்த் திருநெறியாம் சிவநெறியே மேற்கொண்டொழுகினர்.

தம் கணவனார் சமய மாற்றம் உற்றதனால் மனம் மாழ்கினார் மங்கையர்க்கரசியார். பண்டுபோல என்று மீண்டும் சிவநெறி பேணும் நிலையினர் ஆவாரோ என்று ஆலவாய்ப் பெருமானை அனுதினமும் போற்றுவார் ஆனார். நல்லார் இணக்கத்தாலே தம் கணவனார் மீண்டும் திருநெறி புகுங் காலம் எக்காலம் ஆமோ என்று ஏங்கி இருந்தார். இந்நிலையில் சிரபுரக் கோமானார் செந்தமிழ்ப் பாண்டிநாடு வந்துற்றார். இவரைக் காண மங்கையர்க்கரசியார் மன்னர்பால் விடைகொண்டு மதிமுடி சொக்கன் கோயில் சென்றுற்றார். மந்திரி குலச்சிறையாரும் ஆண்டுவந்து புகலிக் காவலரின் பொன்மலர் அடி

யினை முடிமிசை சூட, வேணுபுர வேந்தனார் "உமக்கு நம் பெருமான்தன் திருவருள் பெருகு நன்மைதான் வலிதே?" என்று இன்புடன் வினவினார்.

அதுபோது இவ்வின் மொழிக்கு அமைச்சர் விடை கூறியதாக ஆசிரியர் சேக்கிழார் அமைத்த செய்யுள் நலத்தை என்னென்று இயம்புவது!

சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபேறிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

என்பதே அப்பாடல்.

சேக்கிழார் பெருமானும் அமைச்சுத் தொழில் பூண்ட அறிஞர். பிரமபுரத் தோன்றலைப் பணிந்து இன்மொழி புகன்றவரும் ஓர் அமைச்சர். அமைச்சுத் தொழில் பூண்டோர் நுண்ணறிவு படைத்தவராய் இருத்தல் வேண்டும், என்றும் இவர்கள் மதி நுட்பம் நூலொடுடையதாய்க் கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மை பெற்று இயங்குவதாய் இருத்தல் வேண்டும் என்றும் அமைச்சர் இயல்பு கூறும் அறநூல்கள் அறைகின்றன.

அமைச்சர் "ஞான சம்பந்தர் கன்னி நாட்டிடைக் கால் வைத்த நாள் முதலே விளங்கும் மேன்மை உற்றது" என்று உறுதியோடு கூறி முடித்தார். முக் காலத்தும் திருவருள் பெற்றதைத் தெளிவுபடக் கூறினார். நெடுமாறற்கு முன், பாண்டி நாடு பழுதற்ற நிலை

யில் இருந்தது என்றும், எதிர்காலம் சிறப்புறப்போகி றது என்றும் கூறி, நிகழ் காலச்செயல் யாதொன்றும் கூறாது விடுத்தது, குலச்சிறையாரின் கூரிய நுண் மதியும் குணமும் புலனாகின்றன. பாண்டி நாட்டிடை நிகழ்காலம் பரிபவப்பட்டுள்ளது என்பதைத் தம் வாயால் பகரவும் விரும்பாராய்க் குறிப்பில் உணர வைத்தனர். அப்பரிபவ நிலை இனிப்பரந்து ஓடும் என்று துணிபு பெற்றவர் ஆதலின் "இன்று எழுந் தருளப்பெற்ற பேறிதனால் எற்றைக்கும் திருவருள் உடையோம்" என்று கூறும் பொருட் செறிவின் திட்ப நுட்பங்களை உணர்க. அமைச்சர் குலச் சிறை யார் பொதுநலம் பேணும் முதுக்குறைவுடைய மூதறி ஞர். ஆதலின், முன்னம் நாடு உய்யவேண்டும் என் னும் அவாவினால் முதற்கண், "நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்" என்று கூறிப் பின் நாட்டுக்கு நாயகன் ஆவான் நரபதியாதலின், அவனும் உய்ய "நற்றமிழ் வேந்தனும் உய்ந்து" என்றும் உரைத் தருளினர். நீறின்றி இருந்த நெற்றிகள் இனி நீறுடன் விளங்கும் மேன்மையும் அடைந்ததாக அகங்களித்து ஆர்வமொழி கூறினர். இத்தொனிப் பொருள் அனைத் தும் தோன்ற பாவால் பொழிந்த பாவலர் திறத்தைப் பகரவும் ஒண்ணுமோ!

திருஞான சம்பந்தர் ஆலயத்தையடையப் பாண்டிமாதேவியார் பாலறுவாயரது பதுமமலர் அடி வணங்கினார். 'பானலங் கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி, 'யானும் என்பதியும் செய்த தவம் என்கொல்' என்று நன்மொழி கூறி உபசரித்தார். தாம் பெற்ற இன்பம் தம் கணவரும் பெறவேண்டும் என்னும் தய வால் தம்மொடு கணவரையும் இணைத்து யானும்

என் பதியும் செய்த தவம்' என்றே இசைத்தார். இன்பமும் துன்பமும் இருவர்க்கும் ஒன்றுதானே? சேக்கிழார் அரசனை மட்டும் குறிப்பிடும் மொழியால் கூறுமல், அரசர்க்கும் அவனிக்கும் பொதுவாய் அமைந்த சொல்லாகிய பதியும் என்னும் சொல்லால் கூறிச் சிலேடைப் பொருளில் யானும் என் அரசனும் என்றும், யானும் என் நாடும் (மதுரையும்) என்றும் பொருள்படும்படி கூறியதும் சேக்கிழார் திறனைச் செப்பவல்லதாகும். 'நன்றியில் நெறியில் அழுந்திய நாடு' ஆதலின் அந்நாடு தான் ஈடேறத் தவம் செய்த தனால் ஞான போனகர் எய்தினர் என்று கருதுதல் தக்கது. ஆதலின் பதி என்னும் சொல்லிற்கு நாடு என்று பொருள் கூறியதும் பொருத்தமே என்க.

ஞான சம்பந்தர் ஒரு திருமடத்தில் வந்துற்றார். இவரை அவணின்று அகற்றவேண்டி அமணர் தீக் கொளுவினர். இதனை அறிந்த அருமறை அந்தணாளர், இத்தீ தம்மைச் சாராமல் **பையவே** சென்று பாண்டியற்காகெனப் பணித்தார்.

**பையவே** என்னும் சொல், ஞான சம்பந்தர் பதிகத்தில் பெய்யப்பட்ட சொல். அச்சொல்லின் பொருளினைச் சேக்கிழார் ஆழ நினைந்தார். நினைந்து, நினைந்து அதன்பால் செறிந்த அரும் பொருளை உணர்ந்தார். அகங்களித்துக் கீழ்வரும் பாடலைப் பாடினார்.

பாண்டிமா தேவியார் தமதுபொற்பில் பயிலும்நெடு மங்கல
நாண் பாது காத்தும்,
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும் அரசன்பால்
அபராதம் உறுத லானும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும் வெண்ணீறு வெப்ப
கீலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆதலாலும் தீப்பிணியைப்
பையவே செல்க என்றார்.

'பையவே' என்னும் சொல்லின் பொருளை விளக்க எழுந்த பாடல் இது. அச் சொல்லின் விரிவுரை உரைக்கப் பாடப்பட்ட செய்யுள் இது. ஆளுடைய பிள்ளையாரின் அகத்தை யுணர்ந்து ஆக்கப்பட்ட யாப்பு இது. தீப்பிணி பையப் பற்றாது விரையப் பற்றின், பாண்டியன் இறக்கவும் நேரும். இறந்தால், பாண்டிமாதேவியார் மங்கல நாண் இழந்து அமங்கல நங்கையாய் வாழநேரும். ஆதலால், இது நேராவண்ணம் இருக்கவே அன்புடைய அகத்தால் 'பையவே' என்றார் என்றும், குலச் சிறையார் அரசன் உய் வகையில் ஆசைகொண்ட அன்பர் என்பதை அறிந்து அதன் பொருட்டும் பையவே என்று பகர்ந்தார் என்றும், தீவைக்க உடன்பட்டது அரசன்குற்றம் ஆதலின், அவனும் அபராதன் ஆனான், என்பதால் அத்தீப்பிணி அவனைச் சாரவே அவன்பால் உய்த்தும், அவன் பின்னால் உய்யவேண்டிப், பையவே என்று பண்புடன் பகர்ந்தார் என்றும், அரசன் அழிவையுறாது, சிவநெறியடையும் பேறும், தாமே தீண்டும் பேறும் பெறும் வாய்ப்புடையன் ஆதலின், அவன் உடல் ஊறு உறாதிருக்கவே 'பையவே' என்றார் என்றும், இன்னோரன்ன நயங்கள் பல பொதுளவே "பையவே" எனப் பாடினார் என்றும் சேக்கிழார் தெரிவிப்பது எத்துணை நயமுடையதாகக் காண்கிறது பாருங்கள்? இதுவன்றோ விளக்கம்!

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச்
சான்றோர் கவி"

என்று கவியின் இலக்கணம் கூறிய கம்பர் கருத்துக்கு

ஏற்ற எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் செய்யுள் திகழ்கிறது எனில் வேறு என் கூறுவது?

அப்பாடல் 'பையவே' என்னும் சொற் பொருளை விளக்கவந்த பாடல் ஆதலின், திரிசொல் இன்றி, இயற்சொல் பெய்து பாடப்பட்டிருத்தலின், விளக்கம் இன்னவாறு அமைதல் வேண்டும் என்பதையும் உடன் விதித்தவாறும் ஆயிற்று, இஃது அருமையில் எளிமையையும் காட்டியவாருயிற்று. சேக்கிழார் பாடல் அனைத்தும் 'மாண்ட கேள்வி வல்லார் கவிபோல் பலவான் துறைதோன்ற வாய்த்துச் செல்லாறு தோறும் பொருள் ஆழ்ந்து தெளிந்து தேயத்து எல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ளும் நிலையில் இருப்பதை எவரும் காணலாம். சமயக் கண் கொண்டு காணலை நீக்கிக் காவியக் கண் கொண்டு காண்பார் இக்கருத்தை ஒவ்வாமல் இருக்க ஒண்ணுமோ?

வெப்புநோய் செழியனைச் சேர்ந்தது. மருத்து நூல் வல்லவர் தங்கள் பல்கலை அறிவால் நோய் தணியும் வகைதேடினர். இஃது இயற்கையால் அன்றிச் செயற்கையால் எழுந்த நோவாதலின் எரியிடை இழுதுபோல் வளர்தல் ஆயிற்று. மன்னன் நோயால் மாழ்கல் உற்ருன். அருகு இருந்த அமைச்சரும் அருமனைக் கிழத்தியாரும், "பிள்ளையார் அருளால் இது பெயரும்" என்றனர். "அற்றேல் அழைமின்" என்று அரையன் அறைய, அதுபோது அரசனுக்கு ஆக்கந் தேடும் இருபேர் அறிஞர்கள் ; வறிஞன் பொற்கிழி வாய்க்கப் பெறின், எத்துணை கழிபேர் உவகை எய்துவானே, அத்துணை இன்பம் அகத்துக் கொண்டனர்.

ஞான போனகர் அரசனே ஆயினும், ஆண்டியே ஆயினும் வேற்றுமை கருதாது, ஒரு படித்

தாகுவே என்னும் ஒருமைப் பாடுடையர் ஆதலின், அரசன் அழைப்புக்கு இணங்கி வருவர் என்று அறிந்த அமைச்சரும் அன்புடைச் செல்வியாரும் தாமே சென்று அழைக்க மடத்திற்கு ஊர்திமேல் சென்றனர். மடத்தில் ஞான சம்பந்தர் வீற்றிருந்த கோலத்தை,

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

இம் முறையில் கண்ட இருவரும் தாம் வந்த காரணம்கூறக் கௌணியர் குலாதீபர் அங்கயற் கண்ணியின் மணாளனை அகத்துள் கொண்டு அரண்மனை வந்துற்றார்.

பாண்டிய மன்னன் தன் வெப்பு நோயினைப் பொறுக்கலாற்றாது தீர்க்குமாறு வேண்டத் திருக்கழுமலத் திலகனார் நீறு பூசி நோயை நீக்கினார். பின்பு அனலும் புனலும் கரியாகத் திருநெறியின் சீர்மையினை விளக்கிக் காட்டப் பஞ்சவன் பனவக் குமரனார் பாதம் போற்றிச் சமண் நீங்கிச் சைவனானான்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

என்னும் திருப்பதிகம் ஓதி, 'வேந்தனும் ஓங்குக' என்னும் வாக்கால் பாண்டியன் கூனையும் நிமிரச் செய்து நெடுமாறன் என்னும் வாழ்வையும் ஞான போனகர் ஈந்தார்.

ஈண்டு நாம் பெரியதோர் உண்மை காணுதல் வேண்டும். அதாவது மக்கள் தாம் பிறந்த சமய நெறியினின்றும் மாறுதல் கூடாது என்பது. அவ்வாறு செய்தல் ஆண்டவன் எண்ணத்திற்கும் ஆகாதது என்பது சிறந்த சித்தர் யோகர் துணிபாகும். திரு மூலர் ஒரு மாபெரும் யோகியர்; தனிப் பெருஞ் சித்தர். அவர் யாத்த பாடல்கள் திருமந்திரம் என்னும் பெயருடன் சிறப்புற்று விளங்குகிறது. அப்பாடல்கள் மந்திரம் என்பதை எவரும்மறுக்க இயலாது. அம்மந்திரம் என்ன கூறுகிறது? மக்கள் ஒழுகலாற்றை மாண்புறக் கூறுகிறது. சமய மாற்றத்தை நன்கு கண்டித்துக் கழறுகிறது.

தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்ட மும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.

ஆகவே, சமய மாறினரை என்னணமேனும் மீட்டுப் பண்டைய நெறியினர் ஆகச் செய்தல் நெறியுடையோர் கடனாகும். வேற்றுச் சமயம் புகுந்தார் என்று விடவும் கூடாது. புகுந்தவர் மீண்டும் வர விருப்பம் கொள்ளின், அதனை வெறுத்தல் இன்றி ஏற்றல் வேண்டும். ஏற்கலாம் என்பதை விளக்குவனவே சமண் புகுந்த அப்பரும், கூன்பாண்டியனும் மீண்டும் சிவநெறி புக்கனர் என்று கூறும் வரலாறுகள். ஆகவே, இக் காலத்தவர் மதமாற்றம் உற்று மீண்டுவர விரும்பின், அவர்கட்கு இடம் தந்து ஏற்க வேண்டுவது கடனாகும்.

நெடுமாறன் திருநெறி மேற்கொண்டான். மறையவர் வேள்விகள் மாறாது நடந்தன. வானவர் மாரிகள்

வரையாது வழங்கினர். இகத்தினில் இன்பம் எழுந்தது. யாவரும் அங்கயற்கண்ணி தன்னோடு ஆலவாய் அமர்ந்த அமலனை அன்புடன் வணங்கினர்.

பாண்டிமா தேவியார் தம் வரம் பலித்ததென்று பரவசம் உற்றார். இவ்வம்மையாரால் அன்றோ தென்னர் குலம் உற்ற பழி தீரப் பெற்றது. தமிழ் நாடுதான் உற்ற இடர் நீங்கியது. இத்துணைக்கும் மாபெருங் காரணர் யார்? மங்கையர்க்கரசியார் அல்லரோ? இத்தகைய அம்மையாரைத் **தென்னர்குல பழி தீர்த்த தெய்வப் பாவை** என்று கூறுவது சாலப் பொருத்தமானதன்றோ? தெய்வச் சேக்கிழார் இம்மங்கையாரை மாதரசியாராகக் கருதிலர். மாதெய்வமாகவே கருதினர். இம்மங்கையார் திருவடிகளைப் போற்றுவாரைத் தாமும் போற்றுவதாகக் கூறுகிறார்.

> மங்கையர்க்குத் தனிஅரசி **எங்கள் தெய்வம்**
> வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
> செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
> **தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை**
> எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
> இருந்தமிழ்நா டுற்றஇடர் நீங்கித் தங்கள்
> பொங்களிவெண் திருநீறு பரப்பி னாரைப்
> **போற்றுவார் கழலெம்மால் போற்றலாமே.**

என்னும் இப்பாடலைப் பாடுவோமாக. பாடி இன்புறுவோமாக. சேக்கிழார் பெண்கள் இனத்திற்குப் பேறு தந்து பேசியதைச் சிந்திப்போமாக.

# 6. தாலியை ஈந்த தையல்

தாண்டக வேந்து என்று தரணி போற்றும் திரு நாவுக்கரசர் தம் திருவாயால் பாடிய தாண்டகங்கள் பல. அவற்றுள் ஒன்று கீழ் வருவது.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

இஃது இறைவனாகிய தலைவனை வேட்ட ஒரு தலைவியின் தன்மையை அறிவிப்பதோடு, இது தலை சிறந்த கற்புடைய காரிகையின் தனிப்பெரும் இயல் பினையும் சாற்றுவதாகும். கணவனுக்கு வாழ்க்கைப் பட்ட ஒரு காரிகை, இனித்தனக்கு எல்லாம் ஆவான் கொழுநனே அன்றி வேறு இல்லை என்னும் எண்ண முடையவளாய் அவனுக்கு உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் வாழும் உத்தமியாக விளங்க வேண்டும்.

கணவன் நல்வழி ஒழுகி அதனால் பொருளை இழந் தானாலும், அன்றி அல்வழி ஒழுகிச் செல்வத்தைச் சிதறச் செய்தான் ஆனாலும், தன்னால் உதவவல்லது எதுவாயினும் ஈந்தே வந்தனர் தமிழ்நாட்டு கற்புடை மங்கையர்.

கோவலன் கண்ணகியை நோக்கி, " வஞ்சங் கொண்ட நெஞ்சமுடைய மாதவி என்னும் மங்கை

யைச் சார்ந்து, குலந்தரு வான் பொருட்குன்றம் தொலைத்தேன். இச்செயல் எற்கு நாணுத் தருகின்றது.'' என்று நவிலாநின்றான். அந்நிலையிலும் தன் கணவன் கையில் காசின்மையால் கவல்கின்றான் போலும், என்று எண்ணியவளாய்ச் சிலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிய செயற்கு ஆகுலம் அடையாது, நலங்கொள் முறுவல் நகைமுகமே காட்டினள் கண்ணகி. அம்மெய்ப் பாட்டுடன் நிற்றல் இன்றிச் செய்பாட்டையும் கொண்டு "இன்னம் என் பால் பொன்னஞ் சிலம்பு உள்ளது. அதனையும் கொள்க'' என்று ஈந்த நேர்மைக்கு அல்லவை செய்த அகமுடையானுக்கு நிறையுடைய நங்கை, தன்னரும் பொருளைத் தந்தமை தக்க சான்று அன்றோ!

ஈண்டு நல்லவை செய்து நல்குரவு எய்திய நன் மணாளனார்க்குத் தாலியை ஈந்த தகவுடை அம்மையின் தன்மையைச் சற்று உணர்வோமாக. இவ் வம்மையார் செயல் முன்னர்க் கூறிய கண்ணகியார் செயலினும் சிறிது கண்ணியமுடையதே. சிலம்பு ஈதலில் பெருமையில்லை. தாலி ஈதல் எனில், பெருமையன்றோ?

பொன்னி நாடு எல்லாப்படியாலும் பொலிவுடையதே. இது நீர்வளத்தால் ஓங்கி மன்னியது. இந் நாட்டிற்கு அழகு செய்யும் நகரங்களில் திருக்கடவூர் என்னும் திருப்பதியும் ஒன்று. இறைவனுடைய அட்ட வீரட்டங்களுள் காலனைக் காய்ந்த பதியும் இதுவேயாகும் நீர்வளம் நிரம்பப்பெற்ற கடவூர் நிலவளத்தில் சாலச் சிறந்தது என்பதைச் சாற்ற வேண்டுவதில்லை. வயல் எல்லாம் விளை செஞ்சாலியும்,

வரம்பெல்லாம் வளையின் முத்தமும், அயல் எங்கும் வேள்விக்கூடமும், அணையெல்லாம் கமுநீர்க் கற்றை யும் மல்கி இருந்தன. கமுகந் தோட்டம் ககனமுக டளாய்க் கனமுகிலைத் தொட்டுநிற்கும். இன்னண மாயச் செழுமைக்கோர் இருப்பிடமாய் இருந்தமை யின், செய்தொழில்கள் சிறந்தோங்கி நின்றன. கடை சியர் குழிப் பண்ணையில் பாடுதீர்ப் பாடல் பாடிக் களிப்பர். கன்றுள்ளிக் கனைத்தமேதி பால் சொரிய, வாவியும் குளனும் பால் மணம் கமழ்ந்து இருந்தன. புலால் மணம் ஒருவி நின்றது.

இன்னோரன்ன சீரிய திருக்கடவூர், பல்குடி மக் கட்குப் பதியே ஆயினும், அந்தணர் அருங்குடிக்கும் அகமாக இலங்கியது. ஆண்டு வதிந்த அந்தண உத்த மர்கள் வள்ளுவர் கூறிய "அந்தணர் என்போர் அற வோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகலான்." என்னும் சீரிய இலக்கணத்திற்கு இலக்கியமாய் இலங்கியவர். இவர்கள் வதிந்த இடங் கள் தோறும் சாமவேதம் சந்தமாய்ப் பாடப் பட்டது. கற்றுங்கெரி ஓம்பிக் கலியை வாராமே தடுத்து வந்தனர். அறுதொழில்களையும் சிறிதும் வழுவல் இன்றி ஆற்றிவந்தனர்.

இவ்வந்தணர் குடியில் **கலயர்** என்னும் கவினர் பெரியார் வாழ்ந்து வந்தனர். இவர் சகலாகம பண் டிதராய்க் கலை ஞானத்தில் தலைசிறந்து விளங்கிய காரணத்தால் கலயர் என்று புனைபெயரால் அழைக் கப்பட்டு இயற்பெயர் மறைந்த பெரியர் என்றும், குங்கிலியம் அமைந்த கலயம்கொண்டு தாம் தொண்டு புரிந்தமையால் கலயர் என்றும் வழங்கப்பட்டுவந் தார் என்றும் காரணம் காட்டி, பொருள்கூறின்

பொருந்துவதாகும். அறிவு நிரம்பப்பெற்ற அந்தணர் சிகாமணியாக இருந்தமையால்தான் வேணிப் பிரான் கழல் பேணிவாழும் பெற்றிபெற்றனர். "கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்?" எனும் குறட்பொருளை உணர்ந்து இறைவரிடத்து உருகிய அன்பும் கூர்ந்த சிந்தையும் வாய்ந்து ஒழுக்கம் வழுக்கா ஒண்மையும் உடையராய்த் திகழ்ந்தார்.

சேக்கிழார் கலயனார் குண நலங்களைக் குறிப்பிடுகையில் ஈற்றில் **ஒழுக்கம் மிக்கார்** என்று நினைவுடன் கூறியதைச் சிறிது சிந்தித்தல் வேண்டும். மக்கள் குடிப்பிறப்பால் தம்மை உயர்வாகக் கருதுதல் வழக்கமாக இருந்துவருகிறது. அது முறையன்று. ஒழுக்கமே உயர்வுக்குக் காரணம் என்பது வள்ளுவர் போன்ற தெள்ளறிவுடையார் துணிபாகும். இத்துணிவு பொய்யில் புலவராம் திருவள்ளுவர்க்கு இன்று எனில்,

> ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்.

என்று இயம்பமாட்டார். இவ்வாறு பொதுப்படக் கூறினும் பொதுமக்கள் புரிந்துகொள்ளுதல் சிறிது அருமை என்பதை உன்னிய பெரியார்,

> 'மறப்பினு மோத்துக் கொளலாகும், பார்ப்பான்
> பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'

என்று இன்றியமையாத ஒழுக்கத்தின் உயர்வை அந்தணர்க்கே சிறப்பாகக் கூறிப்போந்தார். இதனால் ஏனையவர் ஒழுக்கத்தினின்றும் வழுக்கி வாழலாம் என்று எண்ணுதல் கூடாது. ஒழுக்கம் அற்றவர்

என்னும் இழுக்கம் கலயனார்க்கு எய்தக்கூடாது என்று எண்ணிய அருண்மொழித் தேவர் வள்ளுவனார் கருத்தை உட்கொண்டு ஒழுக்கம் மிக்கார் என்று விதந்து கூறுவார் ஆனார்

கலைவல்ல கலயனார் கடவூர்க் கடவுளுக்குக் குங்கிலியத் தூபம் சாலவே நிறைந்து விம்மும் பணிதலை மேற்கொண்டிருந்தார். குங்கிலியம் என்பது இக்காலத்துச் சாம்பிராணிபோன்று நல்மணம் கமழப் புகைக்கப்படும் பொருளாகும். இறைபணி செய்வார் இயற்றும் தொண்டுகளில் இதுவும் ஒன்று. நாவுக்கரசரும் 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்,' என்று கூறியதையும் காண்க. இறை வழிபாட்டிற்கு இவை போன்றவை கருவிகளே அன்றி, இக்காலத்துக் கற்பூரம் கொளுத்திக் கவினுறு தளிகளைக் கருமையாக்கும் வழக்கம் அக்காலத்து ஆலயங்களில் இல்லை. கல்வெட்டுக்களில் ஆலயங்கட்குத் தினப்படி பூசைக்குக் கட்டளை வகுத்துக் கூறுகையில், கற்பூரத்திற்கு இத்துணைக் காசு என்று வகுக்காமையும் கூர்ந்து கவனித்தற்குரியது.

கலயனார் இத்திருப்பணியை இடையறாதுசெய்து வருங்கால், வறுமை வந்து சிறுமை செய்தது. இவ்வறுமை இவர்பால் வர அஞ்சுமேனும், இறைவர் எண்ணம், இவரை வறுமை வந்து அணுகவேண்டும் என்பது. இதனை ஆசிரியர் 'அங்கவர் அருளினாலே வறுமை வந்தடைந்த பின்னும்,' என்னும் சொற்களால் சொற்றனர். இவ்வறுமை இவரை வாழவைக்க வந்ததே அன்றித் தாழவைக்க வந்ததன்று. பொன்னை நெருப்பில் இட்டுச் சுடினும் அதன் ஒளி மிஞ்சும் அது கருமை உற்றுக் கரிசுறாது. இ

போன்ற தன்மையதே ஆன்றவர்க்கு வரும் வறுமையும்.

> சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

என்று அன்றோ தமிழ் மறையும் முழக்குகின்றது? ஆகவே, கலயனார் வறுமையுற்றும் தம் செய்பணியைத் தவறாது நடத்தி வந்தார்.

இயற்கை வறுமையாயின் இலம்பாட்டுடன் நின்றிருக்கும். இவர்க்கு வந்தது செயற்கைச் செல்லல் ஆதலின், குலமும்பாடு உற்றிடச் செய்தது. தம் தொண்டு முட்டுப்படாதிருக்க நிலத்தை விற்றார். தனத்தை இழந்தார். மாடு ஆதிய அடிமையும் அழித்தார். இதனால் சுற்றமும் மக்களும் துன்புறலாயினர். இவரால் விற்கப்பட்டது **நன்னிலம்** என்றதையும், இழந்த தனங்கள் **பன்னெடுந் தனங்கள்** என்றதையும் கருதற்பாலன. நன்னிலம் என்றதால் அவை நன்செய் நிலங்கள் என்பதும், அவற்றில் நல்ல விளைவே விளையற்பாலன என்பதும், பன்னெடுந் தனங்கள் என்பதால் அள்ள அள்ளக் குறையா அருந் தனம் என்பதும் அறியக்கிடக்கின்றன! அவ்வரும் பொருள்களையும் இழந்து இவர் இப்பணிதலை மேற்கொண்டார் என்பதால் இவரது தலையாய அன்பின் திறம் புலனாகின்றது. இந்நிலையில் கலயனாரிடம்

> இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்
> சிந்தை நீங்காச் செயலின் உவந்திட

என்னும் அருங்குணமே விஞ்சிநின்றது.

இல்லத்தில் உணவுக்குரியன ஒன்றும் இல்லை. இருபகல் உணவு இன்றி மைந்தரும் ஒக்கலும் நைந்து

வாடினார். இந்நிலை கலயனார் மனைவியார் உள்ளத்தை உருக்கியது. பசித்திருத்தலைப் பார்த்துச் சகித்திலர். தம்பால் தாலியன்றி வேறு தரத்தக்க பொருள் இன்மையால் தம் கணவனார் கையில் தாலி ஈந்து, 'ஐய, நெற்சில் கொண்மின்' என்றனர். இச் செய்கையால் இவ்வம்மையாரைத் **தாலியை ஈந்த தையல்** எனக் கூறலாம் அல்லவா?

அம்மையார் அருங்குணம் தோன்றும் இடத்திற்குத் தோற்றுவாய் இதுவே. தம் கணவனார் முந்தையோர் செல்வம் எல்லாம் முக்கணன் பணிக்கே ஈந்து மொட்டையாயினார் என்பதை அறிந்தும், தம் மக்களும் ஒக்கலும் உணவின்றி உறுகண் உற்றார் என்பதையும் உணர்ந்திருந்தும் தம் கணவனாரைக் கருத்தாலும் கழறாது காதல் செய் மனைவியார் என்ற நிலையில் இருந்ததை என்னென்று இயம்புவது! அந்நிலைக்கு அம்மையார்தாம் ஆயினரோ? அன்றி, ஆசிரியர் சேக்கிழார்தாம் அங்ஙனம் அவ்வம்மையாரை அமையச் செய்தனரோ? என்று ஐயுற்று அம்மையாரின் அருங்குணக் கற்பின் மாட்சியையும் ஆசிரியரின் பெருங்கலைக் கவியின் மாண்பினையும் சிந்தித்துச் சிந்தித்துச் சீராட்டிப் பாராட்டி நாம் பார்க்க வேண்டியதாகிறது. இது நிற்க.

கலயனார் கோதில் மங்கல நூல் தாலிகொண்டு தாம் வெளியே போந்தார். வந்தார்க்கு எதிரே குங்கிலியப் பொதியோடுற்ற வணிகனைக் கண்ணிற் கண்டார். "இது நல்ல குங்கிலியம். எம்பிராற்கு ஏற்றது" என்று வணிகன் கூறத் தாம் கொணர்ந்த தாலியை ஈந்து குங்கிலியம் பெற்றார். பெற்றதை இறைவர்

தம் பண்டாரத்தில் கொண்டு உய்த்தார். அப்போது அவர் உற்ற உவகைக்கு அளவில்லை.

கலயனூர் அன்பின் திறத்தையும் காரிகையார் அருளின் திறத்தையும் கண்ட காலனைக் காய்ந்த கண்ணுதலார் கலயனூர் இல்லம் செல்வத்தில் சிறக்கச் செம்மனங்கொண்டார். இல்லம் எங்கும் பொன் பயில் குவையும் நெல்லும் பொருவில் பல்வளனும் பொங்கின.

எல்லார்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத
பொருள் உளதோ ?

இவற்றைக்கண்ட ஏந்திழையார் கண்களிக்கக் கண்டார். இதுவும் எம்பிரான் அருளாம் என்று தம் பெருங் கணவனூர் கடும்பசி ஒழிக்கத் திருவமுதாக்க லுற்றார்.

இல்லம் செல்லாது இறைவர் தளியில் இன்புடன் இருந்த கலயனூர்க்கு, 'அகத்துச் சென்று அடிசில் அயர்க' என்ற கட்டளை இறைவர் அருளால் ஏற்பட்டது. ஆணையைத் தலைமேற்கொண்டு அகத்தை அடைந்தார். வீடு மாடு பொங்க வீறிட்ட நிலை கண்டும் விருப்பும் வெறுப்பும் கொண்டிலர். இஃதன்றோ உள்ளத் துறவுடையோர் இயல்பு. இஃது ஈசன் அருள் என்று இனிது இருந்தார். செல்வத்தின் பயன் ஈதல் ஆதலின், தன் மனைவியார்க்கு

நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து றைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே.

என்று பெருஞ் சித்திரனுர் தம் இல்லக் கிழத்தி யார்க்கு இட்ட கட்டளைபோல் இவரும் இட்டார். கண்ணுதற் கன்பரோடு இன்னடிசில் ஆர்ந்து இன்ப முற்ருர்.

இவ்வரலாற்றினின்று நாம் அறிவது யாது? என் 'கடன் பணிசெய்து கிடப்பதே என்பதும் தன் கடன் அடியேனையும் தாங்குதல் என்பதும், அன்ருே? நம் கடமையில் நாம் முனைந்து உறைந்து நின்ருல், ஒரு துயரும் உருது என்பதை உன்னி உன்னி உணர் வோமாக. வேண்டற்பலது தன்னம்பிக்கையே. "கொண்டானில் துன்னிய கேளிர் பிறர் இன்மை" என்பதனுல், தன்பால் உள்ள எதையும் அவனுக்கு ஈந்து இன்புறவேண்டுவது ஏந்திழையார் இயல்பு என்பதையும் உணர்தல்வேண்டும்.

# 7 கணவரைத் திருத்திய காரிகை

திருத்துதல் என்பது, ஒருவர்பால் தீமை கண்டுழி அது மேலும் மேலும் பரவ ஒட்டாமல் அவர் நல்வழிப்படுவதற்கு முன்னின்று நன்மையின் நன்மையையும், தீமையின் தீமையையும் எடுத்துக் காட்டித் திருத்துதல் ஆகும். இப்பண்பை ஆண் மக்கள் முன்னின்று திருத்தினும் திருத்தலாம். பெண்கள் முன்னின்று திருத்தினும் திருத்தலாம். ஈண்டு ஒரு பெண் பால் தன் கணவரது தீய ஒழுகலாற்றைக் கண்டு, அதனை ஆற்ற ஒண்ணாது திருத்திய செயலைச் செவ் வியின் ஆராய்வோமாக.

கணவனார் எதையும் செய்யவும் எவ்வாறேனும் நடக்கவும் உரிமை யுடையவர். நாம் அதில் தலையிடுதல் ஒண்ணாது. "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன்" என்று எண்ணி ஓர் இல்லக்கிழத்தி இருப்பாளாயின், அவளை வாழ்க்கைத் துணைவி, என்று கூறுதல் இயலாது. அவ்வாறு எண்ணுதல் மாதர்க்குத் தனிப் பெரும் பண்பு என்பது ஒருதலை என்றாலும், கணவனார் நல்வழிப்பட நடத்தி வைத்தலும் அவர்கள் பண்பெனக் கொள்ளுதல் அறிவுடைமையாகும்.

தில்லையம்பதி சீரிய பதி. அப்பதியின் மாண்பைக் கூறப்புகுந்த ஆளுடைய பிள்ளையார் "கற்றாங்கு எரி ஓம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ்தில்லை." என்றே சிறப்பித்துப் பேசினார். அந்நாட்டில் கலி, அதாவது வறுமை இல்லையானால் வளம் மிகுதியும் உண்டு என்பது புலனாகிறதன்றோ? அவ்வாறான

வளத்திஞல் ஆண்டு வாழும் மக்கள் மாடமாளிகை களிலும் கூட கோபுரங்களிலும் வாழ்ந்தனர் என் பதும் உடனே புலனுகும் உண்மைக் கருத்தாகும். இதனையே தெற்றத்தெளியச் சண்பையர் கோன்,

*செல்வ நெடுமாடம் சென்றுசேண் ஓங்கிச்*
*செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற*
*செல்வர் வாழ்தில்லை !*

என்று செப்பிப் போயினர்.

இத்தகைய தென்னுட்டின் ஒரு திலகமெனத் திகழும் தில்லைமா நகரில் ஒரு குலாலஞர் வாழ்ந்து வந்தனர். அவர் இல்லற நெறியை மேற்கொண் டொழுகிய இளைஞர். இறையன்பு நிறையப் பெற்ற இன்குணர். கூத்தரசனது குரை கழலைக் கும்பிடும் நலத்தின் மிக்கவர். தம்மாலான அறச் செயல்களை யும் அட்டி இன்றி ஆற்றிவந்தவர்.

*ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே*
*செல்லும்வா யெல்லாம் செயல்*

என்னும் சீரிய கொள்கையினர். உலகில் ஒரு சிலர் செல்வம் இருந்தால் மாத்திரம் சீரிய அறத்தைச் செய்ய இயலும் என்று எண்ணித் தம்மால் இயல் வதையும் இயற்ருது வாளா நாளைக் கழித்துவருவர். அக்குலாலஞர் அன்னுர் குழுவில் அகப்பட்டவர் அல்லர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையுடன், மெய்யன்புடையவர்க்குத் தம்மாலான தொண்டு புரிந்துவந்தனர். தம் குலத் தொழிலாகிய மட்பாண்டம் செய்யும் பணியில் ஈடு பட்டுப் பிச்சை ஏற்றுப் பிராணைப் போற்றும் பெருங் குழுவினர்க்கு மண் ஓடு கொடுத்து மகிழ்ந்து

வந்தார். இதுவன்றோ நல்லறத்தின் தன்மை? அறுவை வணிகர் வறுமையாளர்க்கு ஆடையளித்தும், அவ்வாறே ஏனையோர் அகதிகளுக்கு அன்னம் அளித்தும் அறங்களை ஆற்றிவரின், ஏழை எளியவர்களும் உயிரும் உடலும் வளர்க்க உறுதுணையாகும் அன்றோ? இன்னோரன்ன பண்பு நிறைந்தவர் 'சோழ நாட்டுக் குடியினர் என்பதை எண்ணியன்றோ தெய்வச் சேக்கிழார், "சாதிகள் நெறியில் தப்பார்" என்று செப்பியுள்ளார்?

குலாலனார் இங்ஙனமான இன்குணம் படைத்தவர் என்பதைச் சேக்கிழார் பெருமான். கூறும்போது, "வேதியர் தில்லை மூதூர் **வேட் கோவர்** குலத்து வந்தார்." என்றும், 'நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின்மிக்கார்' என்றும், 'பொய் கடிந்து அறத்தின் வாழ்வார்' என்றும், 'மெய்யடியார்கட்கான பணி செய்யும் விருப்பின் நின்றார்' என்றும், 'மனையறம் புரிந்து வாழ்வார்.' என்றும் கூறிப்போந்தார். இவ்வாறு அவ்வன்பரைப்பற்றிப் பேசிய சிறப்புக்களில் பல அரிய பொருட் குறிப்புக்கள் அழுந்தி இருப்பனவேனும், ஈண்டுச் சேக்கிழார் பெருமானார் அவ்வன்பரின் குலத்தை விதந்து பேசியதை மட்டும் விரித்துக் கூறவேண்டியுள்ளது. அவ்வன்பர் குலாலனார் குலத்தவர் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. குலாலனார் என்பார் மண்ணைக் கொணர்ந்து கையால் பிசைந்தும், காலால் மிதித்தும், மரக் கருவியால் தட்டியும், தகடுகொண்டு அறுத்தும் மற்றும் பல்லாற்றானும் மண்ணினை எடுத்தும் கையாள்வர். இச்செயல்கள் கற்பனை உலகில் கழறப்படும்போது, மண்ணிடத்து இவர்கள் பெருங்கோபம் கொண்டு

இங்ஙனம் செய்கின்றனர் போலும் என்றுக் கருதிப் புலவர்கள் இவர்கள் குலத்தைக் குறிப்பிடும்போது **வேட் கோவர்** குலத்தவர் என்று குறிப்பிட்டும் பேசுவர். வேள் என்னும் சொல் மண் என்னும் பொருளைத் தருவது. இப் பொருளில்தான் உழவர்கட்கு வேளாளர் (வேள்+ஆளர்) என்ற பெயரும் வழங்கப் பட்டு வருகின்றது. ஆகவே, குலாலனூர் குலத்தவரைக் குறிக்க வேட்கோவர் குலம் என்று கூறுதல் சாலவும் பொருத்தமானதே. ஆனல், அருண்மொழித் தேவர் இக்காரணம் கருதிமட்டும், 'வேட்கோவர் குலத்து வந்தார்.' என அவ்வன்பரைக் குறிப்பிட்டிருப்பதாக நாம் கருதுவதற்கு இல்லை. அவ்வன்பர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பினை நம் தொண்டர் சீர்பரவுவார் முன்னரே நன்கு அறிந்திருந்தார் ஆதலின், அவ்வாழ்க்கைக் குறிப்பின் கருத்தினைக் கொண்டே **வேட் கோவர்** குலத்து வந்தார் என்று கூறினர். அதாவது **மன் மதனையும் கோபிக்கும்** குலத்தவர் என்பதே அக் குறிப்பினை உணர்த்தும் கருத்து. வேள் என்னும் சொல் மன்மதன் என்றும் பொருள் தரும். இவ்வாறு இவ்வன்பர் மன்மதனைக் கோபித்த குறிப்புப் பின் வரும் நிகழ்ச்சிகொண்டு உணரப்படும்.

நீருக்கு நுரையும், பூவுக்குப் புல்லிதழும், நெல்லுக்கு உமியும் இருப்பது இயற்கை. அதுபோல, இக் குலாலனூர் தம்பால் அன்பர் பணியும் அரன் பூசை நேசமும் ஒருங்கே உடையவரேனும், இன்பத்துறையிலும் சிறிது எளியவராய் விளங்கினர். இதற்குக் காரணம் அவரது இளமைக் கூரேயாகும். 'இளமை மீதூர இன்பத்துறையில் எளியரானுர்.' என்றே சேக்கிழார் செப்பினர். இதனல், தம் கற்பிற்குரிய

மனைவியாருடன் வாழ்க்கையை நடாத்தும்போதும், மற்றொரு மாதரார் மீதும் தம் உள்ளத்தை இவர் வைத்திருந்தனர் என்பது பெறப்படுகிறது.

குலாலனார்க்கு அமைந்த இல்லக் கிழத்தியார் எழிலில் இழிந்தவர் அல்லர். அவ்வம்மையார் தேனலர்க் கமலப் போதின் திருவினும் உருவில் மிக்கவர். பூண் தயங்கு இளமென் சாயல் பொற்கொடி யனையவர். கற்புக்கோர் உறைவிடம். வடமீன் அன்ன கற்புடையவர். இன்னோரன்ன உடற் பண்பும் உளப் பண்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவராய் இருந்தும், இம்மங்கையர் திலகத்தை அக்குலாலப் பெருந்தகையார் ஒரொரு காலம் ஒருவிச் சென்று வேறு ஓர் ஒண்டொடி தன்னுடன் உறைவாராயினர்.

இக்கரந்துறை வாழ்க்கையை இக்காரிகையார் மென்மெல அறிந்தார். தம் கணவனார் செய்கை தவறு என்பது இவர் தம் கண்ணிலும் கருத்திலும்பட்டது. இதனால் தம் வாழ்வு குறைந்தது என்பதற்காக அவர் வருந்தினார் அல்லர். இதனால் தம் கணவனாரது மானம் ஈனமாமே என்று தம் கருத்திற் கொண்டார். தம் கணவனாரை எவ்வாறேனும் இப்பழக்கத்தினின்று விலக்க உளங்கொண்டார். இது செய்ய இயலவில்லை எனில்,

> 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.'

என்று வள்ளுவர் கூறும் வாய்மொழிக்குத் தாம் இலக்கியமாய் அமைய இயலாதென்று எண்ணினார்.

கணவரைத் திருத்துவதென்பது அவரைக் கண்டதும் வாய்வந்தன கூறிக் கரைதலோ எனில், அது

அடாத செயல். அவ்வம்மையார் மேற்கொண்ட முறை வேறு. அம்மாதரார் இல்லற நெறிகளில் சிறிதும் வழுவினர் அல்லர். அட்டில் அமைப்பர்; அமுதுபடைப்பர்; ஆனால் தம் கணவனருடன் இணைந்து இன்முகம் காட்டி இன்புறுநிலையை அறவே ஒழித்தார். கணவனர் அவ்வம்மையாரது ஊடலை நீக்கவேண்டிப்பணிமொழி பலவும் கூறி, இரந்தும் பார்த்தனர். அம்மையார் இணங்கினர் அல்லர். கணவனர் அண்மையராஞல் அம்மையார் சேய்மையராய்ச் சென்றுகொண்டிருந்தனர். கணவனர் அதுபொழுது வலிந்து தம் மனைவியாரைப்பற்ற முயன்றனர். அவ்வளவுதான், உடனே அக்காரிகையார் சிறிதும் தயங்காது '**ஏம்மைத் தீண்டாதீர், தீண்டுவீரேல் திருநீலகண்டத்தின் மீது ஆணை**' என்றனர்.

திருநீலகண்டத்தின் மீது ஆணை என்றதும் திகைத்தனர் அவ்வன்பராம் குலாலனர். அல்லும் பகலும், 'திருநீலகண்டம், திருநீலகண்டம்' என்றே அத் திருநாமத்தை இடையறாது எண்ணுபவர். அக் குலாலனர்க்குத் திருநீலகண்டத்தின்மீது தணியா வேட்கை உண்டு.

திருநீலகண்டம் என்பது அரனருடைய மிடற்றை அலங்கரிக்கும் ஓர் உறுப்பு. அது தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தஞான்று எழுந்த ஆலத்தை அடக்கிக்கொண்ட குறியாகும். அன்று அவ்வாலத்தை அவ்விறைவர் தம் கழுத்தில் வைத்துக் கரந்திலரேயெனில், மால் அயன் முதலோர் மறைந்தே இருப்பர். அக்கருத்தினைக் கவிகள் கருதிக் கவியும் புனைந்தனர். நஞ்சின் கொடுமையையும் நாதன் அருளையும் திருநாவுக்கரசர்,

பருவரை ஒன்று சுற்றி அரவங் கைவிட்ட இமையோர் இரிந்து
பயமாய்த்
திருநெடு மால்நி றத்தை அடுவான் விசும்பு சுடுவான் எழுந்து
விசைபோய்ப்
பெருகிடம் மற்றி தற்கொர் பிதிகாரம் ஒன்றை அருளாய்
பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட அவன்அண்டர்
அண்டர் அரசே.

என்று அன்பு கனியப் பாடிய தேவாரத்தால் அறியலாம். இவ்வாறு இறைவன் நஞ்சையுண்டு அருளிலர் ஆயின், தேவ மாதர் தம் கணவன்மாரை இழந்து வருந்த நேரிடுகையில், அழுது புரள்கையில் அவர்கள் செங்கைகள் சிவக்க மார் இழவும் கொடுத்திருப்பர். அவ்வாறு அது நிகழாமல் அவர்கள் மங்கள மாதர்களாக மாண்புடன் இருக்க மாதொரு பாகனர் அந் நஞ்சையுண்டு அவர்கள் காதோலை கழலாதிருக்க அருள் செய்தார். இக் கருத்துக்களைக் குமரகுருபரர்,

மாயிறு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்றுள் ஆடும்
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற்றம்மா
நாயகன் கண்டம் கருதேல்அந் நாட் டமரர்
சேயிழை மாதருக்குச் செங்கைகளும் கொங்கைகளும்சிவக்கும்
போலும் !

என்றும்.

நம்பா நினக்கோலம் முறையோஎனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நந்தேவர் என்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த தயவாளர்

என்றும் கற்பனை செய்து கவிபுனைந்த கவினை நோக்குங்கள். இன்னோரன்ன மாண்பு அத் திருநீலகண்டத்திற்கு இருப்பதால்தான் சங்கச் செய்யுட்களும் அதனைச் சிறப்பித்துப் பாடுகின்றன. அது செந்தண்மை

பூணும் அந்தணர் பெருமக்களால் போற்றப்படுவது என்பதைப் புறநானூறு புகழ்ந்து பேசுகையில்,

> "கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
> மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே"

என்று பாராட்டிப் பேசுகிறது.

ஆகவே, குலாலனார் திருநீலகண்டப் பற்றுடைய ராய்த் திகழ்ந்ததனால் அவரைத் **திருநீலகண்டர்** என்றே திரு நிலம் அழைக்கும் திருநாமமும் பெற்றார். அன்புக்குரிய அணங்கனார் 'என்னை' என்னாது 'எம்மை' என்று பன்மையில் கூறிய பான்மையால் பெண் இனங்களையே இணைத்துக்கூறியதாக எண்ணிக் குலாலனார்,

> ஆதியார் நீலகண்டத் தளவுதாம் கொண்ட ஆர்வம்
> பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
> ஏதிலார் போல நோக்கி எம்மை யென்றதனால் மற்றை
> மாதரார் தம்மை என்றன் மனத்தினும் தீண்டேன் என்றார்.

இதனையன்றோ புலன் அடக்கம், பொறியடக்கம் என்று புகலுதல் வேண்டும்?

> ஊறு ஞானத்து உயர்ந்தவ ரேனும்
> வீறு சேர்முலை மாதரை வெல்வரோ"

என்று கம்பர் கழறிய அருமைப் பாட்டைக் திருநீல கண்ட நாயனார் எளிமையாக்கினார்.

இவ்வமயத்து "கல்வியில் பெரியனாம் கம்பரை கழறியுள்ள மற்றொரு கருத்தும் நம் நினைவிற்கு வருகின்றது. அதுதான், சிறையிருந்த செல்வியாம் சீதா தேவியார் அனுமனையே இராமனிடம் கூறுமாறு கூறிய அடையாள மொழியாகும்." இந்தவிப் பிறவிக்கு இரு மாதரைச் **சிந்தையாலும் தொடேன்** என்ற

செவ்வரம்" என்பது அம்மொழி. இராமன் இங்ஙனம் தனக்கு வாக்களித்ததாகச் சீதை நினைவுபடுத்திக் கூறியனுப்பினள். இங்ஙனம் கம்பர் கூறுதற்குத் துணையாக இருந்தது ஈண்டுச் சேக்கிழார் பெருமானார் செப்பிய "மற்றை மாதரார் தம்மை என்றன் மனத்தினும் தீண்டேன்" என்னும் சீரிய தொடரே அன்றி வேறன்று.

கற்புறு மனைவியாரும் கணவனார்க்கு ஆன எல்லாம் மெய்யுறுத வகை பொருந்துவ போற்றிச் செய்து வந்தனர். இருவரும் வேறுவேறு வைகினர்; அயல் அறியாமை வாழ்ந்தார். இதுவே இல்லறம் நடத்துவோர் நற்பண்பாகும். குடும்பக் குழப்பம் எதுவாயினும் அது குவலயம் அறியாவாறு நடந்துகொள்வதே சால்புடையதாகும்.

கிருகச் சித்திரம், வெளியிடுதல் கூடாதது என்பது நீதி நூல் கருத்தும் ஆகும். ஆகவே, அயலறியாமை வாழ்ந்தார் என்பதும் அருமையினும் அருமையாகும். அம்மையார் மெய்யுறு வாழ்வு நடத்தினும் கணவனாரைப் போற்றும் கருத்தில் மட்டும் தவறிலராய் நடந்து, தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாப் பெண்ணிற்கு தாம் ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கிவந்தனர்.

கணவன் மனைவிக்குப் பிணக்கு வருதல் உண்டு—இதனைத் தமிழ் இலக்கணம் ஊடல் என்று உரைக்கும். ஊடல் கூடற்கு இன்பம் என்றுகூடக் கூறுவர் கூரிய மதியினர்.

ஆனால், திருநீலகண்டனார்க்கும் அன்னார் திருந்திழையார்க்கும் உற்ற பிணக்கு நாள் கடந்து, வாரம் பல போகி, திங்களும் எண்ணில தீர்ந்து, ஆண்டுகளும்

பலவாகத் தொடர்ந்து இருந்தது. இதனுல் இவர்கள் உடன் உறை வாழ்வின்றி ஒழுகுவாராஞர். இவர்கள் எது முதல் எதுவரை இன்னணம் பொற்புற மெய் யுருது பொலிந்துவந்தனர் என்பதைக் கற்பனைக்கு ஊற்ரும் துறைமங்கலத் துறவியார் சிவப்பிரகாசர்,

*படர்முதிர் வேனில் பகற்கொடும் பாலை*
*நிலத்துநீர் வேட்டோன் நீர்அரி தினில்பெற்*
*றுண்புழி உண்ணு தொல்லையில் தடுக்கும்*
*செயலென வெமைநீ தீண்டேல் என்று*
*நின்மேல் ஆணை நிகழ்த்திட நீங்கிப்*
**புணரியுண் டெழுந்த புயல்நிகர் வளர்குழல்**
**அஃதுஞ முகின்போன் றழகுறுங் காறும்**
*தீண்டா தொருபூஞ் சேக்கையிற் துயின்று*
*மாரு அன்பு வளர்மனத் தவர்.*

என்று அழகுறத் தெளிவித்துள்ளார். அதாவது அம்மையாரது கருங்குழல் சூல்கொண்ட மேகம் போன்று இருந்த இளமைக் காலந்தொட்டுக் கரு வுருத வெண்முகில் போல முடி துலங்கும் காலமாகிய முதுமைப் பருவம் காறும் இந் நோன்பினை மேற் கொண்டனர் என்பதாம். இதுவன்ரே தூய நெறி என்பது?

இவ்வாறு பல்லாண்டுகள் கழிந்தும் கருத்துக் குகந்த காரிகையார் தமக்கு இட்ட கட்டளையைத் தட்டிஞரில்லை திருநீலகண்டர். பிற மாதராரை மனத்தாலும் எண்ணிஞர் இல்லை. காரிகையார் திருத் திஞர். கணவரும் திருந்திஞர். இத்தகைய சீரிய செயலை இவ்வம்மையார் செய்தமையின், இம்மாதரா ரைக் **கணவரைத் திருத்திய காரிகை** என்று கருதிக் கூறியது சாலவும் பொருத்தமே அன்ரே?

திருநீலகண்டனார் செயல் அரிய செயல், பெரிய செயல். இளமை மீதுற இன்பச் செயலில் எளியராய இவர் அணங்கனார் இட்ட ஆணைக்கு அடங்கி நடந்தார் எனில், இவர் பண்பாட்டை என்னென்று இயம்புவது? இந்த அருமைப் பாட்டை எண்ணி இரும்பூ தெய்திய முற்றுந் துறந்த முனிவராம் பட்டினத் தடிகள்,

மாதுசொன்ன சூளால் இளமை துறக்கவல் லேன்அல்லேன்

என்று பாராட்டிப் பேசினார்.

# 8. முனிவர் பின் சென்ற மூதறிவாட்டி

செந்தமிழ் மொழியில் கொடைச் சிறப்புப் பெரு வாரியாகப் பேசப்பட்டிருக்கிறது. "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்னும் குறிக்கோளை நினைத்து நம் தமிழ் மக்கள் ஈகைப் பண்பை மேற்கொண்டிருந்தனர். இந்தப் பண்பாட்டில் தலைசிறந்து விளங்கிய காரணத்தால் இன்னது ஈதல், இன்னதை ஈதல் ஒண்ணாது என்றுங்கூட எண்ணாராய்த் தம்மை அடுத்து இரப்பவர்க்கு எதையும் ஈந்து வந்தனர். இவ்வாறு ஈந்து ஈந்து தமிழ் மக்கள் மடம்பட்ட காரணத்தால் இலக்கணத் துறையிலும் இதற்கென ஓர் இலக்கணத்தையும் வகுத்து விட்டனர். அதுவே கொடைமடம் என்பது. இத்தொடரை விளக்கவந்த உரையாசிரியர்கள், "இன்னதைத்தான் கொடுக்கலாம். இன்னதினைக் கொடுத்தல் கூடாது என்று கருதாமல் இயல்வது கரவாது மடமைப்படுதல்" என்று விளக்கிக் கூறினர். இக்கொடைமடக் குணம் தன்பாய் இல்லையானால் குறுநில மன்னனை பாரி முல்லைக் கொடிக்குத் தான் ஊர்ந்துவந்த தேரை நிறுத்தி அது படர்தற்கு உதவி இருப்பானா? இரான் அன்றோ?

இவனைப் போலவே பேகன் என்பானும் நளிரால் வாடிய மஞ்ஞைதனக்குத் தான் போர்த்தியிருந்த பட்டுப் படாத்தினை ஈந்து இருப்பானோ? இரான் அன்றோ? இன்னோர் அன்னோர் இயல்பினை விளக்கும் பொருட்டே கொடைமடம் என்னும் புறப்

பொருள் இலக்கணமும் வகுக்கவேண்டியதாயிற்று. இம் மடம் கொண்ட மன்னரே அன்றி, மன்பதைதன்னுளும் ஒருவர் இருந்தனர் என்பதையும் நாம் அறிதல்வேண்டும். அன்னார் யார் என்பதையும், அவர் கொடை மடம் பட்டது எங்ஙனம் என்பதையும் சிறிது காண்போமாக.

சங்கச் சான்றோரால் பெரிதும் பாராட்டப் பட்டுப் பாடப்பட்ட தமிழ் நாட்டுப் பழம் பதிகளில் புகார் என்னும் பெயரிய பொருவில்நாடு ஒன்று உண்டு. இதுவே காவிரிப்பூம்பட்டினம் எனப்படும். நாட்டின் நலத்தைக் கூறவந்த நாவலர்,

> நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரு நாடு.

என்று கூறிப் போந்தார். இதனால் நாடு என்பது தன்னகத்தே மக்கட்கு வேண்டுவன பெற்று ஒன்று தேவை எனப் பிற நாட்டிற்குப் புகாதிருப்பதே என்பது புலனாகிறது. இந்த வளனும் வனப்பும் காவிரிப் பூம்பட்டினம் பெற்ற காரணத்தால் புகார் (அதாவது ஈண்டுள மக்கள் தம் நலம் கருதிப் பிறநாடு புகார்) என்னும் பெயரைப் பெற்றதைக் காண்க.

> பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய
> பொதுவறு சிறப்பின் புகார்.

என்பது சிலப்பதிகார அடிகள். மற்றும் இதன் பெருமை பல்லாற்றானும் பரந்து நிற்றலின், இதன் பழம்பெருமை உணர அவாவுறுவோர், சிலப்பதிகாரம், பட்டினப் பாலை, மணிமேகலை போன்ற நூல்களைப் பயின்று பலனுறுவாராக.

புகார் நகரைப் புனிதமாக்குவது தாவில் புகழுடை காவிரியாகும். இதன் நன்னீர் பாய்தலால்

மருதவளம் மாண்புற்று இருந்தது." இதன் நீர் பாய்ந் தால் புலால் கமழும் புண்ரியும் புனிதமாகும் என்று கூடக் கூறலாம். இவ்வாறு ஆற்றுவளனும் நாட்டு வளனும் ஒருங்கே நிறைந்த பூம்புகார் நகரில் வணிகர் குல திலகமாக ஒரு பெரியார் வாழ்ந்து வரலானர்.

இப் பெரியாருக்கு இவர் தம் பெற்ருேர் இட்ட பெயர் இன்னதென்பது அறிதற்கின்றேனும், இவர் பால் அமைந்த குணத்தால் இடுகுறிப் பெயர் மறை யக் காரணப் பெயர் அமைவதாயிற்று. அதுவே **இயற்பகையார்** என்பது.

இத்தொடரின் பொருள் உலக இயற்கைக்குப் பகையாய் இருந்தவர் என்பது. இவர் அளவில் செல் வம் அமையப் பெற்றவராய்த் திகழ்ந்தார். தம்பால் எவர் வந்து, எது வேண்டினும், இல்லை என்னது ஈந்தே வந்தனர். இலம் என்னும் எவ்வம் இவர் பால் இலதாயிற்று. இல்லை என்றிரப்போர்க்கு இல்லை என்றுரையா இதயம் படைத்தவராய் விளங்கினர். இந்தப் பண்பாடு இவர்பால் உரம்பெற்று இருந்தமை யால் செந்தமிழ்ப் புலமைச் சுந்தரமூர்த்திகள் "**இல்லையே என்னத இயற்பகை,**" என்று தம் இத யம் ஆரப் புகழ்ந்ததை யாரே மறக்கற்பாலர்?

இயற்பகையார் இன்னணம் வாழும் நாளில், இவ ரது உள்ளத்தின் தூய்மையையும், இல்லையே என்னத இயற்பகைஎன்பது என்றும் எக்காலத்தும் இவருக்கு உகந்த பட்டமே என்பதையும் பார் அறியப் பரமனர் இவர் இல்லம் நாடி வருவார் ஆயினர்.

பரமனர் நேரே பக்தனர் இல்லம் புகுந்தார். இயற்பகையார் தம் இல்லம் போந்தவர் இறைவர் என்பதை அறியார். எவராயினும் நீறு பூசிய நின்

மலராக இருந்ததனுல், அவரை நன்முறையில் வர வேற்றுத் "தம் குலம் செய்த தவமே இக்கோதில் பெரியரை இங்குக் கொண்டுவந்தது போலும்" என்று மனமகிழ்ந்து வந்தனே வழிபாடு ஆற்றினுர். இயற்பகையார், "ஓடும்பொன்னும் ஒக்கவே நோக்கும் முனிவீர்! நீர் என் வீடு நோக்கி வந்துற்றது என் கருத் திறைலோ?" என்று வினவ, வந்த முனிவர் கைதவ மறையோர் ஆதலின் (அதாவது ஒழுக்கமும் தவமும் நிறைந்த முனிவர் என்றேனும் வஞ்சகம் நிறைந்த முனிவர் என்றேனும் பொருள்படும்) நிலேயில் வந்துள் ளார் ஆதலின், தாம் வந்த காரணத்தை வகுத்துக் கூறுதற்கு அஞ்சிநின்ருர். தம் கருத்தை வெளியிடுவ தற்கு முன் இயற்பகையார் இடமிருந்து உறுதிமொழி வாங்க முற்பட்டார். "நீர் வேண்டுவார்க்கு வேண்டு வன ஈயும் கடப்பாடுடையவர் என்று வையகம் கூறும் மெய்யுரை கேட்டு நும்பால் ஒன்று வேண்டி வந்தனம். அது கொடுக்க நீர் இசைவீரேல் யானும் இயம்புவேன்" என்ருர்.

இங்கே முனிவர் மனேநிலேயை நன்கு உணர வேண்டும். தாம்கேட்பது இன்னது என்பதைக்கேட் டால் அன்ருே அதனே ஈபவர் இயலும் இயலாது என்று இயம்பவல்லவர் ஆவர்? அஃது இன்னதெென அறிவித்தற்கு முன் "அதனுக் கிசையலாம் எனில், இயம்பலாம்" என்று கைதவமறையோர் கழறுவ தின்று, தாம் கேட்கப்புகுவது அல்வழிச் சொல் ஆத லின், அவனி ஏற்காததாக இருக்கும் என்று தாமே நன்கு அறிந்துள்ளார் என்பதை அன்ருே அவர் பேச்சு நின்றும் அறிகிருேம். என்ருலும், முனிவர் கேட்கத் தான்போகிருர். இயற்பகையார் ஈயத்தான் போகிருர்.

இயற்பகையார் ஈய ஒவ்வியது இம்பர் ஞாலம் ஏற்காததொன்று. எவரும் இயற்றாததொன்று. இவ்வாறு இவர் ஈயமுற்பட்டதனால் அன்றோ, இவர் இயற்பெயர் மாறிச் செயற்பெயராகிய இயற்பகையார் (அதாவது உலக இயல்புக்கே மாறாக நடந்தவர்) என்னும் திருநாமம் தமக்கு நிலைக்க வாழ்ந்தவரானார். இவ்வாறு இருக்க, இவரையும் இவரையண்மி இரந்த முனிவரையும் வெறுத்துரைப்பதில் பயனுண்டோ என்பதைச் சிந்தித்தோர்மின். இது நிற்க.

வந்த முனிவர் தாம் பேச்சில் வல்லவர் என்றி யாம் மயங்குதற்கில்லை. அவரினும் இயற்பகையார் விஞ்சியே விளங்கினார். அவர் மொழி கேட்டு இவர் விழித்தாரில்லை. விழிப்புற்று நின்றார். தம் சொல் வரிசையையும் சொல்லலுற்றார். "முனிவர் பெருமானே! நீர் மொழிவது மொழிமின். யாது ஒன்று என் பக்கல் உண்டோ, அது உம்போன்ற முனிவர்க்குரிய உடைமைப் பொருள்" என்று எதிர் மொழிந்தார். பெற்றம் ஊர்வதும் இன்றியோர் பேதையாளுடன் இன்றி ஓர் நற்றவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட வந்த இறைவர், அற்றம் பார்த்து, "நும் அருமை மனைவியாரைப் பெற வந்தனம்" என்று அறைந்தனர்.

இயற்பகையார் இம் மாற்றம் கேட்டதும், முனிவர் தம் இல்லம் போந்தபோதுற்ற இன்மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சிகொண்டார். ஆருயிர் அனைய அகத்தவளைக் கேட்டனரே என்று அகமும் வாடிலர்.

இயற்பகையார் அதுபோதுற்ற நிலை இரகு குல திலகனும் இராமனது உள்ளக்கிடக்கைபோல் ஒளி விட்டுக் காணப்பட்டது. இராமனுக்குப் பட்டம்

சூட்டுவதாகத் தயரதன்முன் மொழிந்தான். அது கேட்டு இராமன் மகிழ்வுற்ருன். பின் தனக்குப் பட்டம் இல்லை என்று கூறும்படி கூறியதாகக் கைகேயி கூறக்கேட்ட போதும் முன்னிருந்த மகிழ்ச்சியினும் மும்மடங்கு மகிழ்ந்தான். இதனைக் கம்பர்

> இப்பொழுது எம்ம னோரால் இயம்புதற் கெளிதே அம்மா
> செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
> ஒப்பதே முன்பு பின்புஇவ் வாசகம் உரைப்பக் கேட்டு
> அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

என்று இராமன் உளப்பண்பைச் செந்தமிழ் அடியில் செம்மையுறக் காட்டிநின்ருர். ஈண்டுச் சேக்கிழார் மொழிந்த "சொன்னபோதிலும் முன்னையின் மகிழ்ந்து" என்னும் சொற்ருெடர்தனக்கு ஒரு விரிவுரை கண்டதுபோல் அன்ருே கம்பர் பாடல் காணக் கிடக்கின்றது?

"முனிவரே! நீர் கேட்ட பொருள் என் வீட்டகத்தே உளது. என்பால் இல்லாப் பொருளை வேண்டாது உள்ள பொருளையே வேண்டுமென உரைத்து என்னை வாழச் செய்தீர்." என்று பணிமொழி பகர்ந்து மனையகம் புகுந்தார். மனையாளை அணமினுர். இவ்வாறு அண்மிய இயற்பகையார் தம் கருத்தை வாழ்க்கைத் துணைவியார்க்கு வழங்குதற்குமுன், எம்முறையில் சென்று எம்முறையில் விளித்து வழங்கினுர் என ஆசிரியர் தம் சீரிய கூரிய மதிவன்மையால் நமக்கு அறிவிக்கின்ருர் என்பதை யாவரும் மனத்தில் சிந்திப்பாராக.

"கற்பில் மேம்படு காதலியாரை அணுகினுர்" என்று அழகுற மொழிகிருர் ஆசிரியர். இதனுல் அவ்வம்மையார் கணவனுர் கருத்துகந்த காரிகையார் என்

பதும் அன்புக்குகந்த ஆருயிர் அணங்கனார் என்பதும் புலனாகின்றன அல்லவோ?

இப்பொருளினைக் கற்பு, காதல் என்னும் இரு சொற்களும் தந்து நிற்கின்றன. அவ்வாறு அணுகிய அவர் அம்மாதராரை விளிக்கையில் "விதி மணக் குல மடந்தை," என்று விளித்துக் கூறுவாராயினர். இதனால் இயற்பகையாருக்கு வாழ்க்கைப்பட்ட வாழ்வரசியார் காதலால் வந்தவர் அல்லர் என்பதும், கடிமணம் புரிந்துகொண்ட கவினுடை வனிதையர் என்பதும் அன்றோ அறியவல்லவராகின்றோம். இவ்வாறு எல்லாப்படியாலும் பிரிந்துவாழ இயலாத இம் மங்கையர் திலகத்தையும் கொடுக்க அவ்வணிக குல வள்ளல் துணிந்ததால், அவரை இயற்பகையார் என்பதில் யாது ஐயம் உளது? வன்தொண்டப் பெருந் தகையாம் வனப்பகையப்பனார், "இல்லையே என்னாத இயற்பகை" என்னும் பொன்மொழியும் போற்றுதற்குரிய தன்றோ?

இயற்பகையார் தம் இல்லக்கிழத்தியர்பால், "கற்பிற் கணிகலமே! உன்னை யான் இன்று முனிவர் உடைமைப் பொருளாகக் கொடுக்க இசைந்தேன்; கொடுத்தும் விட்டேன்." என்றதும் அவ்வம்மையார் உடனே துணுக்குற்றார். ஈண்டுத் துணுக்குறல் வேண்டியது இன்றியமையாதது. இதுவே உளநூல் பண்பு. அவ்வம்மையார் தாம் தம் கணவனாரிடம் ஒழுகும் ஒழுக்கத்தில் தவறு கண்டு தம்மை ஒருவுதற்கு வழிகண்டு இவ்வாறு கணவனார் செய்தார் போலும் என்னும் எண்ணம் இவ்வம்மையார் உள்ளத்தில் உதித்திருக்கவேண்டும். இதுவே இவரை அவ்வாறு துணுக்குறச் செய்தது. ஆனால், உளமார

அவ்வம்மையார் அவ்வாறு ஒழுகிற்றலர் என்பது உணர்ந்து பின்பு மனந்தேறிக் கணவனுரைப் பார்த்து, "அன்பரே! கடிமணம் புரிந்த அன்றே என்றன் ஆவியும் உடலும் எல்லாம் உமக்கே உரிமையாக்கினேன். ஆதலின், நீர் இவ்வாறு மொழிவதால் இன்று எனக்கு இடையூறு உண்டோ? நன்றே செய்வீர் பிழை செய்வீர் நானே இதற்கு நாயகமே என்று கூறித் தம் தனிப் பெருங் கணவனுரை வணங்கினர். இயற்பகையாரும் எதிர் வணங்கினர். என்னே! மனைவியார் வணங்கல் பொருத்தமே. கணவனும் எதிர் வணங்கல் சால்புடையதாமோ? என்று நாம் எண்ணவும்கூடும். இயற்பகையார் வணங்கியது சாலவும் தக்கதேயாம். ஏன்? இனி அவ்வம்மையார் தம் உடைமைப் பொருள் அல்லர். முனிவர் தம் கிளைஞர் ஆயினர். அவ்வாறு இருக்க இயற்பகையார் வணங்கியதால் தவறு யாதுளது?

கணவனுரை விட்டு நீங்கிய காரிகையார் ஆண்டிருந்த மாதவனுர் சேவடியைச் சென்று பணிந்து நின்றுர். பணிதற்குமுன் சிறிது திகைத்துப்போனுர். வந்த மாதவர் "கனல் வாதை வந்தெய்தின், உதிர் சருகு கந்த மூலங்கள் உண்டு வாழும் இயல்புடையவர், ஓர் இல்லறத்தார் இல்லக்கிழத்தியாரை இரந்தது ஏனே?" என்னும் எண்ணமே இவ்வம்மையாரைச் சிறிது திகைக்கச்செய்ததென்க.

மாதவனுர் மங்கையாரை ஏற்றுக்கொண்டார். ஏற்றதும் வீட்டைவிட்டு ஏகாதிருந்தனர். இயற்பகையார், 'முனிவரே, இன்னமும் ஏதேனும் யான் செய்யவேண்டி இருப்பின், பணிமின்; சிரமேற் கொண்டு செய்து முடிக்கிறேன்" என்றுர். இவரை,

உள்ளி உள்ள எலாம் உவந்தீயும் வள்ளியோர் என வாயாரக்கூறி வழுத்தலாம் அன்ருே? முனிவர், "அன்பரே யான் உம் மனத்துக்குகந்த மனைவியாரை அழைத்துச் செல்கையில், ஆற்று நெறியில் உம் அருங் கிளைஞர் எனக்கு அல்லலை ஆற்றவும்கூடும். உறவினரே அன்றி உலகத்தவரும் என்னை ஒறுத்தே தீர ஓடிவருவர். இன்னோரன்ன இடையூறு எய்தாதவாறு சிறிது சேய்மைக்கண் யான் செல்லுமளவும் செழுந்துணையாக வருதல்வேண்டும்" என்று இரந்து வேண்டினர்.

இயற்பகையார் உடனே போர்க்கோலம் பூண்டு பின்தொடர்ந்து போவார் ஆனர். முனிவர் முன் செல்லப் பின்னே மொய்குழலார் அம் முனிவரைத் தொடர்ந்து செல்வார் ஆனர். இவ்வாறு இவ்வம்மையார் சென்றதனுல் அன்ருே இவர் **முனிவர்பின் சென்ற மூதறிவாட்டி** என்று கூறப்பெறும் பேறும் பெற்றவரானர்.

இயற்பகையார் தம் இல்லக்கிழத்தியரை எவனே ஒரு முனிவனுக்கு ஈந்துவிட்டனர் என்னும் 'இம்மாற்றம் அவ்வூர் எங்கும் காட்டுத் தீப்போல் கடுகப்பரந்தது. இருவர் கேளிரும் கிளைஞரும் ஒருசேர முனிவரைச் சூழ்ந்து' ' அழிதகன் போகேல்! அருங்குலக் கொடியை விட்டு அகல்!" என்று அதட்டி உருட்டி மிரட்டினர்.

முனிவர் அஞ்சினர்போல் அணங்கனரைப் பார்த்தார். அருங்குணவதியார், "இறைவரே! அஞ்சற்க. நம் இயற்பகையார் அவரை எல்லாம் வெல்வர்." என்று விடை இறுத்தார். இவ் அம்மையார் முனிவரைத் தவறுடைய தவசி என்று கருதாது, இறைவரே! இவ்வாறு வந்தார்போலும் என்று எண்

ணியே 'இறைவரே' என்று விளித்துள்ளார். இதனுல் தீய குறிப்புடன் முனிவர் வந்திலர் என்பதும், அம்மையார் உடன்சென்றது குற்றம் அன்று என்பதும் இயற்பகையார் ஈந்ததும் தவருகாது என்பதும் முதலான குறிப்புக்கள் தொனிப்பனவற்றைக் காண்க.

சினத்தொடு வந்த சுற்றமும் நட்பும் இயற்பகையாரை நோக்கி, "ஏடா! நீ என்செய்தாய்! உன்றன் மனேவியை முனிவர்க்கீதல் முறையாமோ? அறமும் தானே? இப்பழி உன்னேடன்றி நம் மரபுக்கும் மாசாகாதோ? ஆகவே, இதனில் நாங்கள் வெற்றி காண்பளவும் எதிர்த்து வீரசுவர்க்கமே புகுவோம்" என்றனர். இதனுல் இயற்பகையார்க்கும் அன்னர் தம் இரும்பெருஞ் சுற்றத்தார்க்கும் அதுகாரணமாகப் பெரும்போர் மூண்டது. மானம்காக்கச் சிலர் மாண்டும் போயினர். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னர், உயிர்நீப்பர் மானம் வரின்," என்பதற்கு இயற்பகையாரின் இனிய கிளைஞர்களே எடுத்துக்காட்டாய் விளங்கினர். இதனுல் இயற்பகையார் செய்த செயல் அக்காலத்தும் ஏற்றுக்கொள்ள எவரும் விரும்பிலர் என்பதும், இப்பெருந் தொண்டரும் இயற்கைக்குப் பகைவரே என்பதும் புலனுகின்றன அன்றே!

இயற்பகையாரின் மனநிலையைக் கண்ட நட்பும் கிளையும் "இனி இவனுடன் வாதிட்டுப் பலனில்லை." என்று வந்தவழியே மீண்டனர். முனிவரும் மாதராரும் செயற்கரும் செய்கை செய்த தீரராம் இயற்பகையாரும் சிறிதுதூரஞ் சென்றனர்.

முனிவர், திருச்சாய்க்காடு சென்றதும், "அன்பனே! இனி நீர் செல்லலாம் யானும் செல்கின்றேன்" என்றனர். இயற்பகையார் உடனே விடை

பெற்றுத் தம் வீடு திரும்பினூர். சென்றவர் இத்துணை காலம் இன்புடன் தம்முடன் வாழ்ந்த ஏந்திழை யாரைச் சிறிதும் ஏறிட்டுப் பாராதே திரும்பினர். என்னே! இயற்பகையாரின் தூய உளப்பான்மை! முனிவர்க் கீந்தபோதே அம்மாதராரைத் தம் மனைவி யார் என்பதை மறந்தார். இனி நினைப்பதும் பார்ப் பதும் தவறு எனவே தன்னகத்துக் கொண்டார்.

முனிவராக வந்தவர் இயற்பகை முனிவரின் இல் லக் கிழத்தியாரைத் தாம் வேட்டது இல்லறம் நடத்து தற்கு அன்று. "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பதை இம்பர் ஞாலம் உணரவே இவ் வாறு இச்செயல் புரிந்தார். ஆகவே, அத்தொண்டனு ரின் தூய்மையை விளக்க அவரை மீண்டும் மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேட நின்றூர், "இயற்பகை முனிவா ஓலம்; ஈண்டு நீ வருவாய் ஓலம்; அயர்ப்பி லாதானே ஓலம்; அன்பனே ஓலம் ஓலம்; **செயற்கரும் செய்கை செய்த தீரனே** ஓலம்" என்று அழைப்பார் ஆயினர்.

இவ்வாறு ஓலமிட்டுக் கதறிய கதறலைக்கேட்ட இயற்பகையார் மீண்டும் சுற்றத்தார் வந்து தொந் தரவு செய்தனரோ என்று துணுக்குற்றவராய், "அடியனேன் வந்தேன் வந்தேன்" என்று ஓடோடி யும் வந்தார். வந்து முனிவரைக் கண்டிலர்; மொய் குழலாரைக் கண்டார். இதற்கிடையில் முனிவர் அம்மையப்பராய் அகல்வானில் பொலியக் கண்டார்.

இயற்பகையாரும் அவர் தம் இன்மனையாரும் இறைவரைத் தொழுது மீண்டார். இறைவரும் அவர்கள் என்றும் இணைபிரியா வாழ்வெய்தும் வரத் தையும் ஈந்தார்.

இறைவர் இயற்பகையார் மனைவியாரை வேட்டு வந்திருப்பின், விட்டுச் சென்றிருக்கமாட்டார். தாம் வந்தது சேயிழையாரை விரும்பி அன்று. தமக்கும் ஒரு துணையுண்டு என்பதை விளக்கவே அம்மையப்பனுய்க் காட்சியும் அளித்தார். இயற்பகையாரும் செயற் கருஞ் செய்கை செய்த தீரரானதால்தான் பெரியர் என்னும் பேறும் பெற்ருர். இந்த உண்மைகளை உணர்ந்தே இவ் **முனிவர் பின்சென்ற மூதறிவாட்டி யார்** வரலாற்றினை உன்னி உன்னிப்பயில வேண்டும். மேல் போக்கில் படித்துக் குறைகூறுவதில் பய னின்று

செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்பதன்ரே வள்ளுவர் வாக்கு!

# 9. உத்தி கூறிய உத்தமி

மாதர்கள் தாம் மணந்த காதலர்க்கு அன்னையாகவும், அடியாள் ஆகவும் அமைச்சராகவும் அமைகின்றனர். அறுசுவை உண்டியை அட்டி அருமைக் கணவனார்க்கு அருத்துதலின் அன்னையர் ஆகின்றனர். அகமுடையானுக்கு ஆவன செய்யும் தொண்டினை உளம் கோணாது இயற்றலின் அடியாள் ஆகின்றனர். உறுங்கவல் ஒன்று உற்றுழி, உத்திகூறித் தம் கணவனுக்கு ஊக்கம் அளித்தலின் அமைச்சர் என்னும் அருநிலை பெறுகின்றனர். இவையனைய அருங்குணங்கள் ஒருங்கே மங்கையர் இடத்து மண்டிக் கிடத்தலின், இவரை இழந்தால் எல்லா நலனும் இன்பும் இழக்க நேரிடும் என்பதை உளங்கொண்ட நம் முன்னோர், "பொற்றொலியோடு எவையும் போம்" என்னும் பொன்னுரையையும் புகன்று சென்றனர். இந்தப் பண்பு அமைந்த ஓர் அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்பை வரைவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சோழநாட்டுச் சிறு கிராமங்களில் இளையான் குடி என்பது ஓர் இனிய பதியாகும். அச்சிறு கிராமம் குடிமக்கட் செறிவு குறைவறப் பெற்றது. அங்குள்ள குடிகள் எதற்கும் இளையா ஈர நெஞ்சினர். அக் குடிமக்களுள் மாறனார் என்னும் மாண் பெயருடைய வேளாளர் ஒருவர் வாழ்ந்துவந்தார். உழுதுண்டு வாழும் உத்தம தொழிலால் ஊதியம் பெருக்கிச் சிறக்க வாழ்ந்தனர். இவர் நாள்தோறும் தம் இல்லம் போதரும் வறியர்க்கும் எளியர்க்கும்

இறைவன் திருநாமம் கூறும் திருக்கூட்டத்தினர்க்கும், மங்கள வேடம் பூண்ட மாட்சிமை யுடையவர்க்கும் சோறும் கூரையும் சோராது அளித்துவந்தார். இவர்க்கு அடியார் பக்தி அதிகம். எவரையேனும் இவர் காண நேரிடின் அவரை வீட்டிற்கு அழைத்து வருவார். அவர்களைக்

*கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே*
*மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்*
*உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத்தி றத்தனில் ஒப்பிலா*
*அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின் அமுது செய்ய*
*அளித்துளார்.*

இந்த முறையில் தம் கடமையை ஆற்றிவருவார் ஆயினர் இவ்வாறு செய்து வந்ததால், பொய்யில் புலவர் பொருள் உரையாகிய

*வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்.*

என்பதற்கு இணங்க, இவரது நன்செய் நிலங்கள் நல்ல பலனை அளிக்க அளகேசன் நிகராக வாழ்ந்து இல்லறத்தை இனிதாக நடத்திவந்தார்.

மக்கள் இயல்பு மாண்பொருள் தமக்குள்ள காலத்தில் தானமும் தருமமும் செய்வதாகும். அது குறைவுற்றபோது தருமம் செய்யச் சிறிது தளருவர். அடுத்துக் கேட்டாலும், "தனக்கு விஞ்சித்தானே தருமம்" என்று பழமொழி கூறிப் பரிகசிப்பர். ஆனால், வறுமையிலும் செம்மையுடையவராய்த் தாம் மேற்கொண்ட விரதம் எவ்வகையிலும் கெடாதவாறு, தம்மால் ஆன உதவியைச் செய்து இசை நிறுவுபவரே மக்கள் என்னும் பண்புக்குரியவர் ஆவார். இன்றேல் பெரியர் என்றோ சீரியர் என்றோ, செப்ப

இடம் பெருதவராய்ப் பொதுமக்கள் என்னும் பெயர் அளவில் நிற்பர். ஒருவர் பெரியர் ஆதற்கும் சிறியர் ஆதற்கும், அவர் அவர் செயல்களே சிறந்த காரணங்கள் ஆகும். "தன்னைத் தலையாகச் செய்வானும்தான்" என்று தமிழ் நூல் சாற்றுவது இக்கருத்தைப் பற்றியே ஆகும். அரிய செயலை மக்கள் ஆற்ற முற்படுகையில் அரிய சோதனைகளும் ஏற்படும். அக் காலத்திலும் மனம் தளரல்கூடாது. தளர்ச்சியைக் கொடுக்க இயற்கைச் சூழலும் இடங்கொடுக்கும். அக்காலங்களில் நெறி தவரு மக்கள் அதனையும் எதிர்த்துத் தம் கொள்கையை நிலைநிறுத்துவரேல் நில உலகில் நீடு பயன் எய்துவர்.

இத்தகைய சோதனைக் காலம் மாறனுர்க்கு நேர்ந்தது. இவரது செல்வம் மெல்ல மறைந்து, இவர்க்கு அல்லல் நல்குரவும் அடைந்தது. இதனைக் கவி கூறுகையில் "செல்வம் மேவிய நாளில் இச் செயல் செய்வதன்றியும் மெய்யினுல், அல்லல் நல்குரவு ஆன போதிலும் வல்லர் என்று அறிவிக்கவே, ஒல்லையில் வறுமைப்பதம்" வந்ததாகக் கூறுகிருர். அறிஞர்பால் அமைந்த வறுமையாதலின் கவி அதனையும் ஒரு பதவி போல் அவர்கள் கருதுவார் என்பதைக் காட்டுவார் போல 'வறுமைப் பதம்' என்று கூறியது ஆழ நினைந்து அதன் பொருளை நன்கு அனுபவிக்கவேண்டிய தொன்ருகும். மாறனுர் வளஞ் சுருங்கினும் மனஞ் சுருங்குதல் இலராய் அற்ருர் அழிபசியைத் தம்மால் கூடிய முறையில் தீர்த்து வந்தார்.

வறுமைநோய் உழந்த வள்ளலாம் மாறனுர் தாம் இருக்க வீடும், விதைக்கச் சிறு நிலனும் தவிர்த்து ஏனைய செல்வங்கள் யாவும் இழந்து வாழ்நாளில்

இறைவனார் முதுமைக் கோலத்தோடு மாறனார் வீடு தேடி வருவாரானார். இவர் வருகின்ற நேரமோ, இருள் அடர்ந்த கங்குல். காலமும் கார்காலம். மேகம் உள்ளி உள்ளவெலாம் உவந்தீயும் வள்ளியோரின் வழங்கிச் சிறிது சலித்து நிற்கும் நேரம். வரும் முதியரின் கோலம் தள்ளாடித் தளர்ந்துவரும் கோலம். இவரது பண்டிசரி கோவண உடை இவரது பழமையை மேலும் மிகுதிப்படுத்தியது. வேணுத் தண்டும் ஆதபம் மறைக்கும் குடையும் அணிகரத்து அழகு செய்தன. இவையனைத்தினும் பசிப்பிணி விஞ்சியவராய்ச் சோறு கருதி மாறனார் இல்லத் திற்கே சோர்ந்து வந்து சேர்ந்தார்.

மாறனார் இம் முதியரைக் கண்ணுற்றதும் முதல் உதவி செய்ய முனைந்துநின்றார். அவரது ஈர மேனியை ஈர அன்புடன் தூய ஆடை ஈந்து துவட்டச் செய்தார். வீட்டினுள் ஆசனத்தில் அமர்த்தினார். வந்த முதிய வர் பசியைப் போக்க வழிதேடலாயினர். மாறனார் தம் வீட்டில் உணவு இன்மையை நன்கு அறிவர். என்றா லும், வந்த விருந்தினரை எந்த விதத்திலும் உண்டி கொடுத்து உதவவேண்டும் என்று உளங்கொண்டார். “உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்” என்னும் பண்டைத் தண்டமிழ்த் தொடர் அன்று இல் லத்திற்குவந்த முதியவர் நிலைக்கு மிக ஏற்றது என்பதையும் நன்கு அறிந்தார். ஆகவே, தம் வாழ்க்கைக் குத் துணைவியாராகிய தம் இல்லக்கிழத்தியாரோடு இதுபற்றி யாது செய்வதெனச் சிந்திப்பார் ஆயினர்.

பெருந் தடங்கண் பிறை நுதலார் ஆகிய அவ் வம்மையார் பொருந்து கல்வியும் அறிவும் பூத்திருந்த காரணத்தால் வருந்தி வந்தவர்க்கு விருந்தளிக்க

வேண்டுவது தம் தலையாய கடன் என்று கணவனார் கருத்துக்கிணங்க நின்றார். ஆனால், அவ்வம்மையார்க்கு மட்டும் ஒரு கவலை. அது, தாம் பரம ஏழையாகிவிட்டதால், அக்கம் பக்கத்தவரும் ஆதரித்து எதுவும் தர முன்வராரே! மேலும் இரவு வேளையாய் இருத்தலின் எங்குச் சென்று மன்றாடி உதவி பெறுவோம் என்பதே. என்றாலும், அறிவுமீதுரப் பெற்ற அவ்வம்மையாருக்கு இறைவனது அருட் திறத்தால் திடுமென ஒரு சிந்தனை எழுந்தது. கணவனாரை நோக்கினார். 'காதலரே! நம் செல்லல் நீங்க இன்று நம் செய்யில் நெல் விதைத்தனம். அவை இதுபோது மழை பெய்த காரணத்தால் கீழே கிடத்தல் இன்றி வெள்ளத்தில் மிதந்து கிடக்கும். அவற்றை நீர் வாரிக் கொணரின் வல்லவாறு சோறு சமைத்து விருந்தினரை உபசரிக்கக்கூடும்' என்றனர். இதைக் கேட்ட மாறனார்க்கு என்றும் இல்லா இன்பம் எய்தியது. நடுக்கடலில் திசைகெட்டு மயங்கும் ஒரு மானுமிக்குக் கரை ஒன்று காணப்பட்டாற் போலக் கழிபேர் உவகை பூத்தார். இருளென்றும் மழையென்றும் சிறிதும் பாராதவராய் இடாவினைக் கையிற் கொண்டே வெளிக்கிளம்பினார்.

மாறனார் வந்து கண்டபோது அலகையும் அஞ்சும் அத்துணை இருள் அடர்ந்திருந்தது. மைக் குழம்பை வாரியிட்டதுபோல் இருள் காணப்பட்டது. புள்ளும் விலங்கும் உறங்கும் அப்பேர் இருளில் குறி வழியேநெறிதேடித் தம் நிலத்தையடைந்தார். தம் மனத்துக்கினிய மனைக்கிழத்தியார் கூறியாங்கு விதை நெற்கள் மழை மிகுதியால் மேலே மிதந்து கொண்டிருந்தன. அவற்றைத் தாம் எவ்வளவு திரட்ட இய

லுமோ, அவ்வளவுக்கும் திரட்டிக் கூடையில் சேர்த்துக்கொண்டு அவ்விருளிலேயே வீடு திரும்பினார்.

யுக்தி கூறிய உத்தம மாதரார் கணவனார் வருகை நோக்கிக் கடையகத்துக் காத்து நின்றிருந்தார். இருளையும் எழிலியின் குமறலையும் கண்டும், கேட்டும் நெஞ்சம் துணுக்குற்றாரேனும், தம் கணவர் கொண்ட விரதம் பழுதுறாமல் வீடு நோக்கி வந்த விருந்தினரை உண்பித்து உபசரித்தலே தமக்குப் பெரும் பேறாகும் என்று கருதினார். கணவனார் கொண்டுதந்த சேற்றுடன் கலந்த செந்நெல்லை ஒரு பாத்திரத்தில் பெய்து அலம்பினார். நெல் ஈரம் செறிந்து மெத்தென்றிருந்தது. அப்படியே சமைப்பின் சோறு குழம்பிவிடும் என்று எண்ணியவராய் அவற்றை முதலில் சூடேற்றி வன்மையாக்க அட்டில்புக்கார். அந்தோ! அவர்களின் வறுமைக் கொடுமைதான் இருந்தவாறு என்னே! "அடுப்பில் தீமூட்ட விறகில்லையே" என்று கணவனார் முகத்தை நோக்கினார். அக்குறிப்புணர்ந்த மாறனார் தம் வீட்டுக் கூறையிலிருந்து சில மரத்துண்டங்களை அறுத்துக் கொடுத்தனர். மனையின் அலக்கு அறுத்துத் தள்ளப்பட்டால் தம் அகத்தின் அந்தம் குறையுமே என்றுகூடக் கருதினார் அல்லர். அருமைத் தொண்டரின் பசியைப் போக்கின், அதுவே தமக்கு அந்தமாம் வீடு என்று அகத்துள் கொண்டார்.

மாறனார் மனைவியார் அடுப்பில் தீ மூட்டினார்; ஈர நெல்லின் தண்மை போக்கி, வெம்மை ஊட்டினார். அதன்பின் உலையில் பெய்து நல்லமுது ஆக்கி அமைத்தார். நல்ல அமுது செய்ததன்பின் கறியமுதுக்குக் கருதுவார் ஆயினர். மாறனார்பால் மாதரசியார் கறியமுதுக்கென் செய்வதென்று விண்ணப்பித்தபோது, மாற

ஞர் ஞரேல் எனப் புறக்கடை சென்று கீரைப் பாத்தியில் இருந்து கீரையைச் சிறிது பறித்து வந்தனர்.

இலைக்கறிப் பெற்ற ஏந்திழையார் வறிஞனுக்குப் பொற்கிழி கிடைத்தாற்போல் மனம் மகிழ்ந்தவராய்க் கீரைக் கறியை ஒரு பாண்டத்தில் இட்டு முன்னர் நன்கு அலம்பினர்.

இங்கு நாம் சிந்தனை செய்யவேண்டியன பல உள்ளன. மாறனார் மனைவியார் அட்டில் தொழில் ஆற்றுவதில் எத்துணையோ கைதேர்ந்தவராக உள்ளார் என்பதும் தெரிகின்றது.

ஈரம் மிக்க நெல் இனிய சோறு சமைக்க இடந்தராதே என்று எண்ணித் தீமூட்டிச் சிறிது வறுத்தெடுத்தார். பின்பு கீரைக்கறி கொணர்ந்தபோது, அது நிலத்தில் படரும் பயிர் ஆதலின், மண் மிகுதியாகக் கலந்திருப்பின் உண்ணுவதற்கு ஒண்ணாதே என்று அதனைப் போக்க அலம்பி எடுத்தார். இன்னோரன்ன பண்புகள் மாதர்கட்கு இன்றியமையாத அட்டிற் பண்புகளாக இருக்கவேண்டும் என்பதற்கு இவ்வம்மையாரைப் போன்றவர்கள் வழிகாட்டிகளாக இருக்கின்றனர். இன்ன பண்பு வள்ளுவனாரின் வாழ்க்கைத் துணைவியார் வாசுகி அம்மையாரிடத்து அமைந்திருந்தது. அதனால்தான் அந்த அம்மையாரின் அட்டில் தொழிலை வியந்த வள்ளுவனார் 'அடிசிற் கினியாளே!' என்று அழைப்பாராயினர். அவ்வருந்தொடரை இவ்வம்மையார்க்கும் சார்த்தி வழங்கலாம் அன்றோ!

மாறனார் மனைவியார் அட்டில் திறம் இத்துடன் நிற்கவில்லை. மாறனார் கொணர்ந்த கறி உணவு கீரை ஒன்றே. அவ்வொன்றைப் பலவாகச் சமைத்துப்

பாகம் செய்ததுதான் நாம் பாராட்டற்குரியதாகும். அக்கீரைக் கறி ஒன்றே, கூட்டலாகவும் துவட்டலாகவும் தம் கைவன்மையோடு அறிவு வன்மையையும் கூட்டி ஆக்கி அமைத்தார் எனில், நாம் அவ்வம்மையாரை எவ்வாறு புகழ்வது! அவ்வும்மையாரின் கைவன்மையை வியந்த புலவர் 'கைம்மை வினையினில் வேறுவேறு கறியமுதாக்கி' என்று பாடிப் பரவசமுறுவார் ஆயினர். 'இல்லது என் இல்லவள் மாண்பானல்' என்பது உண்மையன்றோ?

அம்மையாரின் உணவு சமைத்துக் கறியமுதாக்கி முடித்தபின், "வந்த விருந்ினர் தாம் வளமுடன் வாழும் காலத்தில் வந்திலரே. இவர்க்கு இவ்வெளிய உணவு ஈயும் காலம் நேர்ந்ததே" என்று உளம் நைந்தார். பிறகு பசிக் களைப்பால் பாயில் துயின்ற பெரியாரை எழுப்பி அன்புடன் உணவு அருந்த அழைத்தனர். இவ்விருபேர் அன்பின் உடலங்கள் உள்ளன்பால் உழைத்துச் செய்த அனைத்தையும் அறிதுயில் கொண்டு அறிந்தவராய ஆண்டு வந்திருந்த இறைவனார் கரந்து அவ்விருவர்க்கும் அம்மையப்பராய்க் காட்சி தந்து ஆசி கூறினார்.

அன்று முதல் மாறனாரும் மாதராரும் நாளுக்கு நாள் வறுமை நீங்கிப் பெருமைபெற்றுப் பின்பு நீடு வானில் நித்தராய் விளங்கினார்கள்.

மாறனார் நித்தராய் நீடுவாழ்தற்குப் பெருந்துணை புரிந்த பெருமை யாரைச் சாரும்? நெல் கொணர உத்திகூறி, கொணர்ந்த நெல்லை வறுத்துச் சமைத்து, கொணர்ந்த கீரையை நீரில் அலம்பிப் பலவகைக் கறியமுதாகச் சமைத்த அம்மையாரை அன்றோ சாரும்? இவ்வம்மையார் இவ்வாறு செய்திலர் எனில் மாறனார் மாண்பு பெற இயலுமோ? இயம்புமின்!

# 10. மனையை மங்கலம் ஆக்கிய மடந்தை

மாதர்கள் பூங்கொடியனையார் என்று புலவர்கள் புனைதல் உண்டு. கொடி கொழுகொம்பு இன்றிப் படராது. அதுபோல மாதராம் பூங்கொடியும் ஒரு கொழுகொம்பு பற்றியே படர்தல்வேண்டும். அவர்க்குக் கொழுகொம்பாகிக் குலவிவருவோர் அவர் அவர் வேட்ட கணவன்மார் அன்றி, வேறு அல்லர். கேள்வன்மார்கள் மாதர்களாம் பூங்கொடிகள் படர்தற்குக் கொழுகொம்பு போன்றவர் என்பதைப் புலப்படுத்தவே போலும் கொழுநர் என்னும் சொல் வழக்கும் அவர்கட்கும் உளதாயிற்று. ஆகவே, பூவையர் தமக்குக் கணவன்மார்கள் பெருந்துணைவர் என்பது அறியக்கிடக்கிறது. அவர்கள் இன்றேல், வாழ்வு இல்லை; சீர் இல்லை; சிறப்பு இல்லை; கேளும் இல்லை; கிளையும் இல்லை. அவை ஒருகால் இருப்பினும் உபசாரம் ஆகுமே அன்றி உண்மையாகா. இதனால்தான் "கொண்டானில் துன்னிய கேளிர் பிறர் இல்லை." என்றும் "கணவனை இழந்தோர்க்கு காட்டுவதில்" என்றும் தமிழ் நூல்கள் கழறுகின்றன. இது கருதியே தலையன்புடைய சில பெண்ணணங்குகள் கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறும் வழக்கமும் கொண்டனர். உடன் கட்டை ஏற வந்துநின்ற கோமகளைத் தடுத்த பெரியவர்களைத் தெழித்தும் உரைத்துள்ளார் நம் நாட்டுக் கற்புடைய காரிகையர்.

பல்சான் றீரே, பல்சான் றீரே,
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே,

என்பது பழம் பாடல். மேலும் உடன்மாய்தலை இன்பமாக எண்ணினர் என்பது,

பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோர் அற்றே.

என்ற புறநானூற்று அடிகளால் புலப்படுகிறது.

இப்பண்புகள் வாய்க்கப் பெற்ற பெண்கள் சமூகத்தைச் சார்ந்த கலிக்காமர் என்பாரின் தேவியார் எங்ஙனம் நடந்துகொண்டனர் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

வண்புகழ் கொண்ட சோழ வளநாட்டில், திருப்பெருங்கமலம் என்னும் பெயரிய பெரும் பதி சிறப்புடன் இலங்கியது. இது பொன்னி பொன் கொழிக்கும் வடகரைக்குக் கீழ்ப்பால் உள்ளஃது. கொடி மாடச் செறிவிற் கோர் குறையும் இல்லாதது. மஞ்சுசூடும் இஞ்சியும், வரை மருளும் வளமார் மாடியும் உடையது. ஆண்டுள வீதிகள் தோறும் சாறுகள் தழைத்தன. முழவின் ஓதைகள் அரங்கெலாம் ஒலித்தன. இன்னோரன்ன வளமுடைய எழிற் பதிக் கண் ஏயர் கோக்குடி ஒன்று ஏற்றமுற்றிருந்தது. அக்குடி உழவருத உத்தமக்குடி. வளவர் தானையை வளமுற நடாத்தும் சேனாதிபதிக் குடியென்று செப்பும் திறனும் சிறக்கப்பெற்றது. இக்குடிக்கொரு விளக்கம்

போலவும் பல்மீன் நடுவண் பால் மதி போலவும் கலிக் காமர் என்னும் கண்ணியர் தோன்றினார்.

கலிக்காமர் அரனார் அடியை மறவா அன்பினர். இவர் வாழ் பதிக்கு அண்மையதான திருப்புன்கூர் திருப் பதியில் தீராக் காதல் உடையவர். அதற்கு ஆய திருப்பணி பலவும் ஆற்றும் விருப்புமிக்க விற லுடையவர். இவர்க்கு வாய்த்த மனைவியாரோ, பதி சொல் தவறாப் பான்மையராய்க் கற்புக் கடம் பூண்ட காரிகையராய் இலங்கினர். ஆகவே, இக் காதல் மனை வியாரும் காதலரும் மாறின்றித் தீதில் கருமங்கள் தாம் இயற்றி இனிதுறைந்து வருவாராயினர். நீறு கந்தார் கழல்களையே துணை எனப் பேணிவந்தார்கள். இது நிற்க.

வன்தொண்டப் பெருந்தகையார்க்கும் பரவை என்னும் பாவையர்க்கும் ஊடல் சிறிது உளதா யிற்று. (ஊடற்குக் காரணம் நம்பிக்கேற்ற நங்கை மார் என்னும் தலைப்பின்கீழ் விவரிக்கப்பட்டுள்ளது. விரிவினை ஆண்டுக் காண்க.) அதனைத் தீர்க்கப் பரவை கணவனார் பரமன்தனையே தூதுபோக்கிப் பரவை பிணக்கைத் தீர்த்துக்கொண்டார். இதனைக் கேட்ட னர் கலிக்காமர். வேதம் காணா விமலனார் பாதம் நோவத் தூது செலவிடுத்தது பாவம் என்று கொண்டு தம்பிரான் தோழரை அகத்தும் புறத்தும் அறவே வெறுத்திட்டார். 'வெம்பினார். அதிசயித்தார். வெரு வினார்' எம்பிரான் இசைந்தாரேனும் ஏவப் பெறு வதோ? இதனை எண்ணி உள்ளம் கம்பியாதவனை யான் என்முன் காணும் நாள் எந்நாள்?' என்று நாளை எதிர்நோக்கி நின்றார். 'வர எதிர் காண்பேனாகில் வருவது என்னாங்கொல்?' என்று கருவினார்.

கலிக்காமர்க்குக் கடுஞ்சினம் எழுகிறது. ஆனால், கடுஞ்சொல் எழுந்திலது. இன்னது செய்வேன் என்று இயம்ப எண்ணுகிறார். ஆனால், மனத்துக்கண் மாசிலர் ஆதலின், சுடுசொல் கூற உள்ளம் கூசுகிறது. இதுவன்றோ சான்றோர் இயல்பு. சீற்றத்தினும் செம்மை காணும் சீரியர் அன்றோ அன்னார்.

இந்நிலையில் இறைவனார் இவ்விருவரையும் ஒன்று சேர்க்க உளம்கொண்டார். எல்லாம் வல்ல இறைவர் ஆதலின், ஏயர் கோனார் தமக்கு வாடுறு சூலைநோய் வந்து அணுகவே எண்ணங்கொண்டார். அடியவரை ஆட்கொள்ளும் முறையில் அங்கணர் மேற்கொள்ளும் முறைக்கு ஓர் அளவு இல்லை. ஒருவற்கு ஞான அமுது உதவுவர். அவரே ஒருவர்க்கு நாட்டிற் கிலாத சூடர் நோய் நல்குவர். அஃது அவர் செய்யும் ஆடல் ஆகும். இதனால் அன்றோ, அவனை அலகிலா விளையாட்டுடையான் என்று அறிஞர் அறிந்து கூறினர்.

கலிக்காமரைச் சூலைநோய் அண்மியது. சூலை மிகக் கொடிய நோய். அந்நோய் வடஅனலும், கொடுவிடமும், வச்சிரமும் போல வாதனையைச் செய வல்லது. அது கொடிய எலாம் ஒன்றாகும் கொடுமையைக் கொண்டது. இந்நோயின் கொடுமையை யார் கூற இயலும்? இதனைத் துய்த்த பொறுமையாளர் அன்றோ கூற இயலும்? இது தம்மை வாட்டிய விதத்தை அப்பர் பெருமானார் அகம் உருகித்,

'தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
தொடக்கி முடக்கி இட ஆற்றேன்' என்றும்,
'நஞ்சாகி வந்தென்னை நலிவது' என்றும்,

வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்'
என் வேதனையானவை விலக்கிடாய்

என்றும் கசிந்து பாடி அறிவித்துள்ளார்.

இத்தகைய சூலைநோய்க் கொடுமை நீங்க ஆல கண்டனைப் போற்றி நின்றார். அதுபோது இவர் உணர்ச்சியில் உணருமாறு பூதநாதர், 'வன்றொண்டன் தீர்க்கில் அன்றி வன்சூலை தீரா' தென்றார். அதனைக் கேட்ட கலிக்காமர், 'உகிர் சுற்றியின்மீது உலக்கை வீழ்ந்தாற்போல்' உளம்வாடி, 'அன்னான் தீர்த்து ஒழிப்பதினும் சூலை தன்னால் வருந்துவதே கடன் என்று திடம் கொண்டார்.

பெற்ற மூரும் பெருந்தகையார் அத்துடன் அமை யாது வன்றொண்டர்க்குக் கலிக்காமர் கொள்கை யெலாம் கழறி அவர்க்குற்ற சூலையினை நேரே சென்று தீர்க்குமாறு பணித்திட்டார். இதுவும் நம் பால் இறைவர் கொண்ட அருளாம் என்று உவகை கொண்டு நம்பி ஆரூரர் பரமனைப் பாடிப்பரவிக் கலிக் காமர் இல்லம் நோக்கி எழுந்தருளினார். நாவலூர் வள்ளல் தம் வருகையை முன்கூட்டி ஏயர்கோனார் தமக்கு இயம்பியும்விட்டார். வைத்த உள்ளம் மாற் றாத கலிக்காமர் வன்தொண்டர் வரவுகேட்டு, உடல் வேதனையுடன் உணர்வு வேதனையுடையவராய் 'எம் பிரானைத் தூதனாய் ஏவினவனோ என் சூலையைத் தீர்க்கற்பாலன்? அவன் ஈங்கு வந்து தீர்ப்பதன் முன்பதாகச் சூலை தன்னை யானே பற்றறத் தீர்ப் பேன்' என்று துணிந்தவராய் உடைவாள்கொண்டு தம் உதரம் கிழித்தார்.

அந்தோ! இவர் தம் அன்பை எங்ஙனம் போற்று வது! பிறர் செய் குற்றத்திற்குத் தம்மையே ஒறுக்'

கும் தகவுடைமை அன்றே இவர்பால் அமைந்த செயற்கரிய செயல். இதுவன்றே இவரைப் பெரியர் ஆக்கியது. வன்தொண்டரைக் காணுவிடத்து, 'அவனை யான் முன் காணும் நாள் எந்நாள்' என்று கழறியவர், 'வர வெதிர் காண்பேன் ஆகில் வருவது என்னுங்கொல்?' என்று கருவியவர், காணும் வாய்ப்புப்பெற இருந்தும் தம்மையே அன்றே தாக்கிக் கொண்டார். பிறர் செய் குற்றத்திற்குத் தம்மையே ஒறுத்துக்கொண்டவர்களுள் சீத்தலைச் சாத்தனுரும் ஒரு சான்ருய் அமைவர் அன்றே! கலிக்காமர் செயல் இக்காலத்துச் சத்தியாக்கிரக செயல்போன்றது. பிறர் செய் குற்றத்தை எடுத்துக்காட்டித் திருத்துவதினும் அதன் பொருட்டுத் தாமே வருந்தித் துயருற்ருல் குற்றம் செய்தவர் தவறுணர்ந்து திருந்தவும் கூடும் என்னும் சீரிய நோக்கமே தம்மை ஒறுத்துக் கொள்ளும் தன்மையாகும். இதுவே அகிம்சைப் போர், உண்ணுவிரதப் போர், சாத்துவீகப் போர். இவ்வுணர்வு இற்றைக்கு ஆயிர ஆண்டுகட்கு முன் பிருந்ததை நோக்க நாம் இறும்பூதுகொள்ள வேண்டும் அன்றே?

கணவனுர் தமக்கு அருகே இருந்து ஆவன செய்துவந்தார் கலிக்காமர் மனைவியார்; அல்லும் பகலும் அவரைவிட்டு அகலாதிருந்தார்; தோன்றற்கும் தோகைக்கும் ஒன்ருய் வரும் இன்பதுன்பங்கள் என்னும் இலக்கணத்திற்கோர் இலக்கியமாய்க் கலிக்காமர் சூலையால் பட்டதுன்பம் எல்லாம் தமக்கு வந்தாற்போல் தாமும் உணவு இன்றி உறக்கம் இன்றி உபசாரம் செய்துவந்தார். இந்நிலையில் தம் கொள்கையில் மாருக் கோமகனுர் வாள்கொண்டு வயிறு கிழிந்து

வீந்ததைக் காணச் சகியாராய்த் தாமும் தம்முயிர் கொண்டு அவர் உயிர்தேட முன்நின்றார். ஆசிரியர், சேக்கிழார், 'கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் என்றும், அவர், 'தேவியார்க்குப் பொருவரும் கணவர்' என்றும் போற்றுகின்றார். அன்ன பண்பினர் மறைந்தார் என்றால் மாதரார் மண்ணில் வாழ்வரோ? உடன் போகத் துணிந்தது உசிதமே. திரியின்றிச் சுடர் நிற்குமோ?

இந்நிலையில் நம்பியாரும் உய்த்த சில்லோர் ஓடி வந்து 'நம்பி வந்தணைகின்றார்' என்று நவின்று நின்றார். இத்தருணம் எவர்வரின் என்? எவர் போயினும் என்? இல்லம் தலைவனை இழந்து தத்தளிக்கும்நேரம். காரிகையார் கணவனைத் தணந்து கலங்கும் காலம். அவலச் சுவையே அகத்து நிகழும் அமயம். இத்தருணத்திலும் இவையனைத்தையும் புறத்தே காட்டிலர் கலிக்காமர் தேவியார். வருபவர் தம்பிரான் தோழர் என்பதை அறிவர். அவர் உறழ்ந்த கல்வியுடையார் என்பதையும் உணர்ந்தவர். பரமனார் விரும்பும் பத்தர் என்பதையும் தெரிந்தவர். இன்னோர் அன்ன பண்புடையார் இல்லம் நோக்கிப் போதருங்கால் இழவுகொண்டாடல் இனிதாமோ என்று எண்ணியராய் உடனே, 'யாரும் அழுதல் செய்யாதீர் என்று ஆணையிட்டார்.' மங்கலம் என்ப மனைமாட்சி என்றது உண்மையன்றோ? கணவர் உடலைக் கரந்திடச் செய்தார். ஏவலர் தமக்கு இல்லம் ஏலவே பொற்புறச் செய்யுமாறு ஏவினார். இதற்கிடையில் சுந்தரரும் வந்துறவே, தூபதீபம், பூரண கும்பம் வைத்துத் தொழுதெதிர்கொள்ளச் சென்றார். இவ்வாறெல்லாம் இனிதுற இயற்றிய இவ்வம்மையாரை **மனையை**

**மங்கலம் ஆக்கிய மடந்தை** என்று அழைக்காமல் வேறு எவ்வாறு அழைப்பது? அறைமின்? என்னே அம்மையாரது அன்பு? அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும்' என்னும் உறுதியுடையவர் ஆதலின், இங்ஙனம் செய்தார்போலும்!

ஆரூரர் அகத்துள் புக்கார்; ஆசனத்தமர்ந்தார். "ஏயர்கோனார் எங்கே? அவர்க்கு ஏய வன் சூலை தீர்க்க வந்துற்றோம்" என்று எழுந்தார். அம்மையார் அவ்விறைக்கு தாமே விடை இறுக்க ஒவ்வாராய் மனைத்தொழில் மாக்கள் மூலம் "அவர் யாதோர் ஏதம் இன்றி, உள்ளே பள்ளிகொள்கின்றார்" என்று பகரச்செய்தார்.

"அம்மையார் கூறிய கூற்று அடாத கூற்று. அவர் சால்புக்கு இஃது ஓர் இழுக்கு". என்னலாம் அன்றோ? அற்றன்று. "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்த்த நன்மை பயக்கும் எனின்," என்னும் சட்டமும் தமிழில் உண்டு. இதனால் பொய் புகலப் புறப்படல் கூடாது. தமிழ் அத்துணை இடங் கொடுத்துவிடாது. "புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில்" என்னும் தொடருக்குரிய ஆழ்ந்த பொருளை அறிந்தபின் வேண்டுமேல் புகல்க.

"வாய்மை எனப்படுவது யாதெனில்? யாதொன்றும் தீமை இலாத சொலல் என்னும் குறளினைக் கருதும்போது அம்மையார் அறிவித்தது, அமைவுடையதே என்பதை நன்கு அறியலாம்.

அகப்பணிபுரிவோர் அறிவித்தும் மேலும் ஆரூரர் வினவ, இனியும் மறைத்தல் ஏதம் என்று உணர்ந்து, உதிரம்சோர் வடிவுகாட்டினர். உண்மை உணர்ந்த

வன்றொண்டர் தாமும் இறக்கத் துணிந்திட்டார். அது போது இறைவர் அருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து, நம்பியாரூர் மாயாவண்ணம் வாளும் கையும் வளமாய்ப் பிடுத்துத் தடுத்திட்டார்.

அங்கிருந்தார் யாவரும் இவ்வதிசயம் கண்டு இன்புற்றார். ஏயர் கோனும் எழிலார் கோனும் வன்பு நீங்கி அன்புகொண்டு ஒருவரை ஒருவர் தாழ்ந்து உயிர் ஒன்றானாற்போலப் புல்லிநின்றார். "நீர் கிழிய எய்த வடுபோல மாறுமே சீர் ஒழுகும் சான்றோர் சினம்" என்பதுபோல ஏயர் கோனார் சீற்றமும் தணிந்தது.

கலிக்காமர் தேவியார் அவல நிலையினும் கவலை காட்டாது கண்ணுதல் அடியாரை அன்புடன் போற்றிய பயனன்றோ வன்பும் அன்பாக மாறியது. மருளும் தீர்ந்து அருளும் திகழ்ந்தது. ஏயர் கோனார் ஏந்திழையார்பால் நற்பண்புகள் பலவும் இலகியதால் அன்றோ நல்லார் என்னும் நல்லபெயர் மாதர் இனத்திற்கே உரியதாயிற்று. இவ்வம்மையாரை அவல நிலையினும் கவலை காட்டாதவர் என்றும் மனையை மங்கலம் ஆக்கிய மடந்தை என்றும் பன்முறை கூறிப் பாராட்டுவோமாக.

# 11. நம்பிக் குகந்த நங்கைமார்

## (1. பரவையார்)

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும். மான் வயிற்றில் ஒள் அரிதாரம் பிறக்கும். தரங்கத்திடையே தரளம் பிறக்கும். சேற்றில் செந்தாமரை பிறக்கும். அங்ஙனமே பரத்தையர் குடியிலும் பண்புடைப் பாவையர் பிறத்தல் இயல்பு. மாதவி என்னும் மாபெருந் தேவியால் மாட்சிமையுற்றது அப்பரத்தையர் குடியன்றோ? அங்ஙனமே மற்றொரு பாவையாரும் அப் பெற்றித்தான பேசருங்குடியில் பிறப்பாராயினர். குலத்தளவே யாகும் குணம் என்பதும் பொது மொழி. அப்பொது மொழி இன்னோரன்ன இன் குணவதிகளால் பயன்படுதலின்றிப் பாழ்படுதலும் உண்டு. இனி அப்பரத்தையர் குடியின் பாவையர் ஒருவரின் பண்பு நலன்களைப் பகர்வோமாக.

கங்கையிற் புனிதமாய காவிரிபாயும் கவினுடை நாடு சோழ வளநாடு அன்றோ? அந்நாட்டு மன்னரே சோழர். பனிவரைக் குன்றினில் புலிக்கொடி பொறித்த பூட்கையர். காவிரியின் சிறப்புக் கவிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அதனைப் பூமகள் தன் செவிலி என்று செப்பினர். அண்ணல் பாகத்தை ஆளும் நாயகியின் உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது என்று உரைத்தனர். இவ் வளத்ததான ஆறு பாயும் நாட்டின் வளத்தை நவிலல் வேண்டுமோ? கன்னலின் வளர்ச்சி கமுகினைப்போன்றது. செந்நெல் வளர்ச்சி செழுங் கரும்பினை நிகர்த்

தது. காடெல்லாம் கழைக் கரும்புகளும் மாடெல்லாம் கருங்குவளைகளும், வயல் எல்லாம் நெருங்கு வளைகளும் மலிந்திருந்தன. ஆண்டு விளையும் நெல்லின் வளர்ச்சி இம்மைப் பயனுடன் அம்மைப்பயனும் அறிவிப்பனபோல் வளர்ந்திருந்தன. இதனைச் சேக்கிழார்

பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்.

என்று வியந்து பாடுகின்றார்.

இம்மாண்புடைப் பதியில் வாழும் மக்கள் பண்பும் மாட்சியுற்றிருந்தது. பழியஞ்சிப் பாத்துண்ணும் பழக்கமே உடையராய் வாழ்ந்தனர். பகடு நடந்த கூழினை அரசுகொள் கடன் அளிப்பார். மிகுதி கொண்டு அறங்கள் பேணுவார். பரவரும் கடவுள் போற்றுவார். குரவர், விருந்தினர்க்கும், கேளிர்க்கும் விரும்பிக் கொடுப்பர்.

ஈண்டுச் சேக்கிழார், வள்ளுவர் கூறிய

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்னும்
ஐம்புலத்தா றோம்பல் தலை"

என்னும் குறளில் காணும் **தென் புலத்தார்** என்னும் தொடர்க்குக் குரவர் என்று பொருள் கண்டனர். இப்வியப்பும் விருந்தும் உடைய பொருள், எப்புலவர்களும் எழுதாப் பொருள். வள்ளுவர் பெருமான் உள்ளிய பொருள். இக்குறட்குப் பொருள் கூறவந்த பரிமேல் அழகர் தென்புலத்தார் என்பதற்குப் பிதிரர் என்று பொருள் கூறி, விரிவுரையின் கண்ணே, "பிதிரர் ஆவார், படைப்புக் காலத்து அயனால் படைக்கப்

பட்டதோர் கடவுட் சாதி. அவர்க்கிடம் தென்திசை யாதலின் தென்புலத்தார் என்றார்" என்று எழுதியுள்ளார். ஆனால், பரிமேலழகர்க்குப் பல்லாண்டு முன்பிருந்த அருண்மொழித்தேவர் தென்புலத்தார் என்னும் தொடர்க்குக் குரவர் என்னும் கோதறு பொருளே கொண்டு கூறினார். குரவர் ஆவார், அறவோர், அந்தணர், துறவோர் ஆதியோர். இல்லற நெறியினர் இவர்களைப் போற்றல் இயல்பு என்பதை இளங்கோ அடிகளின் இன்னுரையாலும் எளிதில் உணரலாம்.

கண்ணகி தான் இல்லறத்தினின்று தன் கடனை ஆற்றும் நேர்மைபெறு நிலையை எடுத்து இயம்புகையில், "அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கொடலும் இழந்த என்னை" என்று கூறி வருந்தியதாக அவ்வரச கவிஞர் அறைகின்றார். இங்ஙனம் நுண்பொருள் கூறும் நுண்மதி சேக்கிழார் படைத்தவர் என்பதை அவர் சிற்சில தேவாரப் பாக்கட்குப் பொருள் விதந்து எழுதிய இடங்களைப் படிப்பவர் படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்துப் பாராட்டாமலும் அறிவின் திறத்தை வியக்காமலும் இருக்க இயலாது. இதனால்தான் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடிய மாபெரும் புலவர் "நகுபாசுரம் முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்' என்றும், 'சொல்லும் பொருளும் நனிசிறப்பச் சுருங்கச் சொல்லல் முதலாய, தோட்டி அமையக் கல்லும் கரையக் கவிபாடும் கனிவாய்' என்றும் கசிந்துருகிப் பாடியருளினார்.

சேக்கிழார் நூலைப் படித்து நுண்பொருள் சுவையை நுகர விரும்புவோர், சேக்கிழார்மீது பாடிய

பிள்ளைத் தமிழைத் துணையாகக்கொள்ளின் அது சாலப் பொருத்தம் உடையதாகும். இது நிற்க.

இக்காலத்தில் ஆங்காங்குப் பூங்கா அமைத்துப் பொதுமக்கள் சுகாதாரப் பொறுப்பைக் கண்ணும் கருத்துடன் நகராண்மைக் கழகம் ஏற்றுவருவதைக் கண்டு நாம் நனிவியக்கின்றோம். இச்செயலைச் சோழ நாடு அக்காலத்திலேயே சோர்வின்றிச் செய்து வந்தது. காவளர்த்தும் செய்குன்றம், செய்குளமும் செழிக்க வளர்த்தும் வளம்படுத்தியது. இத்தகைய தான பல சிறப்புக்களைப் பெற்றது சோழ நாடு.

இந்நாட்டிற்குத் திலகமெனத் திகழ்வது திருவாரூர்த் திருப்பதியாகும். இது சோழர் குலமன்னர்கள் தலைநகரம் ஐந்தனுள் ஒன்று. பிறக்க முத்திதரும் தலமுமாகும். இச்சிறப்புப் பற்றியே "திருவாரூர் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்" என்றார் முனைப்பாடி நாதனார். இது தொன்மைமிக்க தொல் பதியில் ஒன்றாய் ஒளிர்வது. மன்னு மாமலராள் வழி பட்டது. "திருவாரூர் தேர் அழகு" என்னும் முதுமொழியேற்றுத் திகழப்பெற்றது. திருமுறை ஓசை என்றும் இருத்தலின், கிள்ளைபாட அதனைப் பூவைகள் கேட்டின்புறும் இயல்பினது. மலர்மகட்கு வண் தாமரைபோல் மலர்ந்து அலகில் சீருடை அழகுடைப் பதி இஃது எனில், இதற்குமேல் என்னோ அறைதல் வேண்டும்?

இன்னோரன்ன எழிலுடைப் பதியில் பிறந்தவரே, பரவையார் என்னும் பாவையார் ஆவர். இவ்வம்மையார் குடியை உருத்திர கணிகையர் குடி என அழைப்பர். பரவையார், விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப அழகுசெய் தவத்தால்

அவனியில் வந்த ' அணங்கெனவே வளர்வாரானார். இவ்வம்மையார்பால் பொற்பும் கற்பும் நாளும்நாளும் வளர்ந்து பொங்கின. ஆதலின், இவரைக் காண்பார் யாவரும் கண்ணிணைக்கண்டு மானிளம்பிணையோ என்று மருண்டனர். பல்லினைக் காண்பார் யாரும் வளர் இளமுகையோ என்று வருணித்தனர். மொழியைக் கேட்டவர் தேனிளம்பதமோ என்று மோகங் கொண்டு மொழிந்தனர். அதர அழகை அன்புடன் பார்த்தவர் துவரிளங் கொடியோ என்று துதித்தனர். நுதலினைக்கண்ட நுண்ணறிஞர் பலரும் திங்கட் கொழுந்தோ என்று கூறி மனம் திளைத்தனர். புருவங்கண்டு புதுமையடைந்தோர் கருவேள் கையகத்துக் கொண்ட கார்முகங்கொல்லோ என்றும் கழறிப் போற்றினர்.

இவ்வாறு பரவையார் எழிலே உருவாய் இலங்கி வளர்ந்து மங்கைப் பருவமுற்று மாண்பாய் வாழ்ந்தனர். இசையில் வல்ல வசையில் வனிதையராய்ப் பனிமலை வல்லிபாதம் அன்புருகப்பாடும் பணியை மேற்கொண்டனர்.

பிறந்து மொழி பயின்றபின், எல்லாம் பூங்கோயில் புனிதரை மறவாது ஆலயஞ்சென்று சாலவும் தொழுதுவந்தார். இன்னணம் ஒருநாள் பாங்கியர் மருங்குசூழப் படர்ஒளி மறுகுசூழத் தேங்கமழ் குழலின் வாசம் திசை எலாம் சென்று சூழத் திருக்கோயில் சென்றிட்டார்.

நம்பியாரூரர் தில்லைப் பதியினின்றும் நீங்கி இடைப்பட்ட நல்ல பதிகள் பலவும் போற்றித் திருவாரூர்த் திருநகரை வந்துற்றார். வழுக்கி வீழினும் இறைவன்பெயரை அல்லாது எதையும் கூறா உரமு

டையவர் ஆதலின், அவரும் கமலைக் கண்ணுதல் கழலிணைப் பரவிப் பணியப் போந்திருந்தார்.

நற்பெரும்பான்மை தன்னால் பரவையாரைப் பாவலர்ப்பெருந்தகையார் பார்த்திட்டார். கண்டதும் அவரை மணக்கக் காதல்கொண்டவராய்க் கனிவாய் திறந்து,

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவன்அருளோ? அறியேன்என்று அதிசயித்
தார்.

அகச்சுவையும் புறச்சுவையும் ஒருங்கே அமைந்த திருப்பாடல் இது. ஈண்டு ஆசிரியர் மிகுந்த விழிப்புடன் பாடியதோடமையாது, இலக்கிய இலக்கண மரபும் வழுவாது பாடிய பண்பு சிறப்புடையதாகும். இறைவர் கழலை எண்ணும் மனமுடை அறிஞர் கோயில்வந்த கோதையாரை விரும்பல் குற்றமுடைய செயல் என்று சிலர் கூறக்கூடும் என்பதை உளம் கொண்டு, "இருவரும் பின்னால் மணக்க இருக்கின்றனர். அவர் மணத்திற்கு ஆகூழ் ஆதரவாய் உள்ளது." என்பதை முன்சுட்டி, நம்பியும் நங்கையும் சந்திக்குங்கால், நற்பெரும் பான்மை கூட்ட" என்னும் நற்றொடரைப்பெய்துகொண்டார். மேலும், நாவலூர்ப் பெருந்தகையோர் போன்றவர் இம்மை இன்பத்தில் ஈடுபடுபவர் ஆயினும் அம்மை இன்பத்தை இழக்கும் வண்ணம் எதையும் புரியார். "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைபட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே" என்பது மூதறிஞர் கருத்து. நின்மல ஞானம் இல்லவர் நாடுகளில் புக்குழன்றும் காடுகளில்

சரித்தும் நாகமுனிழ புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந் தும் நீடு பலகாலம் நித்தராய் இருந்தும் அல்லல் உற்று அழுங்குவர். ஆனுல், இறைஞானம் எய்தப்பெற்ற வர், ஏடுதரு மலர்க்குழலார் உடன்வாழ்ந்தும் கூடரிய வீடுமதும் கூடியே குலவிடுவர். இக்கருத்து மக்கட் கருத்தன்றி மாதவர் கருத்துமாகும். முற்றத்துறந்த பட்டினத்தடிகள் முத்தியெய்தும் முறையைக் கூறு கையில் இருபெரு வழியையும் எடுத்து இயம்பியுள் ளார். முன்னர்த் தவம் செய்து இறையருள்பெறுப வரை எடுத்துக் கூறுகையில்,

மலர்தலை உலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஓரீஇ
மனையும் பிறவும் துறந்து நனைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்ந்து கால்ஒன்று முடக்கி
ஐவகை நெருப்பில் அழுவத்து நின்று
மாரி நாளினும் வளர்பனி நாளினும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணுது உழன்றும்
காயும் கிழங்கும் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்
களரிலும் கல்லிலும் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித் தாங்கவர்
அம்மை முத்தி அடைதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்.

என்று கூறி, இல்லற நெறியில் நிற்பவரும் இறையருள் பெறும் நிலையை அடைவர் என்பதை இயம்புகையில்,

பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையில் சேர்த்தியும்

*ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்*
*மைந்தரும் ஒக்கலும் மகிழமனம் மகிழ்ந்து*
*இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை*
*மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது*
*சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த*
*முத்தியும் இழந்திலம் முதல்வ !*

என்று இனிதின் எடுத்துக் காட்டினர்.

இவ்விரண்டாம் நிலையை எய்தியவர் நம் சுந்தரர் பெருமானார். இளமை மீதூர இன்பத்துறையில் எளியர் ஆயினும், கண்ணுதல் கழலடியில் அன்பு அகலா உழுவல் அன்பர் ஆவார்.

இதனைத் துறைமங்கலச் சிவப்பிரகாசர்,

செல்வநல் ஒற்றி யூரன் செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற அமிழ்த்து மேனும்
அல்லுநன் பகலும் நீங்கா தவன்மகிழ் அடியில் எய்தி
நல்லஇன் படைந்தி ருப்பன் நம்பிஆ ரூரன் தானே.

என்றனர். சுந்தரர் இல்லற ஞானியாதலின் அன்றோ சிறந்த யோகியராம் பெருமிழலைக் குறும்பர் என்னும் பெரியார் இவரையே பரவிப்பணிந்து பேர்இன்ப நிலையை எய்தினர். இவ்வாறு அவ்யோகியாரால் இவர் பாராட்டப்பட்டவர் என்பதை நால்வர் நான் மணி மாலை

பெருமிழலைக் குறும்பர்எனும் பரமயோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றான்.

என்று வியந்து பாராட்டுகிறது. ஆகவே, பரவையாரைக் கண்டதும் காதல் கொண்டதில் குற்றம் இல்லை என்க.

சுந்தரர் பரவையாரைப் பார்த்துப் பாராட்டிய தற்கேற்பப் பரவையார் உள்ளமும் ஆரூரர் அன்பில் அழுந்தலாயிற்று. இருவரும் ஒத்த கருத்துடையராய் விளங்கினர். சுந்தரர்தம் கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப, விண்கொள்ளாப் பேரொளியுடன் நின்றதைப் பரவையார் எதிர்நோக்கினர். அவ்வம்மையார்க்கு எண்கொள்ளாக் காதலின் முன்பு எய்தாதொரு வேட்கை எழுந்தது. நற்பெரும் பான்மை கூட்டிய் காரணத்தால்,

முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ ? தார்மார்பின் விஞ்சையனோ ?
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ ?
என்னேஎன் மனந்திரித்த இவன்யாரோ ? எனநினைந்தார்.

சேக்கிழார் பெருமானின் கவியின் ஆற்றலையும் கருத்தின் திறனையும் அறிதற்கு இவ்விரு செய்யுட்களே சிறந்த சான்றாகும். இக்கவிகள் இரண்டையும் பாராட்டாத பாவலர் இலர்; நாவலரும் இலர். இப்பாக்களின் சொல் நோக்கும் தொடை நோக்கும் பொருள் நோக்கும் கண்டுவியந்து, தண்டமிழ்ப் புலவர் எவரினும் இவரே விஞ்சியுள்ளார் என்று விரித்தும் உரைப்பார் ஆயினர். பரவையாரும் பரமனைப் பாடுவாரும் ஒத்த கருத்தினர் என்பதை மெத்த பொருத்தமாகப் பாடியுள்ளார். மணமகன், மணமகள் பொருத்தத்தைப் பற்றி இக்காலத்தில் பல்வேறு பொருத்தம் காண்பர். ஆனால் பண்டைநாளில் காதலர் இருவரின் பொருத்தம் கூறுகையில், “ஒத்தநலனும் ஒத்தகுணனும் ஒத்த கல்வியும் உடைய ஒருவனும் ஒருத்தியும்” என்னும் இப்பொருத்தங்களையே கூறினர்.

அவற்றை ஒட்டியே ஈண்டுப் பரவையார், நாவலூரரூர் பொருத்தங்கள் அமைந்துள்ளன என்னலாம்.

கிழவனும் கிழத்தியும் ஒருவரை ஒருவர் பான்மை கூட்டப் பார்க்குங்காலத்து ஐயம் நிகழ்தலை இலக்கணம் கூறும். ஐயம் நீங்கித் தெளிந்தபின்னர்க் கூடி இன்புறல் அக இலக்கண வரம்பு. இதன் ஏனைய விரிவுகளை அகப்பொருள் இலக்கணத்தின்கண் அகலக் காணலாம். இவ்விலக்கண வரம்பின்படியே நம்பி சுந்தரர் கண்டு ஐயங்கொள, நங்கை பரவையாரும் ஐயங்கொண்டனர். இவ்விரு காதலரும் ஒற்றுமைப் பட்ட கருத்தினர் என்பது இவர்கள் ஒருவரை ஒருவர் கண்டு ஐயங்கொண்டு கூறியதினின்று தெரிகிறது. தம்பிரான் தோழர் கற்பகத்தின் பூங்கொம்போ என்றதனுல் தெய்வயானையால் வளர்க்கப்பட்ட இந்திரன் மகளோ என்றும், காமன் தன் பெரு வாழ்வோ என்று கூறியதால் இரதிதேவியோ என்றும், புண்ணியத்தின் புண்ணியமோ என்றதனுல் தெய்வப்பிறப்புடை தேவர்நாட்டுச் சேயிழையோ என்றும், சிவனருளோ என்றதனுல் இறைவன் திருவருளே பேருருக்கொண்டு இப்பெரு நிலத்தில் தோன்றிய பெண்வடிவோ என்றும் ஐயுற்றுநின்றூர். இவ்வையத்தைப் போலவே நம்பியாரை நங்கையார் "முருகனே, மாரனே, விஞ்சையனே, சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனே?" என்று பேசினூர். இதுவன்றே பொருட்பொருத்தம்.? நம்பியாரூரர் கல்விக் கடல் ஆதலின், நங்கை பரவையாரின் நலனை உவமை முகத்தால் உரைத்துப் பாராட்டினர். அவ்வம்மையாரது கூந்தற் காட்டையும் புருவப் பொலிவையும் கண்ணின் கவினையும் அதரத்தின் செம்மை

அழகையும் வதனச் சிறப்பையும், இடையின் நுண்மையையும், எத்துணைப் பொருத்தமுறப் புயல்சுமந்து விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ, என்று புனைந்து பாராட்டியுள்ளார் பாருங்கள்! இதனால் நலம்புனைந்துரைத்தல் என்னும் துறையையும் ஈண்டு இயைத்துக் கூறியவர் ஆயினர். இவ்விரு செய்யுட் பொருட் பொலிவை மற்றும் பலவாறு விரித்துப்பகரலாம். தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று இவற்றை நவில்தொறும் நவில்தொறும் நயம்பல சுரந்துகொண்டே வரும். ஆதலின், இத்துடன் நிறுத்தி இனி மேலே செல்வோமாக.

நாவலூர்ப் பெருந்தகையார், மருங்குநின்றாரை அம்மங்கையார் யாவரென்று உசாவ, அவர்கள் ‘உம்பர் தரத்தார்க்கும் சேர்வரிய உத்தமியாம் நங்கை பரவையார்’ என்று நவின்றனர். உம்பர்க்கும் சேர்வரியார் என்றதனால், உம்பர்பிரான் ஒருவனையே உவந்து நாம் வேண்டுவம் என்று உளங்கொண்டார். மெல்லியலார் தமைவேண்டி வல்லியிடைப்பாகனரை வணங்கி நின்றார். பரவையாரும் பரமனை நம்பியைத் தந்தருள நயந்துவேண்டினர்.

அன்பர் குறையை அகற்றி ஆளும் இறைவனார் நம்பிக்கும் நங்கைக்கும் தகுநீர்மையில் நல்வதுவை வினையை முடித்திட்டார். இருவரும் மணியும் ஒளியும் மானவும், மணமும் மலரும் நிகர்க்கவும், உடலும் உயிரும் ஒப்பவும் ஒற்றுமை உணர்ச்சியுடன் இல்லற இன்பத்தினை இனிதில் நுகர்ந்து ஆளுடையபிரான் சரணாரவிந்தங்கள் சென்னியிலும் சிந்தையிலும் அலர்வித்து,

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னைஎன் பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறிஒண்ணு எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணிஆரூரானை மறக்கலுமாமே.

என்னும் மறப்பரிய உறுதியுடைய மனத்தினராய் மகிழ்ந்துறைவார் ஆயினர். இல்லறத்திற்கு வேண்டிய காசும் தூசும் சாலச் அமைத்து எங்குமுளத் திருப்பதிகள் தொழும் அன்பால் சுந்தரர் புறப்பட்டார்.

முனைப்பாடி நாதனர் பலபதிகள் பணிந்து கொண்டு ஓதமுலவும் ஒற்றியூர் வந்து அடைந்தார். ஆங்கு ஓர் அணங்கின் அழகில் ஈடுபட்டவராய் அவ வம்மையாரையும் மணந்தார். இம்மணத்தின் வரலாறு பின்பு சங்கிலியார் வரலாற்றில் கூறப்படும். விரிவை ஆண்டுக் காண்க.

திருவொற்றியூரில் பன்னாள் பயின்றிருந்தபின், திருவாரூர் வந்துற்றார். வந்தவர் பூங்கோயில் புனிதர் தாள்போற்றிப் பரவையார் இல்லம் போதருங்கால், அம்மாதரார் இவரை வரவேற்க மறுத்திட்டார். காரணம், நம்பியார் தம்மைத் தணந்து வேருெரு தழை பூங்கோதையைத் திருஒற்றி மாநகர்க்கண் மணந்ததேயாகும். சுந்தரர் பெருந்தகையார் மேலோர் சிலரை இப்பிணக்குத்தீரப் பேசவிட்டனர். எவர் போய் உரைப்பினும் ஏந்திழையார் ஏற்றிலர்.

எதை இழக்க எண்ணினும் ஏலவார் குழலினர் தம் வாழ்வைப் பிறர்கொள்ள என்றும் இசையார். இஃது அவர்கட்கு இயல்பு. அன்னர் கற்பின் திறத்

தைத் தமிழ் நூல்கள் பலவாறு கழறுகின்றன. கற்புடை மாதரின் பொற்புடைச் செயலை ஒரு புலவர் புகலும் காலை நன்கனம் நவின்றுள்ளார். அதுவே கீழ்வரும் செய்தியாகும்.

நண்பர் ஒருவர்க்குப் புதிதாகக் கட்டப்பட்ட சித்திரமனை புகும் அழைப்பு இதழ் அன்புடன் அனுப்பப்பட்டது. அவ்விழாவிற்குச் செல்ல அன்பரும் விழைந்தார். அதற்குத் தம் அன்புடை மனைவியையும் உடன்வர அழைத்தனர். அதுபோது அவர் தம் மனைவியார் தாம் வர இயலாது என்று கூறியதால் தாம் மட்டும் போவதாகப் புறப்படுகையில் "நீரும் போதல் ஒண்ணாது" என்றனர் மனைவியார். அதனால் சினம் உற்ற நண்பர் "நீதான் வர நினைத்திலையேல், நான்தான் ஏனோ போதல் அடாது?" என்று வினவ, அக்காலை அக்கற்புடைக் காரிகையார் கழறியதுதான் கற்பு மேம்பாட்டிற்குப் பொற்புடைய சான்றாகும்.

"அன்புக்குரிய ஆருயிர்க் கணவரே! ஓவியப் புது மனையாதலின், ஆண்பாலர் உருவம் பல சுவரினை அலங்கரிக்கும். அவற்றைப் பார்க்க யான் மனங் கொளேன். பார்த்து உள்ளம் மறுக யான் இசையேன். இதுவே நான் வரத் தாழ்த்தமைக்குக் காரணம்." என்றனர். இதுகேட்ட கணவனார் தம் இல்லக் கிழத்தியாரின் கற்பின் மேம்பாட்டை எண்ணி இறும்பூதுற்றார். "நீ கூறியது முற்றும் நேரியதே. ஆனால், யான் சென்று மீள என்னை ஏன் தடுக்கின்றனை?" இதற்கும் ஏதேனும் ஏது உண்டோ? அதனையும் இயம்பில் ஏற்கலாம்" என்றனர்.

அவ்வம்மையார், "ஆடவர் உருவினை அழகுறத் தீட்டிய ஓவியர், பெண்டிர் வடிவையும் வடித்தி

டாரோ? அவ்வடிவழகில் நீர் ஈடுபட என் உள்ளம் விழைந்திலது. ஆதலின், நீரும் செல்லல் இயலாது என்றேன். இதுவே காரணம்." என்று எடுத்து இயம்பினர். இக்கருத்தினைச் செவ்வன் அமைத்துத் திரு. மாயூரம்

ஓவியர்நீள் சுவர்எழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையாம் அழைத்திடஆண் சித்திரமேல் யான்பாரேன்
பாவையர்தம் உருவெனில் நீர்பார்க்க மனம்பொறேன் என்றாள்
காவிவிழி மங்கைஇவள் கற்புவெற்பின் வற்புளதால்.

என்று பாடியுள்ளார். இச்சீரிய கற்பின் திறத்தை என்னென்று இயம்புவது!

காதலன் ஒருவன் தன் காதலியை நோக்கி "எல்லாரினும் உன்மீது வைத்த காதலே எனக்குச் சீரியது என்றதும் வருந்திய தலைவியரும், "இப்பிறப்பில் எக்காரணம் கொண்டும் பிரியேன்" என்று கூறியதால் கண்ணீர் வடித்து, "அடுத்த பிறவியில் பிரிவீர் போலும்" என்று வருந்திய வனிதையாரும், பிரிந்து சென்று மீண்ட தலைவன் "அடிக்கடி உன் நினைவாகவே இருந்தேன்" என்று கூறிய கணவனிடம், "ஏன் மறந்தீர்?" என்று ஊடிய உத்தமிமார்களும் அன்றோ தமிழ்நாட்டுத் தலைவிமார்கள். இவர்களின் தன்மைகளை அன்றோ வள்ளுவனார்,

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று
இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்
உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றெம்மைப்
புல்லாள் புலத்தக்க னள்.

என்று விளக்கிக் காட்டியுள்ளார்? இவ்வாறு இருக்கையில் தம்மை மணந்த கணவனைப் பிறர் மணக்க

எங்ஙனம் தமிழ் நாட்டு மங்கையர் சகிப்பர்? ஆதலின், பரவையார் ஊடல்கொண்டு நம்பியாரூரர் இல்லம்புக இடம் கொடுத்திலர். ஆரூரர் உற்ற இடத்து உதவும் ஒருவரையன்றி, இக்குறை முடிப்பார் எவரும் இலர் என்று நேரே இறைவர் திருமுன் நின்று,

நாயன் நீரே நானுமக்கிங் கடியேன் ஆகில் நீர்எனக்குத்
தாயில் நல்ல தோழருமாம் தம்பி ரானு ரேஆகில்
ஆய அறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போயி்(இரவே பரவைஉறு புலவி தீர்ந்துத் தாரும்.'' எனப்

பணிந்தார்.

இப்பாடல் இறைவர் எவ்வாறேனும் குறை முடிக்கவேண்டும் என்பதைத் தூண்டும் முறையில் அமைந்துள்ளது. 'நாயன் நீரே' என்பதனால் நின்னி லும் வேறு தலைவர் இல்லாத நீர், இதற்கு முற்படின் எதிர் மாற்றம் தருவார் எவரும் இலர் என்பதும், நான் உமக்கு அடியேன்' என்பதால் நீரே விரும்பி ஆட்கொண்டு அடிமை கொண்டதால் அடிமையின் வேண்டுகோளை ஆண்டான் முடித்தல் கடன் என்ப தும், "தாயின் நல்ல தோழருமாம் தம்பிரானுரேயா கில்" என்பது, அறிந்து செல்வம் உடையானும் அளை கைப் பதியான் தோழமைகொண்டு, உறழ்ந்த கல்வி உடையான் ஒருவன் வேண்டுமென இருந்து என்னைத் தோழன் முறைமையில் என்று கொண்டதனால், உண்மை நட்புடையார்,

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

என்பதற்கேற்ப யான் உற்ற இடுக்கண் நீக்கல் இயல்பு என்பதையும், "தாயின் நல்ல" என்னும் அடை, தன

யர் வேண்டுவது முடித்தல் தாயர் கடனும் என்பதும் "அறிவு இழந்து அழிவேன்," என்றதால் குற்றம் தெரிந்து செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டும் என்பதும், முதலான திரண்ட கருத்துக்களை இது திகழப்பெற்றுள்ளது. அன்பு வேண்டும் தம் பெருமான் அடியார் வேண்டிற்றே ஆற்றிவைக்க எண்ணினார். முப்போதும் தம் திருமேனியைத் தீண்டுவார் வடிவோடு பரவையார் மாளிகைக்குப் படர்ந்து சென்றனர்.

குரவரைப் பரவையார் குறுகி வரவேற்றார். வந்தவாறு உரைத்தருள வேண்டினார். "மங்கை, நீ மறுது செய்யின் நான் வந்தவா உரை செய்வேன்" என்று வந்த முனிவர் வகுத்துரைத்தார். இம்மறை சொற்கெல்லாம் பரவையார் மயங்கி மொழியும் திறத்தினரோ? 'அதனை நீர் அருளிச் செய்யின், எனக்கு இசையும் ஆகில் இசையலாம்" என்றார். வந்தவர் 'நம்பி ஈங்கு நின்னை நம்பிவர ஏற்பாய்' என்றார். பரவையர் சீற்றம் நிறைந்த மாற்றம் உடையராய் "இங்கு எனைப்பிரிந்து போகி, ஒற்றியூர் எய்தி, அங்கே சங்கிலித் தொடக்குண்டார்க்கு இங்கு ஒரு சார்பு உண்டோ? நீர் இக்கடைத்தலை வருகை மற்று உம் பெருமைக்குத் தகுவது அன்று. நீர் போம்' என்று செப்பிவிட்டார்.

பரவையார் இங்ஙனம் சிறிதும் சிந்தித்துப் பாராமல் மறுத்திட்டது நம்பிபால் தமக்கு நன்மனம் இல்லை என்பதை அறிவித்தற்கன்று. அறிஞர் உரையை அசட்டை ஆக்குவது என்பதும் அன்று. ஆண்கள் சமூகம் இன்மணம் பூண்ட ஏந்திழை ஒருத்தி இல்லத்தில் இருக்க, மற்றும் ஒரு மாதினை மணத்தல் அடாத

செயல். அதனை அறவே கடிந்து ஒழித்தல் கடன் என்பதைத் தாம் உணர்ந்தே இங்ஙனம் கூறினர் என்க. ஆடவர் இரு மாதரை மணத்தல் இயல்பு அன்று என்பது அக்காலத்தும் அமைந்த நீதி என்க.

தூதுவர் மீண்டு போதுவாராகிச் சுந்தரர்க்கு நடந்தவண்ணம் நவின்றனர். தம்பிரான் தோழர், தம்பிரான் மாற்றம் கேட்டு உள்ளம் தடுமாற்றம் உற்றார். "நீர் எம் இருவரையும் இணைத்திலீர் எனில், என்னுயிர் உடலில் நில்லாது ஏகும்." என்று இசைத்திட்டார். இறைவர் மீண்டும் பரவையார் இல்லம் நோக்கிச் சென்றனர். அம்மையார் அகம் இளகியது. "அன்பர்க்காக அங்கொடு இங்கு உழல்வீராகில் என் செய்வல் இசையாது?" என்று கூறித் தம் இசைவைப் வெளிப்படுத்தினர்.

இதனை நம்பிக்கு நாதனார் மொழிய நாவலூரர் பரவையார் மாளிகையை நண்ணினார். ஊடற்கட் சென்ற உள்ளம் அது மறந்து கூடற்குச் சென்றது. எழுதுங்கால் கோல் காணுக் கண்ணே போல் கொண்கனைக் கண்டபோது பழிகாணுதவர் ஆயினர். எனவே, கொண்கரை வரவேற்கச் சிறப்புப்பணி பலவும் செய்தார். நெய்வளர் வளக்குத் தூபம் நிறைகுடம் நிரைத்துவைத்தார். பூமலி நறும் பொற்சுமம் புனை மணிக் கோவை நாற்றினார்.

தோகையர் வாழ்த்தத் தாமும் மாமணிவாயில் முன்பு வந்தெதிர் ஏற்க நின்றார். தண்டளிர்ச் செங்கை பற்றிக்கொண்டு மாளிகையுள் சார்ந்தார். ஒருவரை ஒருவர் உள்ளத்தால் பருகி ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர் ஒன்றானார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

இன்னணம் இருவரும் தம்முள் கலந்த இன்பின ராய் வாழும் நாளில், கழறிற்று அறியும் பெருமானும் அரசர் பெருமான் ஆர்வமொடு அந்தணர் பெருமான் அழைப்பிற்கிணங்கிப் பரவையார் இல்லம் படர்ந்த ஆற்றூர். பரவையார் என்னும் பூவையாரும் எதிர் கொண்டழைத்து இருவர்க்கும் நீதிவழுவா ஒழுக் கத்து நிறைபூசனைகளை முறையாகச் செய்தார். கறி யும் போனகமும் சமைப்பித்து இயல்பின் விருந்தும் அளித்திட்டார். பரவையார் மாளிகை பணத்தில் குறைவின்றிப் பல்கியதால் சிறப்புக்கொன்றும் குறைந்திலது.

சேரர் பிரானுக்கும் ஆரூர் பிரானுக்கும் உணவு பரிமாறப்பட்ட விதத்தைச் சேக்கிழார், "பரிகலங்கள் ஏரின் விளங்கத் திருத்திக்கால் இரண்டில் படியா ஏற்றுதலும்," என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறியது இக்கால நாகரிகப்படி தேநீர் விருந்துகள் திருமாளிகைகளிலும் திகழ்பூங்காக்களிலும் நடக்கும் திறத்தை நினைப்பிப்பது போன்று உள்ளது.

மற்றுமொரு மாண்புடைய கருத்தையும் ஈண்டே உணர்வோமாக. இக்கால நாகரிகத்தில் சாதி, மத வேறுபாடு இன்றி உடன் உண்ணும் சிறப்பு (Inter dining) மிக்க சிறப்பெனக் கருதப்பட்டு வருகிறது. இது நம்முன்னோர்க்குப் புதுவதன்று; பழமையா னதே. ஈண்டு அரச குல அன்பராம் சேரரும், அந்தண குல அன்பராம் ஆரூரரும் ஒருங்கு இருந்து உணவு கொண்டதை உணர்க. முன்னர் அந்தண மரபின ரான அப்பூதி அடிகளாரும் வேளாளர் குல திலக ரான அப்பர் பெருமானும் ஒருங்கு அமர்ந்து உணவு கொண்டதையும் உளங்கொளல் வேண்டும். இந்

என்னும் ஒண்புகழுடையது. அதனைப் பூலோகச் சிவலோகம் என்று புலவர் கூறுவர். இதற்கு அண்மையதாக ஞாயிறு என்னும் ஒரு பதியுண்டு.

இப்பதியின்கண் வேளாண் குடியினர் பலர் வாழ்ந்துவந்தனர். அவருள் ஞாயிறு கிழார் என்னும் நல்லோர் ஒருவர் நலனுற வாழ்ந்துவந்தார். அன்னார் ஆற்றிய அருந்தவப் பயனால் அவர்க்கு ஓர் அருமை மகளார் பிறந்தனர். அம்மகளார் பெற்றோர் போற்ற வளர்மதிபோல் வளர்ந்து வருவாரானார். இறையன்பும் இம்மகளார்பால் இளமை முதலே வளரலாயிற்று. இம்மகளார் சங்கிலி என்னும் நன்னாமம் சூட்டி அழைக்கப்படலாயினர். சங்கிலி என்பது பிள்ளைத் திருநாமம் என்று பேச இயலாது. இஃது ஒரு புனை பெயராகவே இருத்தல் வேண்டும். இவ்வம்மையார் எதையும் ஐயம் திரிபற அறிந்து சங்கை இன்றி இருந்தகாரணம் பற்றிச் சங்கையிலி என்பது மருவிச் சங்கிலி யாயிற்றோ என்று நாம் யூகிக்க இடன் உண்டு. ஆதன் தந்தையார் என்பது எப்படி நாளடைவில் ஆந்தையார் என்று ஆயதோ, அதுபோலவே, இதுவும் ஆயிற்றோ என்று ஐயுறுதலின் யாதோர் இழுக்கும் இன்றெனஅறிக. இம்மகளாரை, "மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால் தலையாம் உணர்வு வந்தணையத் தாமே அறிந்த அறிவுடையார்" என்று சேக்கிழார் கூறுதலின், எல்லாம் அறிந்த காரணத்தால் ஐயம் இலராய் இருந்தனர் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாய் நிற்கும் என்க. ஆகவே, சங்கிலியார் என்னும் பெயர் இவர்க்குக் காரணக் குறி என்று கொள்ளலாம்.

இம்மகளார் தம்மையொத்த சிறுமகளிர் சில ருடன்கூடி வண்டல் பயின்றும், தண்டலை ஆடியும் இன்புடன் வளர்வாராயினர். சங்கிலியார் ஆடற் பருவமும் கடந்து மணப்பருவம் நண்ணினார். தம் மக ளாரது உடற்பொலிவைக் கண்ட இருமுது குரவர் உள்ளம் பூரித்தார். தண்ணிசை யாழும், தாழ்கடல் தரளமும் மண்ணிசை சாந்தமும், துய்ப்பார் அற்று வாளாயிருப்பின், அவற்றிற்கு யாது பயன்? இசைவல் லான் யாழினை மீட்டால் அன்றிப் பூண்பார் முத்தி னைப் பூண்டால் அன்றி, பூசுவார் சாந்தினைப் பூசினால் அன்றி, அவை பயனற்றுத் தம்பெருமையினை இழந்து நிற்கும் அன்றோ? ஆகவே, அவற்றை நல்முறையில் பயன் படுத்துவோர்க்குப் பயன்படுத்துதல் அறிவு டைமை ஆதல்போலப் பருவமங்கையரைக் கடிமணம் புரிந்து கவினுறக் காண்டலே சீரிய முறையெனச் சிந்தித்த ஞாயிறுகிழார் தம் மனத்துக்கினிய மனைவி யாரை நோக்கி,

பலவுறு நறுஞ்சாந்தும் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே.
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே.
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்.
சூழுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே.

"ஆதலின், நம் குலக் கொழுந்தாகும் திருமக ளார்க்குத் திருமணம் முடித்தல் வேண்டாவோ?" என்று அறிவித்தார். இதனைக்கேட்ட அவர் மனைவி

யார் கணவனுர் கருத்துக்குக் கடுகும் தவருத் தக வுடையார் ஆதலின், அவ்வாறே மணம் முடித்தற்கு ஆவன செய்யுமாறு அகங்குளிரக் கூறினர்.

சங்கிலியார் பொருட்கேளும் பொலிவுக்கேளும் உடைய எவரையும் மணக்க இசையாராய், இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்து திருவருள்பெற்ற ஒருவனையே மணக்கும் கள்ளமற்ற உள்ளம் உடையராய் இருந்தனர். பெற்ருேர் பேசியதை உடன் இருந்து கேட்டதும், "என் வினையுமோ ? என் எண்ணத்தில் இடி விழுமோ ?" என்று ஏக்கம் கொண்டவராய் உணர்வு மயங்கித் தரைமேல் சாய்ந்தார். அருமை மகளார் அவனியில் விழுந்து அயர்ந்ததைக்கண்ட அம்மை அப்பர் உளம் பதைத்துப் பரிந்தெடுத்துச் சீத விரைப் பனிநீர் தெளித்துத் தைவந்து சீதளோப சாரம் செய்தமைத்தார். சங்கிலியார் சிறிது மயக்கந் தீர்ந்து தெளிந்தபோது, "அழகுக் கொழுந்தென அம ரும் மகளே ! உனக்கு உற்றது யாது ?" என்று உருக்க மாய் வினவினர்.

சங்கிலியார் உள்ளதை உள்ளவாறு உரைக்க லுற்ருர். மந்தணமாக எதையும் மறைத்து வைத் திலர். "தந்தையீர் ! தாயீர் ! நீர் என் கடிமணம் குறித்துப் பேசிய அனைத்தும் காதுறக் கேட்டனன் யான். இம்மை இன்பத்துக்கு மட்டும் என்னை இன் மணம் கொள்ளும் நன்மகன் ஒருவனை நாட விரும் பாது, அம்மை இன்பத்திற்கும் அடியினைக் கோலும் ஆண்டவன் அருள்பெற்ற ஆண்தகை ஒருவனையே அன்புடன் மணக்க அவாவுகின்றேன். ஆதலின், யான் விழையும் வேளினை வேட்டருள் செய்ய என்னைப் பணிப்பீராக. அதன்பொருட்டு யான் ஒற்றியூர்

அப்பன் திருத்தளியடைந்து வரங்கிடப்பேன். அதற்கு வாய்ப்புத் தருவீராக" என்று தாழ்ந்து பணிந்து புகன்றனர்.

கன்னிப் பெண் இவ்வாறு கழறுவதைக்கேட்ட ஈன்றவர், அயர்வும் அச்சமும் அற்புதமும் எய்தினர். இன்பம் துய்க்கும் இளமையில் இறையருள் நாடும் தன்மைகண்டு வியப்பும், கன்னிப்பருவம் வாய்க்கப் பெற்ற காரிகையாளைத் தனித்து ஒற்றியூர்க் கோயி லில் விட்டுவைத்தல் யாங்ஙனம் இயலும் என்பதனால் அச்சமும், தம் திருமகளார் விரும்பும் வண்ணம் அம் மணாளன் வாய்க்கப் பெறுவானோ? வாயாது அமை வானோ? என்னும் எண்ணத்தால் அயர்வும் கொண் டனர். தம்மகளார் மாற்றத்தை மறைத்து ஒழுகினர். அவனி அறிய அறைந்திலர். இம்மூவர்க்கிடையே இச்செய்தி அம்பலாக இருந்ததே அன்றி, அலராக அலர்ந்திலது.

இந்நிலையில் ஞாயிறுகிழார் ஞாதியரில் ஒருவன் தனக்குச் சங்கிலியாரை எவ்வாறேனும் மணம் முடிக்க முதியோர் சிலரை விடுத்தனன். வந்தவர் தம் கருத்துக்கூற, ஞாயிறுகிழார் அவர்கட்கு உண்மை யாதும் உரையாது, அவர்கள் முகக் குறிகொண்டு முன்னத்தின் உணர ஏதம் எய்தா வகை மொழிந்து வழிகூட்டியனுப்பினர். **ஏதம் எய்தா வகை மொழிந்து** என்பதனால் ஞாயிறுகிழார் சொல்வன்மை படைத்த தூயர் என்பதும், இன்சொல் வழங்கும் இதயம் உடை யவர் என்பதும் அறியக்கிடக்கின்றன. மேலும், அன் னார், "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச்சொல்" என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் இலகினார் என்பதும் பெற்றாம்.

மேலும் 'இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ வன்சொல் வழங்கு வது?' என்பதை மேற் கொண்ட வாய்மையர் என்பதும் அறிந்தாம்.

சங்கிலியார் எண்ணம் ஈடேறவோ, அன்றி யாது காரணந் தன்னாலோ, மகட்பேச விடுத்த மண வாளன் சின்னாட்கட்கெல்லாம் மண்ணுடுவிட்டு விண் ணுடு உற்றான். இவனது மறைவுகேட்ட மாதராரைப் பெற்றவர் மனம் மருண்டார். தம் மகளார் இறை யருள் பெற்றவனை மணக்க இருக்கையில் அதுபெறாத இவன் விரும்பியதால் போலும் இறக்க நேர்ந்தது என்று காகதாலிய நியாயத்தால் கருதி இனி ஆவன செய்வதற்கு முனைந்து நின்றனர். ஞாயிறுகிழார் இனியும் தம் திருமகள் எண்ணத்தை எவர்க்கும் உரையாது வாளா இருப்பின், இதுபோல் இன்னம் பல ஏதம் நிகழும் என்று நினைத்தவராய்ச் சாதியருள் சிறந்தார் சிலர்க்குச் செப்பினார்; நங்கை செயலே உடன்பட ஒருப்பட்டார்.

திரு ஒற்றியூரில் சிறந்ததோர் மாடம் சமைத்தார். அம்மாடத்தில் மகளாரை அமர்த்தி 'இனி நீ ஈண்டு விழைந்தவாறே தியாகனை வேண்டித் தியானம் புரி வாய்' என்று வேண்டுவ செய்து விடைகொண்டு போனார். அது கன்னி மாடமாய்க் கவினுடன் திகழ்ந் தது. இவ்வம்மையாருடன் சில கன்னியரும் உறு துணையாக உற்றனர். இக்காலத்து நாம் காணும் மேனாட்டுக் கன்னிமாடமுறை இருபதாம் நூற்றாண்டு எழுந்த புதுமுறையன்று. இஃது ஒன்பதாம் நூற் றாண்டு முன்பிருந்தே வந்த தமிழ்நாட்டு முறையாகும் என்பதைச் சேக்கிழார் உணர்த்த உணர்ந்த நாம் எத் துணை இன்பங்கொள்ளவேண்டும்? ஓர்மின்!

சங்கிலியார் கன்னி மாடத்துத் தம் கடமைகளைச் செய்துவந்தனர். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அப்பர் பெருமான் அருள்வாக்கிற்கிணங்க அரனார் தமக்கு அலர்மாலை தொடுக்கும் அருந்தொண்டில் ஈடுபட்டார். பூதநாதர் பொற்கோயில் காலந்தோறும் புக்கிறைஞ்சினார். அம்மையார் கன்னியார் ஆதலின், ஆலயத்துள் எழினி வீழ்த்துத் தம்மை மறைத்து இண்டை கட்டி இன்புறுகையில், இறைவனார் ஆவணத்தால் அடிமைகொண்ட ஆரூரர் அரனை வணங்க ஆங்குற்றார்.

திரு ஒற்றியூரில் அன்பர் பலர், நல்ல நந்தன வனப்பணி செய்பவராய், நறுந்துணர் மலர் கொய்பவராய், நல்பணித்தொடை புனைபவராய், திருமஞ்சனப் பணிக்குள்ளோராய், அல்லு நண்பகலுந்திரு அலகிட்டுத் திருமெழுகமைப்போராய், எல்லையில் விளக்கெரிப்பவராய், திருமுறை எழுதுவோராய், வாசிப்போராய் ஈடுபட்டுத் துலங்குபவர்களை எல்லாம் வனப்பகையப்பர் கண்டு கண்டு கைதொழுது சென்றனர். அப்படிச் செல்பவர் திரை மறைவில் நறைமலர் தொடுக்கும் மண்டபத்தும் பார்வையிட்டார். தம்பிரான் தோழர் அம்மண்டபத்தை அடைந்த நிலையை ஆசிரியர் சேக்கிழார், 'புண்டரீகத் தடநிகர் பூந் திருமண்டபத் தினுட் புகுந்தார்.' எனப் புகன்றார். இவ்வுவமையால் அதனுள் இருக்கும் அவ்வம்மையார் அழகினை விளக்கியதாயிற்று. மண்டபம் தாமரைத் தடமானால், அதில் இருப்பவர் திருமடந்தை என்பது தெரிகிறதன்றோ! ஆகவே, சங்கிலியார் பொங்கிய பேர் அழகுமிகு புண்டரீகத் திருவாவர் என்பது தானே போதருகின்றது? சங்கிலியாராம் அழகின்

கொழுந்துபோய் அமர்ந்து, அன்பு நாராக அஞ் செழுத்து நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்திருப் பதை அகங்குளிர அம்பகம் குளிர ஆரூரர் கண்ணுற் றார்; புறம்போந்தார்; மருங்கு நின்றாரை, "என் உள் ளம் திரித்த இவ்வொள்ளிழை யாரோ?" என்று உசாவினர். அம்மையார் அழகு ஆரூரார் உள்ளத் தைக் கொள்ளை கொண்டதில் குற்றம் இல்லை. அழகுத் திருவைக் கண்டார் அகல்வார் யாரே?

அருகு நின்றவர் அன்பருக்கு அறிந்த வண்ணம் அறைவார் ஆயினர். 'ஐய! அவர்தாம் நங்கை சங்கிலியார் என்னும் நன்னுமம் பெற்றவர். பெருகு தவத்தால் ஈசர் பணி பேணும் கன்னியார்' என்றனர். ஈண்டுக் கவியின் கூற்றைச் சிறிது கவனிப்போமாக. **ஈசர் பணி பேணும் கன்னியார்** என்று வாளா கூருது, **பெருகு தவத்தால்** என்று அடை கொடுத்துப் பேசியதே நம் கருத்தை ஈர்ப்பதாகும். ஈண்டு வள்ளு வர் கருத்தையும் வாதவூரர் கருத்தையும் மனத்துக் கொண்டே இவ்வடை கொடுத்து ஆசிரியர் பேசினர் என்று பேசலாம். பொய்யா மொழியார், 'தவமும் தவமுடையார்க் காகும்' என்றனர்; வாதவூரர் 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்றனர். இவ் வாறு கூறுவதால் ஈசர் பணி இயற்றுதற்கும் இறை வன் அருள் என்னும் தவம் வேண்டற்பாலது என்னும் கருத்தே சேக்கிழார் கருத்தும் ஆகும் என்க.

நம்பியாரூரர், "இவள் தன்னைப் பொன்னார் இதழி முடியார்பால் இரந்து பெறுவேன்" என்று திடங் கொண்டார். சேரே ஒற்றியப்பர் திருமுன் நின்றார். கங் கையையும் மலை மங்கையையும் மணந்த மாதேவா! இங்கு உனக்குத் திருமாலை தொடுத்துத் திருத்

தொண்டு புரியும் திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும்'' என்று இரந்து நின்றார். ஈண்டு ஓர் அரிய குறிப்பினையும் உணர்தல் வேண்டும்.

சைவ சமயக் குரவர் நால்வரும் ஒவ்வொரு துறையில் பாடல் பாடும் பேறுபெற்றவர். வாதவூரர் பாடல் கனிவுடையது. தாக்கிப் பாடுதலில் சிரபுரக் கோனார் சிறந்தவர். சொல்லுக்குறுதியாய்ச் சொல்லலில் வல்லவர் சொற்கோச் சீரியர். நயமுறப் பாடுதலில் நம்பியாரூரர் நனிமிகப் பிரியர். "நயத்துக்குச் சுந்தரனார்" என்றே நானிலம் புகழும். இதனைச் சுந்தரது தேனினும் இனிய திருப்பாடல்களில் திகழக் காணலாம். ஈண்டு இறைவன்பால் இவர் வேண்டி நிற்கையில், எவ்வாறு இறைவனை விளித்துக் குறை இரக்கின்றார் என்பதிலிருந்தும் இதனை அறியலாம்.

நம்பி ஆரூரர், "மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணி நீள் முடியின்கண், கங்கை தன்னைக் கரந்தருளும் காதலுடையீர்!" என்று விளக்கின்றார். இவ்வாறு விளித்ததன் நோக்கம் யாது? அது," நீர் மலையரையன் மடப்பாவையை மணந்ததோடு நில்லாது, கங்கை தன்னையும் மணந்து வாழும் விருப்பம்கொண்டு இருத்தீர் ஆதலின், யான் பரவை என்னும் பாவையை மணந்திருக்க, ஈண்டுச் சங்கிலியாரையும் கடிமணம் புரியவேண்டி நிற்றலின், என் அவாவினையும் முடித்து வைப்பீர்' என்ற உட்பொருளை உணர்த்தற்கு என்பது அன்றோ?

ஈண்டு நாம் நம் அறிவினை நன்கு துலக்கமுற வைத்து உணரத்தக்கவை பல உள. மேல் போக்கில், "இறைவர் இருமனைவியருடன் வாழ்வது தகுமோ என்றும்," அவர் அங்ஙனம் வாழ்ந்தாலும், அன்பர்

களும் அவ்வாறு வாழ விரும்பல் அடுக்குமோ ?" என்றும் கேட்டல் கூடாது. இறைவர்க்கு மனைவி எவரும் இலர். ஆனால், அவர் மனைவி மக்களுடன் வாழ்வது போலத் திருக்கோயில்களில் உருவங்கள் விளங்குகின்றனவே எனில், அவை உபசாரங்களே அன்றி உண்மை அல்ல. அவர் மனைவியாகக் கொண்டது **திருவருளையே** அன்றி வேறன்று. இதனை, " **அருளது சத்தியாகும்** அரன்தனக்கு" என்னும் சாத்திரத்தாலும்,

'மேனாள் அகிலம் தரமெல் வியலா
ஆன அருள்தன் னைஅளித் தொருபால்
தானா கஇருத் தியதற் பரன்'

என்று கூறப்படும் தக்கோர் மொழியாலும் தெளிதல் வேண்டும் ?

நம்பியாரூரர் இரு மாதரை மணந்ததற்கும் காரணம் உண்டு அதுவே முன்னைய வினையினை முடிக்க வேண்டியே அன்றி வேறன்று.

அற்றாயின், ஏன் மேலே காட்டியவாறு இறைவரைச் சுந்தரர் இவ்வாறு விளிக்கச் சேக்கிழார் செய்யுள் செய்தனர் எனில், கவிநயம் கருதியும், காவியச் சுவைகருதியும் பாடி அமைத்தார் என்று நாம் கருதுதல் வேண்டும்.

இறைவரும் அன்பர் குறை முடிக்கத் தூண்டு சோதி விளக்கனையார் தம்பால் கனவில் தோன்றி, சாரும் தவத்துச் சங்கிலி கேள்! நின்னைக் கண்ட ஆரூரன் சால என்பால் அன்புடையான். மேருவரையின் மேம்பட்ட தவத்தான்; வெண்ணெய் நல்லூரில் யாரும் அறியயான் ஆள உரியான். உன்னை அடைய என்னை இரந்தான். நீ அவனை மகிழ்ந்து மணத்தால்

அணைவாய்!" என்று கழறினர். சங்கிலியார் உள்ளக் கிடக்கை இன்னதென்பதை நன்கு உணர்ந்த இறைவர் ஆதலின், ஈசன் அருள் பெற்றவரை மணக்க இருக்கும் அம்மாதராருக்கு முன்னறிக்கையாகச் "சால என்பால் அன்புடையான்" என்று சாற்றினர். அவ் வம்மையார் பெருகு தவத்தால் ஈசர் பணி பேணும் கன்னியார் ஆதலின், அவரை விளிக்கும்போதும் விதி தவறாது, "சாரும் தவத்துச் சங்கிலி" என்றார். தவமுடையவர்தாம் தவமுடையாரைச் சார இயலும். ஏனையர் சார எண்ணுதல் அவமே ஆகும் என்பதை அறிவிப்பார்போல் "மேருவரையின் மேம்பட்ட தவத்தான்" என்று மேன்மை தோன்றப் பேசினர். தன்பால் அன்பே அன்றி அடிமையும் உடையவன் என்பதை அறிவிக்கவே, "யாரும் அறிய யான் ஆள உரியன்." என்று உரைத்திட்டார். அவனே உன்பால் ஆசை கொண்டு மணக்க மனங்கொண்டான் ஆதலின். நீ அவனை மணத்தலில் மாசு இல்லை என்பார், "நீ அவனை மணத்தால் அணைவாய் மகிழ்ந்து" என்றும் மலர்வாய் திறந்து அறிவித்தார். இத்துணை நுண் பொருள்களும் அடங்கச் சேக்கிழார் உரைத்ததை நாம் உணர வேண்டாவோ?.

எம்பிரான் இசைத்த மாற்றம் ஏந்திழையார் செவிஏற்று, "எந்தையீர், நீரே சொல்லின் யான் எதிருரை இயம்பலாமோ? எனினும், என்னை விரும்பும் எழிலுடையார் ஆரூரர் செல்லும் அவாவுடையார் ஆதலின், மணந்தபின் துணைந்து செல்லின் என் செய்வது?" என்று வினவினர். "அன்புடை அணங்கே, நீ அறைவது உண்மைதான். இதுவே ஏதுவாத் தடை செய ஒண்ணாது. நம் சுந்தரன் நின்னையும் நின் இடத்

தையும் தணவா வ்கைக்கு ஒரு சபதம் செய்யச் செய்வோம்'' என்று சாற்றி, தாய்முகங் காணச் சேய் நிற்பதுபோல் இருந்த சுந்தரர் இடம்போந்து நடந்த வண்ணம் நவின்றனர்.

இறைவர் கூறிய மொழிகேட்ட இன்தமிழ் ஆளியார் சிறிது இடர் உற்றனர். கோயில் பல சென்று கும்பிடு கடனுடையார்க்கு இச்செயல் பெருந்தடையாமே என்று எண்ணினூர். பின்பு ஒருவாறு மனந் தேறிச் சங்கரர் தாள் பணிந்து இரந்து, மங்கையவள் சபதம் செய்ய வந்தக்கால் திருக்கோயிலில் இல்லாமல் திருமகிழின் கீழ் இருக்குமாறு வேண்டினூர். அன்பு வேண்டும் அரனூரும் அவ்வாறே செய்ய இசைந்தார்.

ஈண்டுச் சில தடைகள் எழ ஏது உண்டு. இறைவர் இயல்பு பார்க்கும் இடம் எங்கும் ஒருநீக்க மற நிறைந்த பரிபூரணுனந்தமாகும். அங்கு இங்கு எனுத படி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாய் அருளொடு நிறைந்தது. அத்தகைய பொருள் கோயிலில் தான் உண்டு. மரத்தின்கீழ் இராது என்று யாங்ஙனம் எண்ணுவது? அவ்வாறு எண்ணின் இறைவனது இறைமைப் பண்பிற்கு இழுக்கு நேரும் அன்றே? இதனை உறழ்ந்த கல்வியுடையராம் நம்பிஆரூரர் எண்ணிலரோ? எண்ணி இருப்பின், இறைவரை, “நீர் மகிழ்க் கீழ் இரும்'' என்று வேண்டுவரோ எனில், அவர் அங்ஙனம் கூறியதில் குற்றம் இல்லை. இறைவனது எங்கும் நிறைந்த தன்மையைச் சிலரே அறிவர். பலரும் பரமன் திருக்கோயிலில் இருப்பவனென்றே பகர்வர். இறைவர் எங்கும் இருப்பவர் என்பதை உணர்வரேல் மக்கள் கும்பிடும் கொள்கையைச் செல்லாறுதோறும் செய்தல் வேண்டும். அவ்வாறின்றிக்

கோயிலைக் கண்டபோதுதான் கும்பிடும் கொள்கை தோன்றக் கும்பிடுகின்றனர். தம்மையும் மறந்து தம் கைகளைத் தலைமேல் தூக்குகின்றனர். இஃது உலகியற்கை. ஆகவேதான் நாவலூர் நாதனார் இவற்றை உட்கொண்டு தம் நாதனாரைக் கோயிலில் இராது மகிழ்க்கீழ் இருக்கும் வண்ணம் வேண்டினார் என்க.

இறைவர் மகிழ்க்கீழ் இருக்க உடன்பட்டதையும், சங்கிலியாரிடம் சென்று சாற்றிவிட்டனர். இறைவர் இன்னணம் செய்தது முறையோ என்னில், முறைதான். அவர் வஞ்சகம் அற்ற நெஞ்சினர். தம் உரை கேட்டு மணக்க இருக்கும் அம்மாதரசியார்க்குத் தம்மால் கவலை நேராது இருக்கவே இவ்வாறு கூறினர். ஆனால், சேக்கிழார் பெருமான் இச்சிக்கலில் அகப்பட எண்ணாராய், "சுந்தரர்பால் திருவிளையாடல் புரிந்தருள எண்ணியோ? அன்றிச் சங்கிலியார் வழியடிமையின் பெருமை அறிந்து செய்ததேயோ? யாம் அறியோம்" என்று பாடி அறிவித்துள்ளார்.

பொழுது புலர்ந்தது. புள் ஒலி செய்தது. வன்தொண்டர் வனிதையின் வரவு நோக்கி நின்றிருந்தார். சேய் இழையார் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் தூய பணி புரியத் திருக்கோயில் சென்று புக்கார். ஆரூரர் அன்னாரை அண்மி "இவணின்று யான் பிரியாமைக்கு இசையும்படி இயம்பத் திங்கள் முடியார் திருமுன்போதுவீர்" என்றழைத்தார். சங்கிலியார் நாணம்மிக்கு, ஒதுங்கிப் பூ மண்டபத்துள் புகுந்தார். அம்மையார்க்கு அருகு இருந்த தாதியர், "இதற்காக இமையவர்கள் தம் பெருமான் முன் சாற்றுவது அடாது. மகிழ்க்கீழ்க் கூறுனாலும் அமையும்" என மொழிந்திட்டார். இசைஞானி மகனாரும்

மற்றதனுக்கு இசைந்திட்டார். மறுமாற்றம் உரைத்திலர். யாவரும் சென்று மகிலமழ அணமினர். முனைப் பாடிப் புரவலனார் முக்காலும் வலம் வந்தார். இங்கு யான் அகலேன்' என்றும் அறைந்திட்டார்.

சேக்கிழார் நூல் ஓர் உண்மை வரலாற்று நூல் ஆதலின், அதனில் கூறப்பெறும் வரலாறுகட்கு அகத்தும் புறத்தும் சான்றுகள் அனந்தம் உண்டு. சுந்தரர் பெருமானே தம் திரு வாயால் தேவாரத்தில் திரு ஒற்றியூரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் மொழிகின்றார்.

பொன்னவிலும் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இருஎன்று
சொன்ன எனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே!

என்பது அகச்சான்று. சேக்கிழார் மொழிகள் புறச் சான்று.

சூளுக்குப் பின்னர்க் கடிமணம் நிகழ்ந்தது. மண மக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றிருந்தார். இன்பத் துறையினில் இறங்கினாரேனும், இருவரும் தம்பிரான் திருவடிகளில் உணர்வு இறையும் பிழையாராய் முப்போதும் போற்றிப் பூசனை புரிவார் ஆனார். இங்ஙனம் நாட்களும் திங்களும் பல நடந்தன.

ஈண்டு ஓர் இன்றியமையாக் குறிப்பினையும் குறிப்பிடுவது தக்கதாகும். பெரிய புராணம் வெறும் புராணம் அன்று. அது ஓர் ஒப்புயர்வற்ற வரலாற்று நூல். சீர்த்திருத்தக் கருத்துக்கள் பல தன்னகத்தே கொண்டது. இந்நூலால் கலப்பு மணம் (Inter-Marriage) புரிந்துவந்த வரலாற்றையும் உணரலாம். நம்பியாரூரர் மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்

வேதியர் குலத்தவர். இத்தகைய இவர், உருத்திர கணிகையர் குடியினரான பரவையாரையும், வேளாளர் மரபினரான சங்கிலியாரையும் மணந்தார். இதனினும் வேறு சான்று கலப்பு மணத்திற்கு வேண்டற்பாலதோ ? உரைமின். இது நிற்க.

ஆரூரனூர்க்குத் திருவாரூரன் அணிக்கோலங் காண அவா எழுந்தது. "ஏழிசையாய் இசைப் பயனாய் என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி மாழை ஒண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியிலா ஏழையேன் எத்தனைநாள் பிரிந்திருக்கேன். என் ஆரூரர் இறைவனையே" என்று நினைந்து நினைந்து ஏங்கினார். இவ்வேக்கம் சூளையும் மறக்கச் கசந்தது. ஆரூர் செல்லவே துணிவு தந்தது.

ஆகவே, ஆரூரர் ஒற்றியூர் எல்லையை ஒருவவே உளங்கொண்டார். எழுத்தறியும்பெருமானைப் போற்றிசைத்துப் புறம்பட்டார். சூளினைத் தவறிய காரணத்தால் அவர் பட்டகட்டம் பலவாகும். பின்னர்ப் பரமனையே வேண்டி அக்கட்டங்களினின்றும் விடுபட்டு இன்புற்றார். அவற்றை எல்லாம் ஈண்டுக் கூற இடம் இன்றாதலின், இயம்பாது விடுத்தனன். வேண்டுவார் மூல நூலில் முழுதும் காண்க.

சங்கிலியார் கண்ணிழந்தாள் பெற்றிழந்தாள் என்னக் கலக்கமுற்றார். முன்னை வினையின் முடிவு போலும் என்று புந்தியில் கொண்டு முன்போலத் திருத்தொண்டின் நெறியின் வழாத நிலையினராய்க் குலவினார்.

# 12. வனிதையர் வயங்கிய காலம்

இதுகாறும் கூறப்பட்ட ஏந்திழைமார்கள் புராண காலத்துப் பூவையர்கள் போலும் என்று புகலத்தக்கவர் அல்லர். தண்டமிழ் நாட்டுத் தனிப் பெருங்குடி மக்களே ஆவர். இவர்கள் வாழ்ந்த காலம் வரலாற்று நூல்கட்கு உட்பட்டு உணரவல்லதாக உள் ளதே அன்றி, வரலாற்று நூல்கட்கு அப்பாற்பட்ட தன்று. இனி இங்கு, விதந்து ஓதப்பட்ட ஒண்டொடி மார்கள் எவ்வெக் காலங்களில் இலங்கியவர்கள் என் பதை இனிதின் உணர்வோமாக.

அழகைத் துறந்த அணங்காம் புனிதவதியார் என்னும் காரைக்காற் பேயார் ஆளுடைய அரசர், ஆளுடைய பிள்ளையார் ஆகிய இருவர்கட்கும் முற் பட்டவர் என்பதைத் தொண்டர் சீர்பரவுவார் தம் தொண்டர் புராண வாயிலாகத் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார். ஞானபோனகர் தமது தலயாத்திரை யின்போது, தொண்டை நாட்டைத் தொழுது கொண்டு வருகையில், திருவாலங்காட்டிற்குச் சென்று அண்டமுற நிமிர்ந்தாடும் ஆலங்காடனை வழுத்த அப்பதி நோக்கி வந்தனர். அப்பதி அம்மை யாம் காரைக்காற் பேயார் தம் கால்கொடு நடவாது தலைகொடு நடந்து சென்று போற்றப்பட்டதாக அறிந்து, அப்பதியைத் தாம் காலால் மிதிக்க அஞ்சிப் பக்கத்தில் இருந்த ஒரு சிற்றூரின்கண் தங்கினர். இந் நிகழ்ச்சிகளைக் கவிஞர் பெருமான் சேக்கிழார் குறிப் பிடுகையில்,

இம்மையிலே புவியுள்ளோர் எவருங் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை யாளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடாம் என்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பைவருஞ் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அன்றிரவு பள்ளி சேர்ந்தார்.

என்று பாடி விளக்கினர்.

இன்னணம் தோணிபுரத் தோன்றலார் செழும் பதியில் தங்கி அன்றைய இராப்போது உறங்குங் காலத்தில், அவ்வுறக்கத்தின்கண் உமையொரு பாகனார் எழுந்தருளி, "நம்மை அயர்ந்தனையோ பாடுதற்கு?" என்று நினைவுறுத்தித் தூண்டுவாராயினர். இவ்வண்ணம் இறைவனார் தம் கனவிடைப் போந்து நினைவு படுத்தினமையை உணர்ந்ததும், சம்பந்தர் நெஞ்சம் துணுக்குற்றுத் தாண்டவப் பெருமானார் தடங்கருணைப் பெருந் திறத்தினைப் போற்றித் திருப்பதிகம் பாடலானார். அப்பதிகமே,

" துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங் காட்டெம் அடிகளே.

என்பது. இதில் 'நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும்" என்று குறிப்பிடப்பட்டது, ஆலங்காட்டப்பர் ஆளுடைப் பிள்ளையாரின் கனவில் கூறிய, "நம்மை அயர்ந்தனையோ பாடுதற்கு?" என்பதைத் தெற்றென வெளிப்படுத்துவதாகும். இத்தேவாரப் பாட்டின் பொருளை நன்கு உணர்ந்தே தொண்டர் சீர்பரவுவாராம் தொல்லாசிரியர், சீர்காழிச் செம்மல் திருவாலங்

காட்டுக்கு எழுந்தருளிய விதத்தின் சிறப்பியல்பினைத் திறம்பட இயம்பலானார். இக் குறிப்பினின்று பாலருவாயர் பரமனார் பதியாம் திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சிக் கோயில்புகாது அயலே தங்கியதற்கு அம்மையார் சென்னியால் நடந்த பதி என்பதே காரணம் என்பது புலனாகிறது. இதனால் புனிதவதியாராம் காரைக்கால் அம்மையார் தமிழ் விரகராம் திருஞான சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது ஐயம் திரிபற அறியக்கிடக்கின்றது.

திருஞான சம்பந்தர் வரலாற்றிலும் திருநாவுக்கரசர் வரலாற்றிலும் இருவரும் பற்பல பதிகட்குத் தலையாத்திரை செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தாண்டக வேந்தர் தழைத்த காலம் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனாகிய குணபரன் இருந்த காலமாகும். அதாவது கி. பி. 600 முதல் 630 என்பது கல்வெட்டால் காணக்கிடைக்கும் வரலாற்றுக் குறிப்பாகும். மேலும், தோணிபுரத் தோன்றல் சிறுத்தொண்ட நாயனாரால் வரவேற்கப்பட்டு நன்முறையில் உபசரிக்கப்பட்டார் என்பது ஞானபோனகம் உண்டார் வரலாற்றிலும், சிறுத்தொண்டர் வரலாற்றிலும் சேக்கிழார் பெருமான் செம்மையுறச் செப்பியுள்ளார். கௌணியர் கோனும் தம்மை அழைத்துத் தலையன்பு காட்டிய சிறுத்தொண்டரது அன்பின் திறத்தைப் பாராட்டித் தம் திருச்செங்காட்டுத் திருப்பதிகத்தில்;

> "பைங்கோட்டு மலர்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
> சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
> **செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய**
> வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

என்று பாடியுள்ளார்.

சிறுத்தொண்டரது இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. இவர் முதலாம் நரசிம்மவர்ம பல்லவ மன்னனிடம் தானைத் தலைவராய்த் திகழ்ந்தவர். இவர் தம் மன்னன் பொருட்டுச் சாளுக்கிய மரபு மன்னனை இரண்டாம் புலிக்கேசியை வெல்ல, வாதாபி நகர்க்குப் படை எடுத்துச் சென்று வெற்றி கொண்டதைச் சரித்திரம் சாற்றுகின்றது. இக்குறிப்பினை வாதாபி நகர்க்கண் உள்ள கல்வெட்டுக்களும் கழறிக் கொண்டிருக்கின்றன. இவ்வெற்றி பல்லவனுடைய வெற்றியாதலின், அன்னன்புகழை அறிவிக்கும் கல் வெட்டுக்களும் களங்கமின்றிக் கழறிக்கொண்டுள்ளன. இரண்டாம் புலிகேசி வயங்கிய காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்பது வரலாற்று முறையில் காணப்படும் வாய்மையாகும். இவ்விரு வரலாற்றுக் குறிப்புக்களினால் தாண்டக வேந்தரும் சிறுத்தொண்டரும் தழைத்த காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பது வெள்ளிடை மலையென விளங்காநிற்கிறது. இவ்விரு பெரியார்களுடன் தொடர்பு கொண்ட தண்டமிழ் விரகராம் திருஞான சம்பந்தர் நிலவிய காலமும் கி. பி. ஏழாம் நூற்றாண்டு என்பதில் எள்ளளவும் ஐயமின்று. ஆகவே, அழகைத் துறந்த அணங்காம் புனிதவதியார் காலம் பாலறுவாயரது காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது அங்கையில் நெல்லிக்கனியென அறியக்கிடக்கிறது.

மேலும், காரைக்கால் அம்மையார் திருவாய் மலர்ந்த திருப்பாடல்களாக உள்ளவை, அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணி மாலை, மூத்த திருப்பதிகம் என்பன. திருப்பதிகம் என்னும் திருப்பெயர் மூவர் முதலிகள் மொழிந்த திருப்பாடற்கு உரிய பெயராக

வழங்கப்பட்டுவந்துள்ளது. அங்ஙனம் இருக்க, அம்மையார் பாடிய பாடல்களில் ஒன்று மூத்த திருப்பதிகம் எனச் சுட்டிக் காட்டப்படுவதன் குறிப்பு, அஃது அம்மூவர் பதிகங்கட்குமுன் தோன்றினமையைப் புலப்படுத்தற்கே என்பது உறுதியாகின்றது.

**உள்ளத் துறவுடைய உத்தமியாம் திலகவதியார்** திகழ்ந்த காலத்தைப் பற்றித் தீர ஆராயவேண்டுவதில்லை. திலகவதியார் திருநாவுக்கரசருடைய தமக்கையாராதலின், அவ்வம்மையார் காலம் திருநாவுக்கரசர் திகழ்ந்த காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றுண்டே என்பது முடிந்த முடிபாகும்.

**கொண்கனுர்க்கேற்ற கோதையாராம் அப்பூதி அடிகளாருடைய வாழ்க்கைத் துணைவியார் வாழ்ந்த** காலமும் கி.பி. ஏழாம் நூற்றுண்டே என்க. காரணம் அப்பூதியார் அப்பர் பெருமானைத் தம் அகத்துப் பூசித்துப் பேறு பெற்றமை அவர் வரலாறு கூறுவதினின்று அறிவதே ஆகும்.

**கணவனுர் விரதம் காத்த காரிகையாம் சிறுத்தொண்டரின் இல்லக்கிழத்தியாரும், தென்னர் குல பழிதீர்த்த தெய்வப் பாவையாம் மங்கையர்க்கரசியாரும்** மாண்புறத் திகழ்ந்த காலமும் கி. பி. ஏழாம் நூற்றுண்டே என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். எங்ஙனம் எனில், கி. பி. ஏழாம் நூற்றுண்டில் இலகிய திருஞான சம்பந்தரை அன்புடன் சிறுத்தொண்டர் அழைத்து உபசரித்தார் என்பதாலும், மங்கையர்க்கரசியார் புகலிவேந்தரைத் தம் கணவனுர் காய்ச்சல் நீங்கத் தம் அரண்மனைக்கு அழைத்தருளியுள்ளார் என்பதாலும், நன்கு புலனுகின்றது என்க.

தாலியை ஈந்த தையலாம் குங்கிலியக் கலய நாயனாரின் மனைவியார் வாழ்ந்த காலமும் இவ்வேழாம் நூற்றாண்டே என்க. இதற்குக் காரணம், ஏழாம் நூற்றாண்டில் திகழ்ந்த அப்பர் பெருமானார், குங்கிலியக்கலயனார் திருமடத்தில் அவருடன் உணவு உண்டதாகத் திருநாவுக்கரசர் வரலாற்றில் குறிப்புக் காணப்படுவதே என்க.

கணவரைத் திருத்திய காரிகையாம் திருநீலகண்டரது திருமா பத்தினியாரும், முனிவர் பின் சென்ற மூதறிவாட்டியாம் இயற்பகையாரின் இல்லக் கிழத்தியாரும், உத்தி கூறிய உத்தமியாகிய இளையான் குடி மாறரின் இன்னுயிர் மனைவியாரும், வாழ்ந்த காலம் இன்னதெனவரையறுத்துக் கூற இயலாமற்போயினும், இம்மாதரசியர் மாண்புடன் வயங்கிய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதெனக் குறிப்பிட்டோமானால், தவறொன்றும் ஏற்படாது. ஆனால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்று கூறிவிட இயலாது. எற்றுக்கோ எனில், திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் தாம் தாம் பாடிய திருப்பதிகங்களில், சிற்சில அடியார்களைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அப்படிப் பாடப்பட்ட பெரியவர்களுக்குள் திருநீலகண்டரும் இயற்பகையாரும், இளையான்குடி மாறரும், குறிப்பிடப்பட்டிலர். வரலாற்று நுட்பத்தினை நுணுகிக் கூறிக்கொண்டே வரும் சேக்கிழார் பெருமானும் இக் குறிப்பினைக் கூறிற்றிலர். ஆனால், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் திகழ்ந்தவரான ஆளுடைய நம்பிகளான சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆதலின், அப்பெரியார்கட்கு வாழ்க்கைப்பட்ட அம்மைமார்கள் இருந்த காலத்தைக் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னும் அமைந்த இடைப்பட்ட காலம் என்று ஒருவாறு கூறலாம்.

மனையை மங்கலம் ஆக்கிய மடந்தையாம் ஏயர்கோனாரின் ஏந்திழையாரும், நம்பிக்குகந்த நங்கைமார்களான பரவையாரும் சங்கிலியாரும் சிறப்புடன் திகழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டே என்பதில் எள்ளளவும் ஐயமில்லா மெய்வரலாறாகும். எவ்வாறெனில், பரவையாரும், சங்கிலியாரும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டினரான நம்பியாரூரர்க்கு வாழ்க்கைப்பட்ட வனிதையர்கள் என்பதனாலும், ஏயர் கோனாரின் ஏந்திழையாரைக் காணும் வாய்ப்பு நாவலூர் நம்பிக்கு வாய்த்ததாக, ஏயர் கோனார் வரலாறு இயம்புதலானும் என்க.

இனி, நம்பியாரூரர் இருந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டே என்பதை நிறுவுதல்வேண்டும். முனைப்பாடி நாதனார் தம் திருப்பதிகங்களில், பல்வேறு இடங்களில், சொல்வேந்தரையும், தோணிபுரத் தோன்றலாரையும் சுட்டிச்சுட்டிப் போற்றிப் போற்றிப் பாடிப் புகழ்ந்துள்ளார். அவ்விருவர் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பது முன்பு தக்க அகச்சான்று புறச்சான்றுகளுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், சுந்தரர் இலங்கிய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பதில் ஆசங்கை இல்லை. பின், பரவை கேள்வர் திகழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்பதனை எங்ஙனம் பெற்றும் எனின், அதனையும் ஈண்டு உன்னி அறிவோமாக.

ஆளுடைய நம்பிகளாம் சுந்தரர் காலத்து அரசன் தந்திவர்ம பல்லவன் என்பது வரலாற்று நூலின் துணிபாகும். இவன் கி.பி. 780 முதல் 830ஆம் ஆண்டு வரையில் இலகியவேந்தனுவான். எனவே, இவனது காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு என்று கூறுவதில் இழுக்கொன்றும் ஏற்பட்டுவிடாது. தந்தி வர்மன் மகன் இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆவான். அவனையே சுந்தரர் 'காடவர்கோன் கழற்சிங்கன' என்று கூறுகிருர் என்ருலும், அவன் காலமும் 9ஆம் நூற்றுண்டே என்க. ஆகவே, இவன் காலத்தவரான சுந்தரர் காலமும் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு என்பது உறுதியாயிற்று.

இன்னமும் இக்கால நிலைகளை மற்றும் பல்லாற்ருனும் பல்வேருன சான்றுகளைக் காட்டி நிறுவ முயன்ருல், அது பரக்குமெனக்கருதி இந்த அளவில் இது சுருக்கப்பட்டது. இதன் விரிவை இன்னமும் விளக்கமுற அவாவுவோர் வரலாற்று நூற்களில் மேலும் பரக்கக் காண்பாராக.

தூக்குச் சீர்திருத் தொண்டத் தொகைவகை
வாக்கி னுல்சொல்ல வல்லபி ரான்எங்கள்
பாக்கி யப்பய னுய்ப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.

—சிவஞான முனிவர்.

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JUN 1957
MADRAS

# பிழையும் திருத்தமும்

3 - JUN 1957
MADRAS

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 27 | இவ்வம்மை | இவ்விம்மை |
| 4 | 29 | என்பதை சேக்கிழார் | என்பதைச் சேக்கிழார் |
| 13 | 1 | பங்கர் | பாங்கர் |
| 16 | 28 | மிக்கூர | மீக்கூர |
| 24 | 18 | அவற்றினின் | அவற்றின் |
| 37 | 17 | இறும்பூதுற்றுப் | இறும்பூதுற்று |
| 51 | 14 | பயன்வால் | பயனால் |
| 52 | 18 | அன்னாட்டு | அந்நாட்டு |
| 56 | 9 | சொற்றிரம் | சொற்றிறம் |
| 60 | 24 | சில்லேர் | சில்லோர் |
| 62 | 3 | டாங்குச் | டாங்கு |
| 72 | 24 | ஆடி | அடி |
| 88 | 10 | செவ்விதியின் | செவ்விதின் |
| 90 | 10 | குலானார் | குலாலனார் |
| 91 | 11 | என்றுக் | என்று |
| 95 | 2 | பாட்டைக் | பாட்டைத் |
| 95 | 23 | பெரியனாம் கம்ப்ரை | பெரியராம் கம்பர் |
| 97 | 13 | சேக்கையிற | சேக்கையில் |
| 98 | 5 | இரும்பூதெய்திய | இறும்பூதெய்திய |
| 99 | 17 | தன்பாய் | தன்பால் |
| 102 | 25 | கழறுவதிஙின்று | கழறுவதினின்று |
| 108 | 15 | கவரிமான் | கவரிமா |
| 108 | 28 | நீர் | நீ |
| 111 | 24 | உத்தம தொழில் | உத்தமத் தொழில் |
| 112 | 3 | கூரை | கூறை |
| 116 | 18 | கூறை | கூரை |
| 122 | 19 | நொய் | நோய் |
| 126 | 10 | அவ்விறைக்குதாமே | அவ்விறைக்குத்தாமே |
| 139 | 7 | சாலச் | சால |
| 149 | 18 | சாந்தும் | சாந்தம். |
| 149 | 23 | கனையாளே | கனையளே |
| 155 | 17 | விளக்கின்றார் | விளிக்கின்றார் |
| 156 | 11 | ஆன | ஆனா |